www.padippakam.com

# புதிய கலாச்சாரம்

ஜூலை – 2001
ம.க.இ.க மாத இதழ்
ரூ 5.00



உலகச் சந்தையில் விலைபோகிறார் தேசிய நாயகன்



ஆளுநரைத் திரும்பப் பெறுவது,
ஆட்சியைக் கலைப்பது
ஆகிய வழிமுறைகள் மூலம்,
தன்மீது ஏவப்பட்டிருக்கும்
அடக்குமுறைக்கு முடிவுகாண
கருணாநிதி முயற்சிக்கலாம்.

ஆனால் பொய்வழக்கு, போலீசு
அடக்குமுறைகளால் அன்றாடம்
பாதிக்கப்படும் உழைக்கும் மக்கள்
இதற்குத் தீர்வு காண்பதெப்படி?

கருணாநிதியின் கைது
நமக்களிக்கும் படிப்பினை என்ன?

# இருண்ட காலம்

## அத்தியாயம் - இரண்டு

படிப்பகம்

www.padippakam.com

# வாசகர் கடிதம்

✱ 'காணாமல் போகிறாள் பெண்' கட்டுரையின் புள்ளி விபரங்களைப் படித்ததும் மிக அதிர்ச்சியாக இருந்தது. சடங்கு, சம்பிரதாயம், வரதட்சணை அற்பக் கசடுகளில் பெண்ணினம் அழியுமென்றால், இதைத் தூக்கியெறியும் முற்போக்கு சிந்தனை பெண்களுக்கு உடனடி அவசியம்.

சமையலாள், உணவு, தண்ணீர் கூட தனியே இறைத்துக் குடிக்கும் அளவு ஏராளமான ஏற்பாடுகள் செய்து சீனாவுக்குச் செல்லும் காஞ்சி சங்கராச்சாரி இந்தியாவுக்கு என்ன நல்ல காரியம் செய்யப் போகிறார்? வக்கிரமான இந்த ஜந்துவுக்கு காவடி தூக்கி வழியனுப்பும் சி.பி.எம்., சி.பி.ஐ சாமியார்களின் யோக்யதையை புட்டுப் புட்டு வைத்த தலையங்கம் அருமை.

– நிர்மலா, திருச்சி.

✱ தங்களின் இதழில் எங்களின் 'அறிவியலா! அருஞ்செயலா! நூல் மதிப்புரை கண்டேன். மகிழ்ச்சி! நூலாசிரியர் பி. பிரேமானந்து அவர்கள் கோவை - ரெட்டிபாளையத்தில்தான் வசித்து வருகிறார். அறிவியல் மனப்பான்மை பற்றி ஆழமான செய்திகள் உடையவர். சாயிபாபாவை அம்பலப்படுத்தியதில் முக்கியப் பங்காற்றியவர். அவர் பாணியிலான நாத்திகம் அல்லது தர்க்கவியல் முறையிலான அறிவியல் செய்திகள் அடங்கிய நூல்கள் இல்லாத குறையை நிறைவு செய்ய நாங்கள் எடுத்த முயற்சியின் ஒரு விளைவே மேற்படி நூல். மேலும் கோவூர் அவர்களின் நூல்களையும் தமிழில் கொண்டு வர உள்ளோம். வளர்ந்து வரும் இந்துமதவெறியையும் நவீனமயமாக்கப்பட்ட மத ஆன்மீகப் புரட்டல்களையும் எதிர் கொள்ள திரு. பிரேமானந்து போன்றவர்களை முன்னெடுத்துச் செல்ல உங்களின் தொடர்ந்த ஆதரவு கிடைக்கும் என நம்புகிறோம்.

– சூ.இல. விசயகுமார்,
சூலூர் வெளியீடு, சூலூர்.




✱ எதிர்த்த வீட்டுப் பையன் மீன் குழம்பு சாப்பிட்டால் கையை முகர்ந்து பார்த்து பரவசமடையும் சிறுவர்களைப் போல தெரு சாக்கடையையும், பாதாள சாக்கடையையும் மாறி மாறி கிளறிக் கொண்டிருக்கும் மக்களே! 'பொற்காலமும் பணப்புழக்கமும்' அங்கே கிடைக்காது. மாறாக சுவிஸ் வங்கியில் புதைக்கப்பட்டிருக்கிறது; விதேசி மோகம் விழுங்கிக் கொண்டிருக்கிறது; சிதம்பரம், மாறன்களால் சிதைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை கட்டுரை வெகுவாகவே உணர்த்தியது.

– பி. தர்மராஜ், திருச்சி.

✱ இறுதியாக 'புதிய கலாச்சாரம்' இதழுக்கு 'மின்னஞ்சல்' முகவரி கிடைத்திருப்பது குறித்து மிகவும் மகிழ்ச்சி. இதழ் 'இணையத்திலும்' இடம் பெற்றால் மகிழ்வேன். இவ்விதழ் அட்டையில் ஒட்டுச் சித்திரம் நன்றாக இருந்தது. தோழர். மருதையனின் கட்டுரைகள் குறிப்பாக 'இசை' பற்றிய கட்டுரை அவர் இசைவிழாவில் பேசியதை விட நிறையக் கற்றுக் கொடுத்திருக்கிறது. மருத்துவர். சிவசுப்ரமணிய ஜெயசேகரின் கதை கண்ணீரை வரவழைத்தது.

– எல்.ஆர். குரு, மின்னஞ்சல் மூலம்.

✱ விசாரணைக் கமிசன் கதை தமிழ்நாட்டில் மருத்துவ வசதி மறுக்கப்பட்டு, கண்ணன் போன்றவர்களின் மரணத்தால், பிரிவால், அனாதையாக, மனநிலை பாதிக்கப்பட்ட, ஊனமுற்ற என தினமும் அல்லல் படும் லட்சக்கணக்கான மக்களை படம் பிடித்திருக்கிறது. மருத்துவக் கட்டுரையாகவும் மின்னுகிறது. கண்ணனின் துயரம் ஆரம்பத்திலேயே ஒரே ஒரு டிடி தடுப்பூசி போடுவதன் மூலம் தடுத்திருக்க முடியும் என்ற மருத்துவ உண்மையும், அதற்கு உழைக்கும் மக்களின் வறுமையும், கல்வியறிவின்மையும் காரணம். எங்களைப் போன்ற துணை மருத்துவ ஊழியர்கள் அன்றாடம் பார்க்கும் உழைக்கும் மக்கள் மருத்துவ வசதிக்காக கடைசி முயற்சியாக ஓட்டுப் பொறுக்கி அரசியல்வாதிகளிடம் சிபாரிசு கடிதம் வாங்கி வருவதும், அதை ஒரு கழுதையும் ஏறிட்டு பார்க்காத உண்மையும் நினைவுக்கு வருகிறது.

– கே. சுந்தரமூர்த்தி, திருப்பூர்.

✱ 'செயற்கரிய செய்வர் சிறுவர்' என்ற சிறு மாணவர்களின் பிரச்சார வேலைக் கண்டு படித்து அதிர்ச்சியடைந்தேன். 17 ஆண்டு காலமாக 'புதிய ஜனநாயகம், 'புதிய கலாச்சாரம்' படிக்கும் எனக்கு ஏற்படாத உத்வேகம் சிறுவர்களுக்கு ஏற்பட்டதை நினைத்து வெட்கமாக இருக்கிறது.

– வ. சின்னத்துரை, இறையூர்.

## பிழை திருத்தம்

சென்ற இதழில் வெளியான, 'பொற்காலம் பணப்புழக்கம்' கட்டுரையில் 6-வது பக்கத்தின் இறுதியில் 'கடனைக் கட்ட முடியாத ஆந்திரத்து விவசாயிகள்...' என்ற பத்தியில் 'தற்கொலை செய்யத் தூண்டியது அவர்களது தனிப்பட்ட அறிவியல் மதிப்பீடு' என்ற வரியை தனிப்பட்ட அறவியல் மதிப்பீடு என்று திருத்திக் கொள்க.

ஜெயலலிதாவை ஆட்சியில் அமர்த்தியிருப்பது சமூக அறிவியல் மதிப்பீடு என்று உள்ளதையும் சமூக அறவியல் மதிப்பீடு என்று திருத்திக் கொள்க.

'ஆப்பிள் மரங்கள்' திரை விமர்சனக் கட்டுரையின் 13-வது பக்கத்தின் முதல் இரண்டு பத்திகளில் வரும் 'மரியா' என்ற பெயரை லீனா என்று மாற்றிக் கொள்க. பிழைகளுக்கு மன்னிக்கவும்.

## அறிவிப்பு

கடிதம் எழுதும் வாசகர்கள், முகவர்கள் தபால் கட்டண உயர்வை நினைவில் கொண்டு சரியான தபால் அட்டை, அஞ்சல் உறை வாங்கி அனுப்புக. கடந்த ஒரு மாதமாக ஏராளமான அபராதத்தை நாங்கள் கட்டியிருக்கிறோம்.

குறுந்தகடு, ஒலிப்பேழைகள் வாங்கவும், சந்தா புதுப்பிக்கவும் விரும்பும் வெளிநாட்டு வாசகர்கள் மின்னஞ்சலில் தொடர்பு கொண்டால் உடன் அனுப்பி வைக்கிறோம்.

இசைவிழா - கோவை மாநாடு - நக்சல்பாரி பேச்சு ஒலிப்பேழைகள், ம.க.இ.க. பாடல் ஒலிப்பேழைகள், தீக்கொழுந்து குறுந்தகடு தேவைப்படுவோர் இரா. சீனிவாசன் பெயருக்கு பணம் எடுத்து புதிய கலாச்சாரம் முகவரிக்கு அனுப்பவும். பணம் கிடைத்த 4 நாட்களுக்குள் பேழைகள் அனுப்பப்படும். நேரிலும் வரலாம். அலுவலக நேரம் காலை 10 முதல் 2 மணி வரை. ஞாயிறு விடுமுறை.

– ஆசிரியர் குழு.



படிப்பகம்

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

• புதிய கலாச்சாரம்

• மக்கள் கலை இலக்கியக் கழக மாத இதழ்

• போர்: 19
• குரல்: 2
• ஜூலை - 2001

உள்நாடு
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 9

மின் அஞ்சல் முகவரி:
puthiyakalacharam@hotmail.com

சந்தா,
படைப்புகள் அனுப்பவும்
தகவல்களுக்கும்:

இரா. சீனிவாசன்,
18, முல்லைநகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை, அசோக் நகர்,
சென்னை - 600 083.

அலுவலக நேரம்:
காலை 10 முதல் 2 மணி வரை
ஞாயிறு விடுமுறை

# இருண்ட காலம்

## அத்தியாயம் - இரண்டு

கருணாநிதி மற்றும் இரு மத்திய அமைச்சர்கள் கைது செய்யப்பட்டதில் ஜெயலலிதாவின், சட்ட விரோத நடவடிக்கைகளுக்கு உடந்தையாக இருந்ததற்காக ஆளுநர் நீக்கப்பட்டு விட்டார். 'சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்தவும், மைய அமைச்சர்களை மாநில அரசு கைது செய்வதன் மூலம் கூட்டாட்சி முறைக்கு ஏற்பட்டுள்ள அபாயத்தைத் தடுக்கவும்' ஜெயலலிதா ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்ற கோரிக்கை இத்தலையங்கம் எழுதப்படும்போது மைய அரசின் பரிசீலனையில் உள்ளது.

ஆட்சி கலைக்கப்படலாம்; அல்லது அதில் உள்ள நடைமுறை சிக்கல்கள் காரணமாக இந்த ஆட்சி நீடிக்கலாம். எவ்வாறாயினும் க்ருணாநிதி கைது சம்பவம் எழுப்பியுள்ள கேள்விகளுக்கு நாம் விடை கண்டாகவேண்டும்.

ஜெயலலிதாவின் முந்தைய ஆட்சி எனும் இருண்ட காலம் துவங்கிய போது ராஜீவ் கொலையைச் சாக்காக வைத்து புலி ஆதரவாளர்கள், புரட்சிகர அமைப்புகள், தமிழ் உணர்வாளர்கள் ஆகியோர் வேட்டையாடப்பட்டனர். தடா, தேசிய பாதுகாப்புச் சட்டம் மற்றும் போலீசு வன்முறை இவர்கள் மீது பாய்ந்தது. இன்று கருணாநிதியின் கைதுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பத்திரிகை உலகே அன்று ஜெயலலிதாவின் பாசிச காட்டுத்தர்பாருக்கு பாராட்டுத் தெரிவித்தது. கருணாநிதியோ மௌனம் சாதித்தார். இருண்ட காலத்தின் இரண்டாவது அத்தியாயம்; இப்போது கருணாநிதி மற்றும் பத்திரிகையாளர்கள் மீதான தாக்குதலுடன் தொடங்கியிருக்கிறது.

கருணாநிதி கைது செய்யப்பட்டதைக் கண்டித்தவர்கள் அனைவரும் அவர் கைது செய்யப்பட்ட **முறையையே** கண்டித்துள்ளனர். "கைது செய்யட்டும் வேண்டாமென்று சொல்லவில்லை. அவருடைய வயதுக்கு மரியாதை கொடுத்தாவது கொஞ்சம் நாகரீகமாக நடத்தியிருக்க வேண்டாமா?" என்ற மனிதாபிமான கண்டனத்தைத் தான் சன் தொலைக்காட்சியை பார்த்து மனம் வருந்திய அரசியல் தெளிவற்ற பாமரர்கள் முதல் போலி கம்யூனிஸ்டு நல்லக்கண்ணு வரை அனைவரும் தெரிவித்துள்ளனர்.

பொய் வழக்குப் போடுவதாக இருந்தாலும் அதற்குரிய சட்டப்பூர்வ முறைகளை பின்பற்றியிருக்க வேண்டும் என்றும், கைது செய்யப்படுவோரது உரிமைகள் குறித்து உச்சநீதி மன்றம் அளித்துள்ள வழிகாட்டுதல்கள் மீறப்பட்டுள்ளன என்றும், தப்பிக்க முயலாத, நடக்கவும் இயலாத ஒரு முதியவரைத் தரதரவென்று இழுத்து வருவது போலீசின் அத்துமீறிய செயல் என்றும் சட்டவல்லுனர்கள் - மனித உரிமை இயக்கத்தினர் போன்றோர் கண்டித்துள்ளனர்.

'இவை பழிவாங்கும் நோக்கத்திற்காகவே புனையப்பட்டுள்ள பொய் வழக்குகள்' என்று குற்றம் சாட்டும் திமுகவும் அதன் கூட்டணி கட்சிகளும் கூட குறைந்தபட்ச மனிதாபிமானம், சட்ட வழிமுறைகள் பின்பற்றப்படாததையே வலியுறுத்துகின்றன.

இந்த அங்கலாய்ப்புகளும், கண்டனங்களும் பொருளற்றவை. "தன் மீதான ஊழல் வழக்குகளிலிருந்தும், தண்டனையிலிருந்தும் தப்பிப்பது - கருணாநிதியைப் பழிவாங்குவது" என்ற இரண்டு அம்சத் திட்டம்தான் ஜெயலலிதா மீண்டும் பதவியை பிடிப்பதற்கான நோக்கம். ஒரு கிரிமினலின் மூளையும், தெருச் சண்டை ரவுடியின் வீரமும், கான்வென்டு வர்க்கத்தின் கொழுப்பும், நீலியின் சாகசமும் ஒருங்கே அமையப் பெற்ற ஜெயலலிதா, தனது ரத்தத்தின் ரத்தமான ரவுடிகளை ஏவியே கருணாநிதியை பழி தீர்த்துக் கொண்டிருப்பார். முதலமைச்சர் பதவியும், சட்டப்பூர்வமாகவே ரவுடித்தனத்தில் ஈடுபட தயாராக உள்ள போலீசாரும், அதற்கு 'சட்ட ஆலோசனை' வழங்க அதிகார வர்க்க கிரிமினல்களும் கையிலிருந்ததால் ஜெயலலிதாவின் காரியம் சுலபமாக முடிந்து விட்டது.

முதல்வர் பதவிக்கு வந்த உடனே பழைய மாநகராட்சி கமிஷனர் ராதாகிருஷ்ணனை மாற்றி இன்னொருவரை ஜெயலலிதா நியமித்தார். பதினைந்தே நாட்களில் அவர் மீண்டும் மாற்றப்பட்டு 'சுடுகாட்டு கூரை ஊழல் புகழ் கிரிமினல்' ஆச்சாரியலு நியமிக்கப்பட்டு, பழிவாங்கும் வெறியில் துடித்துக் கொண்டிருந்த அவரிடமிருந்து இரண்டே நாளில் ஊழல் புகார் பெறப்பட்டு, உடனே முதல் தகவலறிக்கை பதிவு செய்யப்பட்டு, இரவோடு இரவாகக் கைதும் முடிந்துவிட்டது. வீரப்பன் வேட்டைக்கு தேவாரம் நியமிக்கப்பட்டதைப் போலவே கருணாநிதி வேட்டைக்கும் ஜெயா - சசி கும்பலால் சோதித்தறியப்பட்ட நம்பகமான வெறி பிடித்த காக்கி உடை ரவுடிகளே பொறுப்பாக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி 7-ஆம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com

**தொடர்கிறது! உலக மேலாதிக்கத்திற்கெதிரான போர்!**

# ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்காவிற்கு எதிராக சுவீடன் மக்களின் போராட்டம்!

**மறுகாலனியாக்கம் — உலகமய மாக்கம் — உலகையே சில மேல்நிலை வல்லரசுகள் தமக்குள் பங்கு போட்டுக் கொள்ளுதல் என்பது ஏழை நாடு களை மட்டும் பாதிக்கவில்லை. மிக வும் ஏழைநாடான பாப்புவா நியூ கினி யாவில் தனியார்மயத்தை எதிர்த்துப் போராடிய தொழிலாளர்களின் மீது துப்பாக்கிச் சூடு — மிகவும் 'பணக்கார' நாடான சுவீடனிலும் துப்பாக்கிச் சூடு.**

**''ஐரோப்பா என்றாலே சொகுசு, வசதி, தூய்மை — இதற்கெல்லாம் காரணம் முதலாளித்துவ சமூக அமைப்புதான்'' என்பது நம்நாட்டின் தகவல் ஊடகங்கள் பரப்பும் கருத்து. ''வர்க்கப் போராட்டம் — சோசலிசம்'' என்பதெல்லாம் முடிந்து விட்டது என்று கூறும் ஏகாதிபத்தியக் கைக்கூ லிகளான பின் நவீனத்துவப் பண்டி தர்களும் தங்கள் கூற்றுக்கு ஆதாரமாகக் காட்டுவது ஐரோப்பாவைத்தான்.**

**இந்த மாதம் அமெரிக்க அதிபர் புஷ் அங்கே வந்ததை எதிர்த்து நடைபெற்ற பிரம்மாண்டமான எதிர்ப்பு ஆர்ப்பாட் டத்தில் மாவோயிஸ்டுகள் முதல் சூழலி யலாளர்கள் வரை பலரும் கலந்து கொண்டிருக்கின்றனர்.**

**அந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட இளைஞர் ஒருவரின் நேரடி வர்ணனை இது. பத்திரிகைகளால் இருட்டடிப்பு செய்யப்பட்ட உண்மை களை இவரும் இன்னும் பலரும் இணையம் மூலம் உலகுக்குத் தெரி வித்துள்ளனர்.**

**போர்க்குணமிக்க அரசியல் போராட்டத்திற்கு இவ்வனுபவம் ஒரு சான்று. சர்வதேசத் தொழிலாளர் ஒற்று மைக்கு இது ஒரு நம்பிக்கை.**

●●●

**கோ**தன்பர்க் நகரில் நடந்த போராட் டத்தைப் பற்றிச் சொல்வதற்கு முன்னால் அதன் பின்னணி என்ன என்று சொல்லி விடுகிறேன். ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைப் பொறுப்பு இந்த ஆண்டு ஸ்வீ டனுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. எனவே ஐரோப்பிய ஒன்றியத்தின் எதிர்காலத் திட்டங்கள் பற்றி விவரிக்க எல்லா ஐரோப்பிய அரசுத் தலைவர்களும் இந்த வாரம் (ஜூன் 13-16) இங்கே கூடி னார்கள்.

என்னைப் பொறுத்தவரை ஐரோப்பிய ஒன்றியம் என்பதே ஜனநாயக விரோதமா னது. 100 ஆண்டுகளாகத் தொழிலாளி வர்க்கமும், சிவில் உரிமை இயக்கங்களும் போராடிப் பெற்ற உரிமைகளையெல்லாம் நசுக்க வந்த புல்டோசர் அது.

மூன்றாம் உலக ஏழை நாடுகளைச் சுரண்டுவதில் அமெரிக்காவுடன் போட்டி போடுவதற்காக ''பணக்கார ஐரோப் பாவை''ச் சுற்றி எழுப்பப்பட்ட கோட்டைதான் ஐரோப்பிய ஒன்றியம். அத்தனையும் சுதந்திர வர்த்தகம் என்ற பெயரால் நடக்கிறது.

ஐரோப்பிய ஒன்றியம், ஜி-8 நாடுகள், உலக வர்த்தகக் கழகம் ஆகிய இவர்களது



**'அமெரிக்கா மனித குல எதிரி' சுவீடன் மக்கள் முழக்கம்.**

கூட்டம் எங்கே நடந்தாலும் கடுமையான மக்கள் எதிர்ப்பை அவர்கள் சந்தித்து வரு கிறார்கள். எனவே ஸ்வீடனின் பெரிய கோடைகாலத் திருவிழாவான ஹல்ஸ்பிரட் விழாக் காலத்தில் இந்தக் கூட்டத்தை வைத்துக் கொண்டார்கள். ''இளைஞர்களெல்லாம் வெளியூர் போய்விடுவார்கள்; தொல்லை இருக் காது'' என்பது அவர்கள் கணக்கு.

இன்னொரு கூத்தைக் கேளுங்கள். அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ்ஷை இந்தக் கூட்டத்துக்கு அழைத்திருந்தார்கள். அவர் பார்க்கும்போது நகரமே பூத்துக் குலுங்க வேண்டுமாம். இதற்காக ஏராளமான பூச்செடிகளை வாங்கி திரும்பிய பக்க மெல்லாம் நட்டு வைத்தார்கள். அந்த ஆள் கோதன்பர்க்கில் இருந்தது 20 மணி நேரம். அதற்குச் செலவு செய்யப்பட்ட எங்களு டைய வரிப்பணம் 10 கோடி ரூபாய்.

இதற்கிடையில் ஐரோப்பிய ஒன்றி யத்தை எதிர்க்கும் பல்வேறு அமைப்புகள் இந்தக் கூட்டத்துக்கு எதிராகப் போராட்டங் களை அறிவித்து விட்டார்கள். அரசியல் வாதிகளுக்கோ உதறல். போராட்டக்காரர் களை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தி யது போலீசு.

''அடக்குமுறையெல்லாம் செய்ய மாட்டோம். 3 ஆர்ப்பாட்டங்களுக்கு அனு மதி தருகிறோம். கூட்டம் நடக்கும் கட்டிடத் துக்கு 2 கட்டிடம் தள்ளி நடத்திக் கொள்ளுங்கள்'' என்றார்கள். அதாவது மக்களாகிய எங்களது தலைவிதியைத் தீர்மானிக்கும் கனவான்களின் மீதான விம ரிசனத்தை அட்டைகள், பதாகைகள் மூலம் நாங்கள் தெரிவிக்கலாம். ஆனால் எங்களை அவர்கள் கண்ணால் பார்க்க முடி யாத தூரத்திலிருந்து!

**நா**ன் ஸ்டாக் ஹோம் நகரத்துக்காரன். கோதன்பர்க் போராட்டத்திற்கு வியாழக்கி ழமை இரவு போய்ச் சேர்ந்துவிட வேண்டு மென்று நானும் என் நண்பர்களும் புறப் பட்டோம். ஆர்ப்பாட்டக்காரர்கள் தூங்கிக் கொண்டிருந்த பள்ளிக்கூடக் கட்டிடத்தை புதன் இரவே போலீசு சுற்றி வளைத்து விட்டதாக வானொலியில் செய்தியைக் கேட்டோம். அது மட்டுமல்ல, பிரம்மாண் டமான சரக்குப் பெட்டகங்களை அந்தப் பள்ளிக் கூடத்தைச் சுற்றிலும் கோட்டை போல அடுக்கி, யாரும் வெளியே வர முடி யாமல் சிறை வைத்து விட்டனர்.

இந்தப் ''பெட்டகச் சுவர் தடுப்புக் காவலை'' எதிர்த்து வெளியே நடந்த அமைதியான ஆர்ப்பாட்டத்தையும் போலீசு தாக்கியிருக்கிறது. அடுத்து வரும் நாங்கள் எப்படியிருக்க வேண்டும் என்ப தற்கு போலீசு சுருதி சேர்த்து விட்டது.


படிப்பகம்

www.padippakam.com

**வெள்ளிக்கிழமை காலை** நகரத்தின் மையப்பகுதியில் பிரம்மாண்டமான பொதுக்கூட்டம். கூட்டம் முடிந்தவுடன் அரசியல் தலைவர்களின் சந்திப்பு நடந்து கொண்டிருந்த கட்டிடத்தை நோக்கி ஊர்வலம் நகரத் தொடங்கியது. கவச உடுப்பணிந்த போலீசு, குதிரைப்படை நாய்ப் படையுடன் சாலையின் குறுக்கே நின்று கொண்டிருந்தது.

மக்கள் தடுத்து நிறுத்தப்பட்டார்கள். அது குறுகலான தெரு. மக்களோ ஆயிரக் கணக்கில் வந்தவண்ணமிருக்கிறார்கள். 'திரும்பிப் போங்கள்' என்று கத்தியது போலீசு. ஆர்ப்பாட்டக்காரர்கள் முடியாது என்றனர். திடீரென மக்கள் மீது நாய்களை ஏவி விட்டது போலீசு.

உயிருக்குப் பயந்து சிலர் ஓடத் தொடங்கினர். வேறு சிலர் கற்களாலும் பாட்டில்களாலும் போலீசைத் தாக்கத் தொடங்கினர். ''போகிறேன் விட்டுவிடுங்கள்'' என்று கதறியவர்களைக் கூட போலீசு விடவில்லை. சாலையோரம் போய்க் கொண்டிருந்த ஒரு அப்பாவி மனிதனை அடித்து நொறுக்கினர். அந்த மனிதன் வெள்ளையன் இல்லை என்பதே காரணமாக இருக்கலாம்.

மக்களை கடைவீதியை நோக்கித் துரத்தியது போலீசு. மெக்டொனால்டு, எச் அண்டு எம் போன்ற பிரம்மாண்டமான சங்கிலித் தொடர் கடைகள் அங்கேதான் இருக்கின்றன. அடடா! போலீசின் அறிவை என்னவென்று சொல்வது?

மெக்டோனால்டு, எச் அண்டு எம், ஸ்வீடிஷ் வங்கி... அனைத்தையும் நொறுக்கினார்கள் ஆர்ப்பாட்டக்காரர்கள்.

''பயங்கரவாதிகளும் குண்டர்களும் நகரத்தைக் கற்பழிக்கிறார்கள், நாசமாக்குகிறார்கள், என்று பத்திரிகைகளும் தொலைக்காட்சிகளும் கதறின.

அவர்களெல்லாம் இருட்டடிப்பு செய்த ஒரு உண்மை என்ன தெரியுமா? சிறிய கடைகளோ வர்த்தக நிறுவனங்களோ ஒன்று கூடத் தாக்கப்படவில்லை. உலகம் முழுவதும் ஏழை மக்களைச் சுரண்டியும், குழந்தைகளைக் கசக்கிப் பிழிந்தும் கோடிக்கணக்கில் சொத்து சேர்த்த மெக்டொனால்டு போன்ற பேய்களை (பன்னாட்டு நிறுவனங்கள்) மட்டும்தான் ஆர்ப்பாட்டக்காரர்கள் குறி வைத்துத் தாக்கினார்கள். இந்த யுத்தம் சுமார் 2 மணிநேரம் நீடித்தது.

**இந்த அடக்கு முறையை அனுபவித்த பிறகு உற்சாகமாக உணர்கிறேன். என் வாழ்க்கை இனி பழைய மாதிரி இருக்காது. வர்க்கப் போராட்டம், மனித உரிமைகளுக்கான போராட்டம், அரசியல், வரலாறு இதைப் பற்றியெல்லாம் இதுவரை நான் படித்ததையும், கேள்விப் பட்டதையும் போன வாரம் கண் முன்னால் பார்த்து விட்டேன். அனைத்தும் உண்மை. உண்மைதான்.**

**அன்றிரவு** பூங்காவில் கலைநிகழ்ச்சிகள். ''நகரத்தைத் திரும்பக் கைப்பற்றுவோம்'' என்று பாடிக் கொண்டிருந்தார்கள் பாடகர்கள். எல்லாரும் உற்சாகமாகக் காணப்பட்டாலும் சூழ்நிலையில் ஒருவிதமான பதட்டம் இருந்ததை உணர முடிந்தது.

''கம்யூனிஸ்டு தே... பசங்களா'' என்று திடீரென்று ஒரு கூச்சல் - எனக்குப் பின்புறம்! கூச்சல் போட்டவர்கள் பாசிஸ்டுகள். கைகலப்பு தொடங்கியது.

எனக்கோ சிரிப்புத்தான் வந்தது. பொதுவாகவே, இந்த வலதுசாரி ஆட்களுக்கே மூளை கொஞ்சம் கோளாறுதான். அதற்காக இப்படியா? நாள் முழுவதும் போலீசுடன் மோதி ஏற்கனவே ஆத்திரத்தில் இருக்கும் கூட்டத்திற்குள் வந்து, கூப்பிட்டு வம்பிழுத்து, சக்கையாக உரித்தபின் ஓடிவிட்டார்கள்.

பாசிஸ்டு போக்கிரிகள் ஓடியபின் உண்மையான பாசிஸ்டுகள் அதுதான் ஸ்வீடன் போலீசார் - உள்ளே நுழைந்தார்கள். மீண்டும் தடியடி, மீண்டும் கல்லெறி. சிலர் உள்ளூர் கடைகளையெல்லாம் அடித்தார்கள். மெக்டோனால்டை நொறுக்குவதில் அர்த்தமிருக்கிறது. சம்பந்தமில்லாமல் புத்தகக் கடைகளை அடித்து என்ன பயன்?

இது ஒருபுறமிருக்கட்டும். போலீசின் காட்டுமிராண்டித்தனத்தைப் பார்த்து ஆத்திரம் அடைந்து, சாலையோரமாக நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த மக்களும் போலீசு மீது கல்லெறியத் தொடங்கி விட்டார்கள்.

திடீரென்று ஆங்காங்கே துப்பாக்கி வேட்டுச்சத்தம். ஆங்காங்கே அழுகுரலும் ஓலமும் கேட்கத் தொடங்கியது. 1931-இல் 6 தொழிலாளர்கள் போலீசால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்திற்குப் பின், எனக்குத் தெரிந்து இன்றுவரை ஸ்வீடன் போலீசு மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதில்லை.

ஆனால் என் வயதையொத்த இளைஞர்களை போலீசின் துப்பாக்கி குறி பார்த்துக் கொண்டிருந்த இந்தக் காட்சி என் நினைவிலிருந்து அழியவே அழியாது. தோட்டாக்கள் வெடித்துக் கொண்டேயிருந்தன. நான் ஓடினேன்.

ஒரு அம்மணமான மனிதனை குதிரையின் காலடிக் குளம்பு மிதித்துக் கொண்டிருந்தது. என் சிநேகிதி கையில் ரத்தம் சொட்டச் சொட்ட ஓடிவந்தாள். இன்னொருத்தி குதிரையின் காலில் சிக்கி விட்டாள். தலைக்கு மேலே போலீசின் ஹெலிகாப்டர்கள் மொய்த்துக் கொண்டிருந்தன.

இரவு நாங்கள் தூங்கிய இடத்தையும் போலீசு சுற்றி வளைத்துக் கொண்டது.

**சனிக்கிழமை காலை:** போலீசு அடக்குமுறைக்கு எதிராகவும், ஐரோப்பிய ஒன்றியத்துக்கு எதிராகவும் ஆர்ப்பாட்டம். 25,000 மக்கள் திரண்டனர். ஸ்வீடனின் வரலாற்றிலேயே இது மிகப் பெரிய ஆர்ப்பாட்டமாக இருக்க வேண்டும். (மக்கள் தொகை மிகவும் குறைவான நாடு ஸ்வீடன்)

நகரத்தின் மையப்பகுதிக்குள் போகவே முடியாமல் எல்லாச் சாலைகளையும் சரக்குப் பெட்டகங்களை வைத்து அடைத்து விட்டது போலீசு. மழை பெய்து கொண்டிருந்தது.



**புஷ் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்கள் கூடிய இடத்தை இரும்புக் கோட்டையாகக் காக்கும் போலீசு!**

www.padippakam.com

இத்தனை வன்முறைக்குப் பிறகும் இப்படி ஒரு ஆர்ப்பாட்டம் நடப்பது மன துக்கு இதமாக இருந்தது. உலகம் முழுவதும் உள்ள தோழர்களுடன் இணைந்து, இந்த முதலாளித்துவ சமூகத் திற்கு எங்கள் எதிர்ப்பை காட்டி யதும், இன்னொரு புதிய உலக அமைப்பு சாத்தியம் என்ற நம்பிக்கையும் எழுச்சியூட்டி யது.

'வேடிக்கை' என்ன வென்றால் இந்த மாபெரும் போராட்டத்தை பத்திரிகைகள் இருட்டடிப்பு செய்தன.



கோதன்பர்க் நகரில் போராடத் திரண்ட மக்களும் தொழிலாளர்களும்.

ஆர்ப்பாட்டம் முடிந்து மெல்லக் கலைந்தோம். பசித் தது. சாப்பிடுவதற்காக நகரத்திற்குள் நடந்து சென்றேன். போர்க்களம் போல இருந்தது நகரம். சரக்குப் பெட்டகங்கள், கற்கள், பாட்டில்கள், பீதியுற்ற மக்கள், உணர்ச்சி இல்லாத போலீசு முகங்கள்... சைரன் ஒலித்தபடி போலீசு வண்டிகள் ஒன்றன்பின் ஒன்றாகக் கடந்து சென்றன. பாசிசம் என் காதில் ஊளையிடுவதுபோல் இருந்தது.

**அன்றிரவு,** போலீசு வெறியாட்டம் நடந்த அதே இடத்தில் கலை நிகழ்ச்சிகள் நடத்தினோம். அது ஒரு அற்புதமான இரவு. ''சர்வதேசத் தொழிலாளர் ஒற்றுமை ஓங்குக'' என்று மீண்டும், மீண்டும், மீண்டும், மீண்டும் தொண்டை வரண்டு போகும் வரை கத்தினோம், கதறினோம். நான் கிட்டத்தட்ட அழுது கொண்டி ருந்தேன்.

அன்றிரவு தூக்கம் பிடிக்கவில்லை. ஆர்ப்பாட்டம் முடிந்துவிட்டது என்றாலும் இந்தப் போர் ஓயவில்லை என்று தோன்றிக் கொண்டேயிருக்கிறது.

மறுநாள் ஸ்டாக்ஹோம் திரும்பிவிட்டோம். பத்தி ரிகை, வானொலி, தொலைக் காட்சி அனைத்திலும் எங்கள் வன்முறைதான் செய்தி. போலீசுதான் வன் முறையைத் துவக்கி வைத் தது என்பது பற்றி ஒரு வரி கிடையாது. துப்பாக்கிச் சூடு நடத்திய அதிகாரி யைக் கதாநாயகன் போல சித்தரித்தனர். அவர்கள் தற்காப்புக்காகத்தான் சுட்டார்களாம். குண்டடி பட்டதோ முதுகில்!

போலீசு சொல்வதுதான் உண்மை, நமக்கு நிறைய போலீசு வேண்டும், கடுமை யான போலீசு வேண்டும், பயங்கரவாதி களைக் கட்டுப்படுத்த வேண்டும்'' இப்படி ஏகப்பட்ட வாசகர் கடிதங்கள் பத்திரிகை களில்.

இதற்கெல்லாம் காரணமான உலக முத லாளித்துவம் இதோ என் கண்முன்னே தெரிகிறது. அதே ஏகபோகத் தொழிற்கழ கங்கள், அவர்களுடைய சித்தாந்தம் - இவைதான் எல்லா இடத்திலும் அதிகா ரத்தில் இருக்கின்றன. ஏழைகளுக்கும் உழைக்கும் மக்களுக்கும் எதிரான வன்முறை பச்சையாகத் தெரிகிறது.

சபாடிஸ்டா இயக்கம் (தென் அமெ ரிக்க கொரில்லாக்கள்) பன்னாட்டு தொழிற் கழகங்களுக்கு எதிராக ஆயுதமேந்து வதைப் பாராட்டுபவர்கள், அதே சண்டை நம் வீட்டு வாசலுக்கு வரும்போது உடனே 'எல்லாவற்றையும்' கண்டிக்கத் தொடங்கி விடுகிறார்கள். மிகவும் சாதார ணமான நல்ல மனிதர்களி டமும் கூட வலது சாரிச் சிந்த னையும் மதிப்பீடுகளும் பரவி வருகின்றது.

மக்கள் எவ்வளவு சீக்கிரம் வரலாற்றை மறந்து விடுகி றார்கள்! 1930-கள் வரை ஐரோப்பாவின் போர்க்குண மிக்க தொழிலாளர் இயக்கம் ஸ்வீடனில் இருந்தது. ஓட்டு ரிமை, பேச்சுரிமை, பெண்கள் கருக்கலைப்பு செய்து கொள்ளும் உரிமை, விடுமு றைகள்... எல்லாமே போலீசு டனும் அரசுடனும் மோதி மோதிப் பெற்றவைதான்.

ஆனால் இந்த உண்மை யையெல்லாம் பள்ளிக்கூடத்தில் சொல்லித் தருவதில்லை. இது ஒரு சவால். முதலாளித்துவத்தின் வெறி கொண்ட தாக்குதலுக்கு எதிராக நாம் உலகளவில் ஒன்று திரள வேண்டும்.

அதிகாரத்தில் இருப்பவர்கள் தங்கள் பணம், அதிகார பலம், தொழிற்கழகங்கள் எல்லாவற்றையும் மக்களுக்கு சும்மா கொடுத்து விடுவார்களா என்ன? அதற்கு முன் நம்மை கொன்று ஒழிக்கத்தான் முயற்சி செய்வார்கள்.

இந்த அடக்கு முறையை அனுப வித்த பிறகு உற்சாகமாக உணர்கிறேன். என் வாழ்க்கை இனி பழைய மாதிரி இருக் காது. வர்க்கப் போராட்டம், மனித உரிமை களுக்கான போராட்டம், அரசியல், வர லாறு இதைப் பற்றியெல்லாம் இதுவரை நான் படித்ததையும், கேள்விப்பட்டதையும் போன வாரம் கண் முன்னால் பார்த்து விட்டேன். அனைத்தும் உண்மை. உண்மைதான்.

கார்ல் மார்க்ஸின் 'மூலதனம்' முதல், என்.டபிள்யூ.ஏ. குழுவின ருடைய போலீசை அம்ப லப்படுத்தும் பாடல் வரை ஒவ்வொன்றையும் பொருத்திப் பார்த்துப் புரிந்து கொள்ள வைத்து விட்டது சென்ற வாரத்துப் போராட்டம்.

நல்லது. இந்த இடத்தில் என்னுடைய கதை முடிவ டைகிறது என்று நினைக் கிறேன். ஒருவேளை இங்கிருந்துதான் தொடங் குகிறதோ!

**இன்ஜே,**
**ஸ்வீடன்.**



சுவீடன் போலீசின் வெறியாட்டம்.

www.padippakam.com

**தலையங்கம் - தொடர்ச்சி**

எனவே, ஒரு கிரிமினலின் பழி வாங்கும் வெறி நடைமுறைக்குச் செல்லும் போது நாகரிகமாகவும் சட்டப்பூர்வமாகவும் இருக்கவேண்டும் என மக்கள் எதிர்பார்ப்பது ஏமாளித்தனம். போலிக் கம்யூனிஸ்டுகளும் ஜெயலலிதாவின் கூட்டணிக் கட்சிகளும் ஓட்டுப் பொறுக்கி அரசியல் அறிஞர்களும் இதைக் கூறுவது கிரிமினல் அரசியலுக்குப் புனுகுப் பூசும் அயோக்கியத்தனம்.

இனி, அடுத்தக் கேள்விக்கு வருவோம். ''ஒரு முன்னாள் முதல்வருக்கே இந்தக் கதி என்றால், நம் கதி என்ன?'' என்ற கேள்வியை பலர் எழுப்புகின்றனர். நள்ளிரவில் வீடு புகுந்து இழுத்துச் செல்வது குடும்பத்தினரைத் தாக்குவது, சட்ட உரிமைகளை மறுப்பது ஆகியவை எல்லா ஆட்சியிலும் சாதாரண மக்களுக்கு நடந்து கொண்டிருப்பவை தான். போலீசு என்பது சட்டப்பூர்வ கிரிமினல் கும்பல் என்பதைத் தவிர இதற்கு வேறு விளக்கம் தேவையில்லை. எனவே, தன் இயல்பிலேயே கிரிமினலாக இல்லாத ஒரு துறையை ஜெயலலிதா ஒரே நாளில் திடீரென அவ்வாறு மாற்றமுடியாது. அந்த கும்பலில் உள்ள தேர்ந்த விசுவாசமான நபர்களைத் தெரிவு செய்ய மட்டுமே முடியும். அதுதான் நடந்துள்ளது.

இன்று ஜனநாயக உரிமை பற்றியும் தன் மீதான போலீசு வன்முறை பற்றியும் பேசும் முன்னாள் முதல்வர் கருணாநிதி, தாமிரவருணித் துப்பாக்கிச் சூட்டில் ஆற்றில் எறியப்பட்ட குழந்தைகள், அமிழ்த்திக் கொல்லப்பட்ட பெண்கள், தருமபுரியில் சுட்டுக் கொல்லப்பட்ட தோழர் ரவீந்திரன் ஆகியோருக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் குறித்து சிறையில் அமர்ந்து சிந்தித்துப் பார்க்கட்டும்.

தனது ஆடை அவிழ்க்கப்பட்டு உள்ளாடையுடன் நிறுத்தப்பட்டதற்கு நீதி கேட்கும் அமைச்சர் மாறன், நீலகிரி தேயிலை விவசாயிகள் போராட்டத்தின் போது அம்மணமாக இழுத்துச் செல்லப்பட்ட இளைஞர்களைக் காட்டிலும் தன் நிலை 'அம்மா பெரிதென்று' ஆறுதலடையட்டும். அல்லது அந்த விவசாயிகளை நோகடித்த தனது திமிர்ப் பேச்சிற்காக மனம் வருந்தட்டும்.

கருணாநிதி மீது தொடுக்கப்பட்ட போலீசு வன்முறையை தொலைக்காட்சியில் காட்டி பொது மக்களின் கருத்தைக் கேட்பதை கமிஷனர் தடுக்கிறார் என்றும் ஜனநாயக உரிமை மறுப்பு என்றும் கூச்சலிடும் திமுகவினர், தாமிரவருணி படுகொலை குறித்த செய்திப் படத்தை ஒரு அரங்கில் திரையிடுவதற்குக் கூடத் தடைவிதித்த தங்களது ஜனநாயக மாண்பை நினைத்துப் பார்க்கட்டும்.

இன்று தாங்கள் ஆயிரக்கணக்கில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதை விடக் கொடுமையான முறையில் முசுலீம்களும், தாழ்த்தப்பட்ட மக்களும் திமுக ஆட்சியில் சிறை வைக்கப்பட்டார்கள் என்பதை திமுகவினர் எண்ணிப் பார்க்கட்டும்.

ஜெயா - சசி கும்பலைச் சட்டப்பூர்வமான முறையில் தண்டிக்க முடியாது என்றும் அவர்களது ஊழல் சொத்துக்களை மக்களே பறிமுதல் செய்ய வேண்டும் என்றும் கூறி, 'வினோதகன் மருத்துவமனைகைப்பற்றும் போராட்டம்' நடத்திய போது எமது அமைப்பின் 110 தோழர்கள் மீது போலீசை கொலை செய்ய முயன்றதாக பொய் வழக்குப் போட்டது திமுக அரசு. போலீசின் கௌரவத்தையும் தங்களது நடுநிலையையும் நிரூபிக்க எம்மீது போடப்பட்ட பொய் வழக்கு, இன்று மாறன் மீதான் கொலை முயற்சி வழக்காக அவதாரம் எடுத்துள்ளது.

போலீசு அத்துமீறலுக்கு வக்காலத்து வாங்குவது, போலீசை நவீனப்படுத்துவது, சலுகை தருவது, சம்பளம் உயர்த்துவது என்று திமுக வாரி வழங்கியதெல்லாம் போலீசின் விசுவாசத்தை தன் பக்கம் உறுதியாக வைத்துக் கொள்ளத் தானேயன்றி அவை நல்லெண்ண நடவடிக்கைகள் அல்ல. இருப்பினும் என்ன செய்வது! கிரிமினல்களின் ஆட்சி வந்தவுடன் தங்கள் சொந்த ஆட்சி வந்த மகிழ்ச்சியில் காக்கி உடை கிரிமினல்கள் விசுவாசத்தை மாற்றிக் கொண்டு விட்டார்கள்!

இவ்வாறு கூறுவதனால் திமுகவினர் மீதான அடக்குமுறையை நாம் ரசிக்கிறோம் என்று பொருளல்ல. இந்த ஜனநாயகம் என்பது உழைக்கும் மக்களைப் பொறுத்தவரை போலீசு- அதிகார வர்க்கம்- ஆளும் வர்க்க சர்வாதிகாரமாகவே எப்போதும் இருந்து வருகிறது என்ற உண்மையை திமுக அனுதாபிகளுக்கும் இந்த அனுதாப அலையில் அடித்துச் செல்லப்படும் மக்களுக்கும் சுட்டிக்காட்டுகிறோம். ஆனால் ஜெயலலிதா போன்ற பாசிச கிரிமினல் கும்பல் ஆட்சிக்கு வரும் போது அந்த சர்வாதிகாரத்தை ஆளும் வர்க்கம் மற்றும் மேட்டுக்குடி வர்க்கத்தின் இன்னொரு பிரிவும் சுவைக்க நேருகிறது. ''எங்களுக்கே இந்த நிலையென்றால் மக்களின் நிலை என்ன?'' என்று தாங்கள் உதைபடும் அந்தக் கணத்தில் தான் அவர்களுக்கு மக்கள் பற்றிய நினைவே வருகிறது.

இன்னொரு வகையில் பார்த்தால் இந்தக் கூற்றில் உண்மை இல்லாமல் இல்லை. கருணாநிதியின் மீதான இந்த பழி வாங்கும் தாக்குதலுக்குப் பின் போலீசிடமோ அதிகார வர்க்கத்திடமோ ஒரு சாதாரண குடிமகன் ஜனநாயக உரிமை பற்றிப் பேசினால் ''அந்தக் கருணாநிதிக்கே அதுதான் கதி எனும்போது நீ என்னடா சுண்டைக்காய்'' என்ற மூர்க்கத்தனமான தாக்குதல் தான் பதிலாக கிடைக்கும்.

எனவே, கருணாநிதி என்ற முதிய அரசியல்வாதி தாக்கப்பட்டு விட்டாரே என்ற அனுதாபம், அரசியல் ரீதியாக அர்த்தமுள்ளதாக மாற வேண்டுமென்றால் தமிழ் மக்கள் யார் மீதும் இத்தகைய தாக்குதல் நடக்க இனி அனுமதிக்கக் கூடாது என்ற ஆவேசமாக அது மாற வேண்டும்.

ஆளுநர் நீக்கம் ஆட்சிக் கலைப்பு, உச்ச நீதி மன்றத் தலையீடு போன்ற நடவடிக்கைகள் மூலம் கருணாநிதி நிவாரணம் பெற்றுவிட முடியும். ஆனால் அந்த நிவாரணத்தை வழங்குபவர்கள் இந்துமதவெறி பாசிச கிரிமினல்கள் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. அவர்கள் ஜெயாவின் இருண்ட காலம் அத்தியாயம் ஒன்றின் போதும் அதன்பின் அவர் தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட பின்னரும் கூட ஜெயலலிதாவின் கூட்டாளிகளாகவே இருந்தனர் என்பதையும் மறந்துவிடக்கூடாது.

இன்று பாஜக, திமுக, அதிமுக போலிக் கம்யூனிஸ்டுகள் உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும் பின்பற்றி வரும் மறுகாலனியாக்க பொருளாதாரக் கொள்கை கருணாநிதி குடும்பத்தினரை காட்டிலும் ஆயிரம் மடங்கு நிர்க்கதியான நிலைக்கு உழைக்கும் மக்களை ஆளாக்கியுள்ளது என்பதையும் மறந்துவிடக் கூடாது. இக்கொள்கைகளை எதிர்த்துப் போராடும் மக்கள் நாடு முழுவதும் இதே போலீசால் சுட்டுக் கொல்லப்படுவதையும் மறந்து விடக் கூடாது.

ஜெயலலிதாவின் இந்த இருண்ட காலத்தை எப்படி எதிர்கொள்வது? வீரமணியையும் சங்கரய்யா, நல்லக்கண்ணுவையும் போன்ற மானமும் சொரணையு[ம]ற்ற எடுபிடிகளாக இருந்தால் கிரிமினல்கள் வீசியெறியும் எலும்பைக் கவ்விய படி துதிபாடலாம். திமுக போன்ற எதிர்க் கட்சிகளின் வழியில் செல்வதானால் மேலி[ரு]ந்து ஆட்சியைக் கலைக்கச் சொல்லி இந்து மதவெறி பாசிஸ்டுகளிடம் மன்றாடலாம்.

மூன்றாவதாக ஒரு வழி உள்ளது. அது கீழிருந்து இந்த ஆட்சியையும் அரசமைப்பையும் கலைக்கும் பாதை. மறுகாலனியாக்கத்தை முறியடிக்கும் பாதை. புரட்சிப் பாதை. அதுதான் இருண்ட காலத்தின் இரண்டாவது அத்தியாயத்தையே கடைசி அத்தியாயமாக்கவல்ல ஒரே பாதை.



படிப்பகம்

www.padippakam.com

# ஓய்வு பொழுதுபோக்கு இசை ரசனை 3

மருதையன்

ஒரு தொலைக்காட்சித் தொடரைப் பார்ப்பதற்காகத் தனது உடலுக்குத் தேவைப்படும் ஓய்வைக் கூடத் தியாகம் செய்யும் மனப்பக்குவத்தை மக்கள் தானாகப் பெற்றுவிடவில்லை. இந்தப் பக்குவத்திற்கு அவர்களைக் கொண்டு வந்திருப்பது பொழுதுபோக்குத் தொழில். சரியாகச் சொன்னால் உலகப் பொழுதுபோக்குத் தொழில் (Global Entertainment Industry).

இந்தத் தொழிலைக் கட்டுப்படுத்துகின்ற பன்னாட்டு நிறுவனங்களைப் பொருத்தவரை இசையும் கலையும் சோப்பு, செருப்பு, பற்பசையைப் போன்றதொரு சரக்கு. ரசிகர்கள் என்ற புனைபெயரில் அழைக்கப்படும் மக்களோ இவர்களைப் பொருத்தவரையில் வெறும் நுகர்வோர்.

அரசியல் பொருளாதாரத் துறையில் இந்த பன்னாட்டு நிறுவனங்கள் செலுத்தும் ஆதிக்கத்தை பண்பாட்டுத் துறையில் அவர்கள் செலுத்தும் ஆதிக்கத்திலிருந்து பிரித்துப் பார்க்க முடியாது. தகவல் ஊடகங்கள் மீதான உலக மேலாதிக்கம் இல்லாமல் உலகமயமாக்கம் என்பதைப் பன்னாட்டு நிறுவனங்கள் சாதிக்கவே முடியாது.

**ஜனநாயகத்திற்காகத் தனியார்மயமா? தொழில்நுட்பத்தின் விளைவு ஏகபோகமா?**

ரூபர்ட் முர்டோக் என்ற ஏகபோக முதலாளியின் நியூஸ் கார்ப்பரேசனுக்குச் சொந்தமான தொலைக்காட்சி சானல்கள் நுழையாத வீடுகளே உலகத்தில் இல்லை. சீனாவில் அதன் பெயர் பீனிக்ஸ் டி.வி; ஆசியாவின் மற்ற நாடுகளில் ஸ்டார் டி.வி. ஆசியாவில் மட்டும் 7 மொழிகள், 30 சானல்களில் ஒளிபரப்பு செய்கிறது ஸ்டார் டி.வி. இவையன்றி டுவென்டியத் செஞ்சுரி பாக்ஸ் எனும் ஹாலிவுட் திரைப்பட நிறுவனம், ஃபாக்ஸ் தொலைக்காட்சி வலைப்பின்னல், கேபிள் டி.வி. சானல்கள், ஹார்ப்பர்காலின்ஸ் நூல் வெளியீட்டு நிறுவனம், பல்வேறு நாடுகளிலும் 130 தினசரி செய்தித்தாள்கள், வார மாத இதழ்கள்... இத்தனைக்கும் மேல் முர்டோக்கால் குத்தகைக்கு எடுக்கப்பட்ட கால்பந்து, கூடைப்பந்து போன்ற விளையாட்டுக் குழுக்கள்!

முர்டோக்கின் நியூஸ் கார்ப்பரேசன், சோனி, டிஸ்னி, டைம் வார்னர், விவேண்டி போன்ற ஏழு பன்னாட்டு நிறுவனங்கள் அமெரிக்காவின் அனைத்து தொலைக்காட்சி அலைவரிசைகளையும் கட்டுப்படுத்துகின்றன. ஹாலிவுட்டின் பெரும்பான்மையான ஸ்டூடியோக்கள் இவர்களுக்குச் சொந்தம்; உலகத்தின் ஒலிநாடா, இசைத்தட்டுச் சந்தையின் 85% இவர்களுடையது; உலகளவிலான பத்திரிகைகள், நூல் வெளியீட்டகங்கள், தொலைக்காட்சி அலைவரிசைகள் போன்ற தகவல் ஊடகங்களின் பெரும்பகுதியை இந்த ஏழு பன்னாட்டு நிறுவனங்கள் மட்டுமே கட்டுப்படுத்துகின்றன.

சோனி, எச்.எம்.வி என்ற இரு பன்னாட்டு நிறுவனங்கள் இந்தியாவின் ஒலிநாடா, ஒலித்தகடுச் சந்தையைக் கட்டுப்படுத்துகின்றன.

சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்னால் கூட, தகவல் ஊடகத்துறையில் இத்தகைய பிரம்மாண்டமான ஏகபோக நிறுவனங்கள் உருவாகவில்லை. பல்வேறு நாடுகளைச் சேர்ந்த சிறிய நிறுவனங்களை விலைக்கு வாங்கியும், பெரிய நிறுவனங்கள் இணைந்தும் இந்த ஏகபோகங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

இந்தியாவில் மட்டுமின்றி உலகம் முழுவதும் உள்ள பல நாடுகளில் அரசின் கட்டுப்பாட்டில் இருந்த வானொலி, வானொளி ஆகியவை தனியார் ஏகபோக முதலாளிகளின் கைகளுக்கு மாற்றப்பட்டுள்ளன.

தகவல் ஊடகங்கள் மற்றும் பொழுதுபோக்குத் துறையில் நடந்துள்ள இந்த உலகமயமாக்கம் என்பது கணினி, இணையம், செயற்கைக் கோள்கள், டிஜிடல் தொழில்நுட்பம் ஆகியவற்றின் விளைவாகத் தவிர்க்கவியலாமல் நடந்தேறிவிட்ட மாற்றமல்ல. விவசாயம் முதல் சுரங்கத் தொழில் வரை அனைத்திலும் நடைபெற்றுள்ள உலகமயமாக்கத்திற்கான அரசியல் பொருளாதாரக் காரணங்கள் தான் இதற்கும் காரணமாக அமைகின்றன.

ஆனால் மற்றெல்லாத் துறைகளைக் காட்டிலும் தகவல் ஊடகத்துறையின் உலகமயமாக்கத்தைத் துரிதப்படுத்துவதற்கும், எளிதாக்குவதற்கும் தொழில்நுட்பப் புரட்சி உதவியிருக்கிறது என்பதே உண்மை.

அதேபோல வானொலி வானொளி தனியார்மயமென்பது, அரசின் ஏகபோகத்திலிருந்து அவற்றை விடுவித்து ஜனநாயகப்படுத்தும் நோக்கில் நடந்ததல்ல. எடுத்துக்காட்டாக, ''சீனாவில் மனித உரிமையில்லை - ஜனநாயகமில்லை - எனவே வர்த்தகத்தடை'' என்றெல்லாம் முழங்கி வந்த அமெரிக்க அரசு, முர்டோக்கின் ஏகபோக உரிமையை சீனா ஏற்றுக் கொண்டவுடனே மனித உரிமைப்பாட்டை நிறுத்தி விட்டது. உலக ஏகபோகமே உலக ஜனநாயகம் என்ற உண்மை அம்பலத்திற்கு வந்துவிட்டது.

**மறுபங்கீடு - புதிய ஏற்பாடு!**

உலகமயமாக்கம் என்பது முர்டோக், பில்கேட்ஸ் போன்ற சில தனிப்பட்ட ஏகபோக முதலாளிகள் தங்களுக்குள் உலகின் செல்வவளங்களைப் பங்கிட்டுக் கொள்வதை மட்டும் குறிக்கவில்லை. நாடுகளின்

> **விண்ணிலிருந்து மண்ணிற்கு இறங்கி வந்த தேவ குமாரர்களும், தூதர்களும், அவதாரங்களும் சாதிக்க முடியாததை விண்ணிலிருந்தபடியே சாதித்திருக்கின்றன செயற்கைக் கோள் தொலைக்காட்சிகள். சாதி, மதம், வர்க்கம், தேசம், மொழி ஆகிய அனைத்து அடையாளங்களையும் 'நுகர்வோன்' என்ற ஒற்றை அடையாளத்தால் கவிழ்த்து மூடி விட்டன.**



படிப்பகம்

www.padippakam.com

எல்லையைக் கடந்து உலகம் முழுவதிலுமுள்ள பணக்கார வர்க்கங்கள் உழைக்கும் மக்களின் உடைமைகளையும், அவர்கள் இதுவரை பெற்றுவந்த உரிமைகளையும் பறித்துத் தங்களுக்குள் பிரித்துக் கொள்வது என்ற புதிய மறுபங்கீட்டையும் இது குறிக்கிறது.

தேசம், மொழி, இனம், மதம் போன்ற வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு, இப்படிக் கொள்ளையடித்த சொத்தையும், உழைப்புச் சுரண்டலின் ஆதாயத்தையும் தங்களுக்குள் பங்கு போட்டுக் கொள்கிறார்கள் பணக்காரர்கள். உலகமயமாக்கம் என்ற இந்தப் 'புதிய ஏற்பாடு' இவர்களுக்கு அளிக்கின்ற ஆதாயம், தேசியம் என்ற 'பழைய ஏற்பாடு' அளித்துவந்த ஆதாயத்தைக் காட்டிலும் கவர்ச்சிகரமானதாகவும், விரைவானதாகவும், அளவிட முடியாததாகவும் இருக்கிறது.

எனவே இந்தப் புதிய முதலாளித்துவ சர்வதேசியத்திற்கு உகந்த சித்தாந்தத்தையும், அறநெறிகளையும், வாழ்க்கைப் பாணியையும், கலை ரசனையையும், பயன்பாட்டையும், சுருங்கச் சொன்னால் - ஒரு 'முதலாளித்துவ உலக ஆத்துமா'வை, முதலாளித்துவ உலக மனிதனின் ஒரு வகை மாதிரியை உருவாக்குவது அவர்களுக்குத் தேவையாக இருக்கிறது.

**நுகர்வு மதம்!**

பங்குப் பத்திரங்களை இணைத்து உலக ஏகபோகத்தை உருவாக்கி விடலாம்; ஆனால் இசையில் உலக ரசனையையும், உணவிலும் பானங்களிலும் உலகச் சுவையையும், ஆடை ஆபரணங்களில் உலகப் பாணியையும் உருவாக்குவது அத்தனை எளிதல்ல என்பது உண்மைதான்.

எனினும், இந்தியாவின் மொழி வேறுபாடுகள், வளைகுடா நாடுகளின் மத நம்பிக்கை, ஆப்பிரிக்காவின் பழங்குடிப் பண்பாடு, ஐரோப்பாவின் தேசிய மரபுகள் இவை அனைத்தையும் வெற்றி கொள்ளும் ஆற்றல் பெற்ற புதிய சித்தாந்தமாக, அறநெறியாக, புதியதொரு மதமாகப் பரவி வருகிறது நுகர்வியம்.

இனம், மொழி, இறை நம்பிக்கைகள், சடங்குகள் ஆகியவற்றைக் கடந்து, வெற்றி கொண்டு தங்களது மதக் கோட்பாட்டையும், நெறிமுறைகளையும், பண்பாட்டையும் பரப்புவதற்கு கிறித்தவமும், பவுத்தமும், இசுலாமும் பல நூற்றாண்டுகளை எடுத்துக் கொண்டன. பல போர்களை எதிர்கொண்டன.

விண்ணிலிருந்து மண்ணிற்கு இறங்கி வந்த தேவ குமாரர்களும், தூதர்களும், அவதாரங்களும் சாதிக்க முடியாததை விண்ணிலிருந்தபடியே சாதித்திருக்கின்றன செயற்கைக் கோள் தொலைக்காட்சிகள். சாதி, மதம், வர்க்கம், தேசம், மொழி ஆகிய அனைத்து அடையாளங்களையும் 'நுகர்வோன்' என்ற ஒற்றை அடையாளத்தால் கவிழ்த்து மூடி விட்டன.




பாகிஸ்தானியோ இந்தியனோ அவன் கோக் அடிமை; யூதனோ இசுலாமியனோ அவன் கென்டகி கோழிக்கறி பிரியன்; வியத்நாமியனோ அமெரிக்கனோ அவன் நைக் காலணி பயன்படுத்துபவன்; கனடியனோ சீனனோ அவன் பிரிட்னி ஸ்பியர்சின் விசிறி.

சாதி எல்லைகளோ தேசிய மோதல்களோ, மொழிப்பாகுபாடோ வர்க்க முரண்பாடுகளோ, ரசனையிலும் நுகர்தலிலும் இவர்களிடையே உள்ள இந்த ஒற்றுமையைக் குலைக்கவில்லை. தடுக்கவுமில்லை.

**சாம்பல் திருநீராகும் – கோக் கொள்கையாகும்!**

காலணியும், குளிர்பானமும் சித்தாந்தம் அல்லவே! இவற்றைப் பயன்படுத்துவோரும் இவற்றின் மீது மயக்கம் கொண்டவர்களும் தங்கள் இன, மொழி, வர்க்க உணர்வுகளைத் துறந்தவர்கள் என்றோ, அவற்றுக்குத் துரோகமிழைக்கக் கூடும் என்றோ எப்படிக் கூற முடியும் எனக் கேட்கலாம்.

திருநீறு எனப்படுவது வெறும் சாம்பல்தான். ஆனால் அதுவே சிவன் கோயில் அர்ச்சகர் கையால் வழங்கப்படும் போது அதன் பெயர் பிரசாதம். ஒரு தாழ்த்தப்பட்டவன் அதை வாங்கி நெற்றியில் பூசிக் கொள்ளும் போது அதன் பொருள் வருணாசிரம அடிமைத்தனம்.

கோக் என்பது அமெரிக்க அடிமைத்தனத்தை ஆவலுடன் ஏற்றுக் கொள்ளும் ஒரு விழுமியம். நைக் என்பது ஒரு கொள்கை. 50 ரூபாய் கூலிக்கு ஆசியச் சிறுமிகளால் உற்பத்தி செய்யப்படும் நைக் காலணியை 5000 ரூபாய்க்கு விற்பது மட்டுமல்ல, அதை வாங்குவதும் ஒரு கொள்கைதான்.

நுகர்வியம், ஆடம்பர மோகம், வர்க்க ஏற்றத்தாழ்வையும், சுரண்டலையும் இயற்கையானவையாகக் கருதுவது, தனிநபர்வாதத்தைப் போற்றுவது, அரசியலற்ற விட்டேற்றித்தனம், அரசியல் நடவடிக்கைகளை ஏளனமாகக் கருதுதல்... போன்ற இவையனைத்தும் மேற்படி பொருட்களுக்குள் உறைந்திருக்கும் சித்தாந்தங்கள்.

நுகர் பொருட்கள், வாழ்க்கைப் பாணி, சித்தாந்தம், கலை ரசனை ஆகியவற்றைப் பன்னாட்டு நிறுவனங்கள் தனித்தனியே வழங்குவதில்லை. ''ஒன்று வாங்கினால் மற்றவை இலவசம்'' என்ற அடிப்படையில் தான் அவை வழங்கப்படுகின்றன.

**முதலாளித்துவ உலகாத்மா!**

''என்னுடைய ஃபாஷன், வாழ்க்கைப் பாணி என்னுடைய இசை இவற்றுடன் சிக்கெனப் பொருந்துகிறது எக்ஸ்டசி (போதை) மாத்திரை'' என்று இந்தத் தொடரின் முதல் பகுதியில் குறிப்பிடப்பட்ட தாய்லாந்து இளைஞனின் பேட்டியை இங்கே நினைவுபடுத்திக் கொள்ளலாம்.

www.padippakam.com




அல்லது 'முதலாளித்துவ உலகாத் மாக்களின்' வரைவிலக்கணத்தை மேலும் தெளிவாகப் புரிந்து கொள்ள விரும்புவோர் சமீபத்திய இந்தியா டுடே இதழின் (ஜுலை-2, 2001) அட்டைப் படக் கட்டுரையைப் படிக் கலாம்.

''அதிருஷ்டசாலிப் பிள்ளைகள்'' என்று தலைப்பிடப்பட்டுள்ள அந்தக் கட்டுரை, 1980களில் பிறந்து தற்போது வாலிபப் பருவத்தில் துள்ளிக் கொண்டிருக்கும் இந்திய மேல்தட்டு வர்க்கக் குலக்கொழுந்துகளின் வாழ்க்கைப் பாணி, சித்தாந்தம், ரசனை முறை ஆகியவற்றைப் பொறாமை கலந்த மகிழ்ச்சியோடு (அதாவது நுகர்வு மதத்துக்கே உரிய உணர்ச்சியோடு) விவரிக்கிறது.

''பொருளாதாரச் சீர்திருத்தத்தின் மூலம் இந்தியாதனது கதவுகளை உல கத்திற்கே திறந்து விட்ட காலகட் டத்தில் பிறந்த தன்னம்பிக்கையின் சின்னம் இந்த இளையதலைமுறை. இவர்களது உலகம் சுருங்கிவிட்டது. உலகத்தின் ஃபாஷன்களை இணை யமும் தொலைக்காட்சியும் உடனுக் குடன் இவர்களுக்கு அளிக்கின்றன.''

''பத்தாண்டுகளுக்கு முன்பு வரை கூட இருந்த மோதல்கள், பற்றாக்கு றைகள், கட்டுப்பாடுகள் எதுவுமில்லாத அமைதி யான வாழ்க்கை! தேர்ந்தெடுக்க ஏராள மான 'வாய்ப்புகள், பொருட்கள்! என வேதான் இவர்களை அதிருஷ்டசாலிகள் என்கிறோம்''

''சர்வதேசத் தரம் வாய்ந்த (பிராண்டு) பொருட்கள், பையில் உள்ள பணம் போதுமா என்ற பயமில்லாமல் செலவு செய்ய கிரெடிட் கார்டுகள், செல்போன், இரவு விருந்துகள், திரு மண பந்தத்தில் சிக்க விரும்பாத 'படுகாஷுவ லான' பாலுறவுகள், போட்டி மனப் பான்மை, குற்றவு ணர்வோ தயக்கமோ இல்லாமல் தனக்கு விருப்பமானதை அனுப விக்கும் மனப்போக்கு, அதை அனைவருக்கும் வெளிச்சம் போட்டுக் காட்டும் தைரியம்... இந்திய வரலாற்றிலேயே அதிருஷ்ட சாலித் தலைமுறை இதுதான்!''

முதலாளித்துவம் வழங்கும் உலக மனிதனின் சுருக்கமான வாழ்க்கைக் குறிப்பு இதுதான். ஆசையைத் துறப் பது, தேசத்துக்காகத் தியாகம் செய்வது, பரலோகத்தை எண்ணிப் பட்டினி கிடப்பது போன்ற பல சித்தாந்தங்களை மக்களுக்கு உப தேசம் செய்து, தானும் அதைக் கடைப்பிடிப்பது போல நடித்து வந்த ஆளும்வர்க்கம், தன்னுடைய உண்மையான சித்தாந்தத்தைத் தயக்க மின்றிப் பிரகடனம் செய்கிறது.

வகை வகையாகத் தின்பது, விதவி தமாய் உடுத்துவது, ரகம் ரகமாய் குடிப்பது, போதையும் வெறியும் கொண்டு ஆடுவது, பல உடல்க ளுடன் பாலுறவு கொள்வது, இப்படிப் பன்றியைப் போல வாழ்வது குறித்து குற்றவுணர்வு கொள்ளாமல் இருப்பது!

**சீருடை அணிந்த பக்தர்கள்!**

மூன்றே வார்த்தைகளில் இந்த உல காத்மா தத்துவத்தைத் தொகுத்துச் சொல்கிறது ஒரு பன்னாட்டு ஆடை தயாரிப்பு நிறுவனம் - ''நீங்கள் நீங்க ளாகவே இருங்கள்!''

''எங்கள் கம்பெனியின் ஆடை களை உடுத்துவதன் மூலம்'' - என்பது கூறாமல் தொக்கி நிற்கும் வாசகம். உலகெங்கும் இந்த ஆடைக்குள் புகுந்து கொண்டிருக்கும் உலகாத் மாக்கள் தங்கள் தனித்துவம் நிலை நாட்டப்பட்டு விட்டதாக எண்ணிக் கொள்கிறார்கள். ஆனால் தனிநபர் வாதத்தைத் தூண்டிவிடும் இந்த விளம்பரம் தனிநபர் ஆளுமையை ஒழித்துக் கட்டி அவர்களை நுகர்வு மதத்தின் சீருடை அணிந்த பக்தர்க ளாக்கி விடுகிறது.

மாணவர்கள், அலுவலர்கள், அதி காரிகள், கணினி வல்லுனர்கள், பாப் பாடகர்கள் என்று ஒவ்வொரு பிரிவின ருக்குமான உலக 'ஸ்டைல்' எது என்று பன்னாட்டு நிறுவனங்கள் தீர்மானிக் கின்றனவோ அதுதான் அங்கீகரிக்கப் படுகிறது.

ஏ.ஆர். ரகுமானின் 'வந்தே மாதரம்' 18 நாடுகளில் விற்பனை செய்யப்பட வேண்டுமானால் அதன் இசை மட்டுமல்ல, ரகுமானின் தலை முடியும், சோனி நிறுவனம் கூறுகின்ற சர்வதேச பாப் பாடகனின் ஸ்டைலில் திருத்தியமைக்கப்பட வேண்டும்.

கையில் கோக்கும், காலில் நைக்கும் இருந்தால்தான் கீழ் வர்க்கத்து இளைஞன் மேல் தட்டுப் பெண்ணை கானாவிலே கலாய்க்க அனுமதி உண்டு.

**உலக இசைக்குத் தமிழ்க்கருவி தமிழ்ச் சந்தைக்கு உலகமொழி!**

இது உலகச் சந்தை. உலகக் கலாச் சாரம். அமெரிக்கா இதில் மேல்நிலை வகிப்பதால் அமெரிக்க சொர்க்கத்தின் சுவடுகள் இதில் அழுத்தமாகப் பதிந்

> உலகெங்கிலுமுள்ள மேட்டுக் குடியினரின் உல்லாசம், விட்டேற்றித்தனம், களிவெறி, அனுபவிக்கத் துடிக்கும் ஆசை, அதில் தோல்வியுற்றதால் நேர்ந்த விரக்தி, விரகம், காதல் போல் தோன்றும் காமம், கலகம் போல் தோன்றும் தனிநபர்வாதம், வீரம் போல் தோன்றும் சாகசம், அக்கறை போல் தோன்றும் மேட்டுக்குடி இரக்கம், இவைதான் 'உலக' இசையின் உள்ளடக்கங்கள்.


படிப்பகம்

www.padippakam.com

துள்ளன. மற்றப்படி ''உலகச் சந்தைக்கு வலை விரி - உள்ளூருக்கு ஏற்ப கடைவிரி'' (Think Globally - Act Locally) என்பதுதான் பன்னாட்டு நிறுவனங்களின் தாரக மந்திரம்.

எனவே மைக்கேல் ஜாக்சனின் பாடலுக்குள் பரதநாட்டியம் வரும்; அமெரிக்க பாப் பாடல்களில் ஆப்பிரிக்க இசைக்கருவிகள் வரும்; பிரிட்டனின் இசைத் தொகுப்புகளில் பஞ்சாபி பாங்க்ரா வரும்; ஹாலிவுட்டிலிருந்து ரகுமானுக்கு அழைப்பு வரும்; ''இனித் தமிழிசை இந்துஸ்தானி இசையெல்லாம் கிடையாது. உலக இசைதான்'' என்று ரகுமானின் பேட்டியும் வெளிவரும்.

உலகின் இசை முறைகளையும், இசைக் கருவிகளையும் தின்று செரிக்கும் இந்த உலக இசையில் ஏழை நாட்டு மக்களின் உணர்வுகளுக்கு எவ்வளவு இடமிருக்கும்? ஏழை நாடுகளின் கோரிக்கைகளுக்கு உலக வர்த்தக் கழகத்தில் எவ்வளவு இடம் இருக்கிறதோ அவ்வளவுதான் இருக்கும்.

உலகெங்கிலுமுள்ள மேட்டுக் குடியினரின் உல்லாசம், விட்டேற்றித் தனம், களிவெறி, அனுபவிக்கத் துடிக்கும் ஆசை, அதில் தோல்வியுற்றதால் நேர்ந்த விரக்தி, விரகம், காதல் போல் தோன்றும் காமம், கலகம் போல் தோன்றும் தனிநபர்வாதம், வீரம் போல் தோன்றும் சாகசம், அக்கறை போல் தோன்றும் மேட்டுக் குடி இரக்கம். இவைதான் 'உலக' இசையின் உள்ளடக்கங்கள்.

தொலைக்காட்சிப் பெட்டியின் ஒலியைக் குறைத்துவிட்டு படத்தைப் பார்த்தால் சன் டி.வி. ஜீ டி.வி. எம்.டி.வி நடனங்களுக்கிடையே பெரிய வேறுபாடு தெரிவதில்லை. ஒலியைக் கூட்டினாலோ இசையிலும் வேறுபாடு தெரியவில்லை. எல்லாத் தொடர்களும் மேட்டுக் குடிப் பிரச்சினைகளையே பேசுகின்றன. எல்லா மொழிகளையும் ஆங்கிலம் போலவே பேசுகிறார்கள் அறிவிப்பாளர்கள்,

சினிமாக் கொட்டகையிலோ நிலைமை தலைகீழாய் இருக்கிறது. ''மச்சி, மாப்ளே, கலரு, பிகரு'' என்று தமிழில் கலக்கி, தமிழர்கள் இதயத்திலும் கலக்கிறார் ஜாக்கிசான். டைட்டானிக் நாயகியோ அழகு தமிழில் பேசியபடியே ஆடையைக் களைகிறாள். ஹாலிவுட் பண்பாடே தமிழ்ப் பண்பாடாக டப்பிங் செய்யப்படுகிறது.

தமிழ் கதாநாயகிகளின் ஆடை வரவரக் குறைகிறதே என்று கேட்டால் நாங்கள் ஹாலிவுட் டப்பிங் படத்துடன் போட்டி போட வேண்டியிருக்கிறது என்கிறார்கள் இயக்குனர்கள்.

**பழையதைக் கொடு புதியதை வாங்கிக் கொள்!**

புதுமை ஏதும் இல்லாததனால் ரசிகர்களிடம் தோன்றக்கூடிய சலிப்பை முன்னறிந்து பாடகர் முதல் தொலைக்காட்சி அறிவிப்பாளர் வரை எங்கும் நட்சத்திரங்கள் உருவாக்கப்படுகிறார்கள்.

'ஒழுக்கம் ஒழிக' என்று பிரகடனம் செய்யும் நடிகையும் நட்சத்திரம். ''திருமணம் ஆகும் வரை கன்னிமை காப்பேன்'' என்று அறிவிக்கும் அமெரிக்கப் பாடகி பிரிட்னி ஸ்பியர்சும் நட்சத்திரம். குழந்தைகளைக் கொன்ற கொலைகாரனும் நட்சத்திரம். அவனைப் பேட்டிக் கண்டு புகழ் பரப்பும் பத்திரிகையானாலும் நட்சத்திரம்.

நட்சத்திரங்கள் இல்லையென்றால் பொழுது போக்குத் தொழிலே இல்லை. ஆனால் புதிய நட்சத்திரம் தோன்றிய மறுகணமே பழைய நட்சத்திரம் உதிர்ந்து விடுகிறது.

புதிய உலக அழகி தேர்ந்தெடுக்கப்பட்டவுடனே பழைய அழகி மவுசிழந்து கிழவியாகி விடுகிறாள். புதிய பிராண்டு டேப் ரிகார்டர் வந்தவுடனே சமீபத்தில் வாங்கியது கூட ஊனமுற்றதைப் போலத் தோன்றுகிறது.

''பழையதைக் கொடு - புதியதை வாங்கிக் கொள்'' என்ற விளம்பரம் ''பாவத்தைக் கொடு - சொர்க்கத்தைப் பெற்றுக் கொள்'' என்ற தேவகுமாரனின் குரல் போல நுகர்வோரின் காதுகளில் ஒலிக்கிறது.

''இந்தப் பாடல் ஒலிப்பேழையை ஏன் வாங்கினீர்கள்? இந்தப் புதிய சேலையில் என்ன சிறப்பு? இந்தத் தின்பண்டத்தில் என்ன புதிய சுவை? எல்லாக் கேள்விகளுக்கும் நுகர்வோரிடமிருந்து ஒரே விடைதான் கிடைக்கிறது. ''இதுதான் பிரபலமானது - இதுதான் எல்லோரும் வாங்குவது - எனவே நானும் வாங்கினேன்.''

ஓடுகின்ற நாயின் பின்னால், ஏன் எதற்கு என்ற காரணம் தெரியாமல் தலைதெறிக்க ஓடும் தெரு நாய்களின் நடத்தைக்கும் நுகர்வோரின் நடத்தைக்கும் வேறுபாடு தெரிவதில்லை.

**உட்கார் – வாயை மூடு – வாங்கு!**

''துணி துவைக்கும் நேரம் மிச்சம் இந்த எந்திரத்தை வாங்கு; பேருந்தில் செல்லும் நேரம் மிச்சம் - இந்த வண்டியை வாங்கு; சமையல் செய்யும் நேரம் மிச்சம் - இந்த அடுப்பை வாங்கு'' என்கின்றன விளம்பரங்கள். மிச்சமான பொழுதை என்ன செய்வது?

''பொழுதைப் போக்கு. டி.வி. பார். விளம்பரம் பார். மீண்டும் வாங்கு.''

''உட்கார் - வாயை மூடு, வாங்கு'' (Sit Back, Shut up and Shop) இதுதான் பொழுதுபோக்குத் தொழில் நுகர்வோருக்கு இட்டிருக்கும் கட்டளை. விளம்பரங்களைக் கண்டு வாய் பிளக்கும் சில சந்தர்ப்பங்களைத் தவிர வேறெப்போதும் நுகர்வோர் இந்த கட்டளையை மீறுவதில்லை.

— தொடரும்


## புதிய வெளியீடு




இந்தியப் புரட்சி வரலாற்றில் வசந்தத்தின் இடி முழக்கமாய் உதித்த நக்சல்பரி இயக்கத்தின் வரலாறு, அதன் இன்றைய தேவையைப் புரிய வைக்கும் முக்கியமான அரசியல் உரை.

இரண்டு பேழைகள் ரூ. 60.00
தபால் செலவு ரூ. 20.00

தேவைப்படுவோர், புதிய கலாச்சாரம் அலுவலக முகவரிக்கு இரா. சீனிவாசன் பெயருக்கு பணம் அனுப்பவும்.


படிப்பகம்

www.padippakam.com

# உலகச் சந்தையில் விலை போகிறார் தேசிய நாயகன்

**தந்தை:** மகனே, உனக்கு வாழ்க்கையில் எப்போதுமே ஒரு இலட்சியம் இருக்க வேண்டும். எதைச்செய்தாலும் திறம்படச்செய்ய வேண்டும். நீ விளையாட்டு வீரன். உங்கள் கல்லூரியிலேயே முதல் வீரனாக வரவேண்டும்.

**மகன்:** அப்புறம்?

**தந்தை:** அப்புறம் மாநிலத்திலேயே சிறந்த வீரன், பிறகு இந்தியாவிலேயே சிறந்த வீரன்.

**மகன்:** பிறகு...

**தந்தை:** உன்னை வெல்லப்பட முடியாதவன், மேதை... என்று உலகமே கொண்டாடும்.

**மகன்:** பிறகு...

**தந்தை:** பிறகு... பிறகு நீ ஒரு பிராண்டு (Brand) ஆகிவிடுவாய்.

**மகன்:** பிராண்டு என்றால் என்னப்பா?

**தந்தை:** பிராண்டு என்றால்... ஒரு பொருளின் குறியீடு, அந்தப் பொருளின் சிறப்புத் தன்மையைக் குறிக்கும் குறியீடு. சிறப்புத் தன்மை என்று சொன்னால் அதனுடைய உபயோகம் என்று புரிந்து கொள்ளக் கூடாது. அந்தப் பொருளின் தரம் என்றும் சொல்லிவிட முடியாது.

ம்... விளம்பர வல்லுனர்கள் என்ன சொல்கிறார்களென்றால், ஒரு பொருளின் பயன்பாட்டை மீறிய சில குணாதிசயங்கள் - அதாவது கவர்ச்சிகரமான அதன் உறை, அதன் பெயர், வரலாறு, அதன் பிரபலத்தன்மை, அந்தப் பொருள் விளம்பரம் செய்யப்படும் முறை...

**மகன்:** ''லக்ஸ், சினிமாநட்சத்திரங்களின் அழகு சோப்'' என்று விளம்பரப்படுத்துகிறார்கள். ஆனால் தங்கள் நாயைக் குளிப்பாட்டக் கூட அவர்கள் அந்த சோப்பைப் பயன்படுத்துவதில்லை. இருந்தாலும் பாமர மக்கள் அந்த விளம்பரத்தை நம்புகிறார்கள். இந்த நம்பிக்கையை பிராண்டு என்று சொல்லலாமா?

எப்படியிருந்தாலும் ஒரு மனிதன் எப்படி பிராண்டு ஆக முடியும்?

**தந்தை:** மனிதர்கள் பிராண்டு ஆக முடியாது என்பது உண்மைதான். மாமனிதர்கள்தான் பிராண்டு ஆக முடியும். டெண்டுல்கரைப் பார். 100 கோடி ரூபாய்க்கு மங்கரேனஸ் என்ற விளம்பர ஏஜெண்டிடம் தன்னை விற்றிருக்கிறார். ஏற்கனவே பெப்சி, பிரிட்டானியா, பூஸ்ட், எம்.ஆர்.எஃப் டயர், அடிடாஸ் ஷூ இப்படிப் பல கம்பெனிகள் தங்கள் பொருளை விளம்பரம் செய்ய தலா ஒண்ணரை கோடி ரூபாய் ஆண்டுதோறும் தருகிறார்கள்.

இவையில்லாமல் அடுத்த 5 ஆண்டுகளில் டெண்டுல்கரை வைத்து விளம்பரம் செய்யும் புதிய கம்பெனிகளைத் தேடி 100 கோடி ரூபாயை அந்த ஏஜெண்டு சம்பாதித்தாக வேண்டும்.

டெண்டுல்கருக்கு கவலை இல்லை. மங்கரேனஸ் சொல்லும் பனியனையோ, ஜட்டியையோ, துடைப்பக் கட்டையையோ காட்டி ''இதை வாங்குங்கள்'' என்று சொன்னால் போதும். டெண்டுல்கர் மேல் இருக்கும் நம்பிக்கையினால் மக்கள் அதை வாங்கி விடுவார்கள்.

**மகன்:** அப்படிப் பார்த்தால் ஜெயலலிதா கூட ஒரு பிராண்டு தானே? ''இவருக்கு ஓட்டுப் போடுங்கள்'' என்று யாராவது ஒரு முட்டாளைக் கைகாட்டினாலும் என்மீது உள்ள நம்பிக்கையால் மக்கள் ஓட்டுப்போடுகிறார்கள் என்கிறாரே. அவரும் ஒரு பிராண்டுதானே.

**தந்தை:** ம்... ஒரு வகையில் அதுவும் சரிதான்.

**மகன்:** ஆனால் அவர் கைகாட்டும் நபர் சாராய வியாபாரியாகவோ கொலைகாரனாகவோ இருந்துவிட்டால் என்ன செய்வது? அதற்கு 'பிராண்டு' பொறுப்பேற்க முடியுமா?

**தந்தை:** தார்மீகப் பொறுப்பு இருக்கிறதே. பதில் சொல்லித்தான் ஆக வேண்டும்.

**மகன்:** அப்படியானால் பெப்சி, அடிடாஸ் என்று வெளிநாட்டுப் பொருட்களாகவே பார்த்து ''இதை வாங்குங்கள்'' என்று டெண்டுல்கர் கைகாட்டி விடுகிறாரே அவருக்கு தார்மீகப் பொறுப்பு கிடையாதா?

**தந்தை:** அரசியலையும் விளையாட்டையும் முடிச்சுப் போடாதே.

**மகன்:** நான் பிராண்டைப் பற்றித்தான் பேசுகிறேன். அரசியலோ, விளையாட்டோ பிராண்டுகளுக்கு தார்மீகப் பொறுப்பு உண்டா இல்லையா? மேலும் நம்முடைய தேசிய நாயகன், விதேசிப் பொருட்களுக்கு விளம்பரம் செய்யலாமா?

**தந்தை:** இதோ பார். அவர் ஒரு விளையாட்டு வீரர். அவரைத் தலைசிறந்த ஆட்டநாயகன் என்று உலகமே கொண்டாடுகிறது. தேசம் ஈசம் எல்லாம் நீங்கள் சேர்த்துக் கொள்வது. சொல்லப் போனால் அவர் தேடித்தந்த பெருமைக்கு தேசம்தான் அவருக்குக் கடமைப்பட்டிருக்கிறது.

**மகன்:** அரசியல்வாதிகள் கூட இவ்வளவு மோசமாகப் பேசுவதில்லை தந்தையே.



பிராண்டு டெண்டுல்கர் – ஏஜெண்டு மங்கரேஸிடம் தன்னுடைய 'திறமை'யால் கிடைத்த புகழை 100 கோடி ரூபாய்க்கு விற்கிறார்.

www.padippakam.com

**தந்தை:** அரசியல்வாதிகளின்பேச்சை எடுக்காதே. அவர்கள் மட்டும் தங்களை நல்ல விலைக்கு விற்றுக் கொள்வதில்லையா? கட்சி, கொள்கை என்று ஏதாவது சொல்லி ஒரு கூட்டத்தைச்சேர்த்துக் கொண்டு, அந்தக் கூட்டத்தைக் காட்டி தொழில பதிபர்களிடம் காசு வாங்குவதில்லையா? சூட்கேசை வாங்கிக் கொண்டு கட்சி மாறுவதில்லையா? இளைஞனாக இருந்து கொண்டு பழமைவாதியைப் போலப் பேசாதே. ஒரு குடிமகன் தன்னுடைய சொந்த விருப்பத்தின்பேரில்தன்னைவிற்றுக் கொள்ளக் கூட உரிமை இல்லையென்றால், அப்புறம் ஜனநாயக நாடு என்று நாம் பீற்றிக் கொள்ள முடியுமா?

**மகன்:** மன்னிக்க வேண்டும். ''தன்னை விற்றுக் கொள்வது'' என்று நீங்கள் பயன்படுத்தும் சொற்பிரயோகமே மிகவும் ஒழுக்கக் கேடானதாக எனக்குப் படுகிறது.

**தந்தை:** எது ஒழுக்கக்கேடு? அசாருதீனும், குரோனியேவும், ஜடேஜாவும் தங்கள் ஆட்டத்திறமையை விற்றார்கள். டெண்டுல்கரோ ஆட்டத்திறமையால் தனக்குக் கிடைத்திருக்கும் நன்மதிப்பை விற்கிறார். அதையும் ரகசியமாகச் செய்யவில்லை. உலகறியப் பகிரங்கமாகச் செய்கிறார்.

அரசியலில் கூட நல்லொழுக்கத்தை நிலைநாட்ட அறிஞர் பெருமக்கள் என்ன யோசனை சொல்கிறார்கள்? முதலாளிகளிடமும் தொழில் நிறுவனங்களிடமும் ரகசியமாகப் பணம் வாங்காதீர்கள். வெளிப்படையாக ரசீது கொடுத்து நன்கொடை வாங்குங்கள் என்று தானே சொல்கிறார்கள்?

**மகன்:** சரி. டெண்டுல்கர் 100 கோடி வாங்கியிருக்கிறார். அவரை வைத்து விளம்பரம் வாங்க வேண்டுமானால் அவர் அடுத்த 5 ஆண்டுகளுக்கும் நட்சத்திரமாகவே நீடிக்க வேண்டும். ஏதோ ஒரு காரணத்தால் அது முடியாமல் போனால்? ஆஸ்திரேலியாவில் நடந்ததைப் போல சிறந்த வேகப்பந்து வீச்சாளர்களைச் சமாளிக்க முடியாமல் அவர் தடுமாறினால்?

தனது 100 கோடி ரூபாயைக் காப்பாற்றிக் கொள்ள பந்து வீச்சாளர்களுக்குச் சில லட்சங்களை மங்கரேனஸ் தள்ளிவிடமாட்டார் என்பதற்கு என்ன உத்திரவாதம்?

**தந்தை:** வாங்கினால் அது அந்த ஆட்டக்காரரின் தவறு. மந்திரி கூட தொழிலதிபரிடம் லஞ்சம் வாங்குகிறான். அதற்குத் தொழிலதிபரைக் குற்றம் சொல்ல முடியுமா? உனக்குத் திறமையிருந்தால் டெண்டுல்கரைப் போல நேர்வழியில் சம்பாதிக்க வேண்டியதுதானே?

**மகன்:** அவரவரும் தன் திறமையை வைத்துச் சம்பாதித்துக் கொள்ளலாமென்றால் குழுவின் ஒற்றுமை எப்படி இருக்கும்?

**தந்தை:** அதற்காகத் திறமைசாலிகளும் திறமையற்றவர்களும் சமமாகிவிடமுடியுமா? நம் நாடு முன்னேறாததற்குக் காரணமே இந்த சோசலிசப் பேச்சுதானே!

**மகன்:** இறுதியாக ஒரு சந்தேகம். டெண்டுல்கர் பெப்சி விளம்பரத்தில் தோன்றுகிறார். நமது ஆட்டக்காரர்களிலேயே சிலர் கோக் விளம்பர மாடல்களாகத் தோன்றியிருக்கிறார்கள். இரண்டு நிறுவனங்களுக்குமிடையில் விளம்பரச் சண்டையெல்லாம் நடந்திருக்கிறது.

பெப்சி - கோக் சண்டை மைதானத்திற்கும் வராது என்பதற்கு என்ன நிச்சயம்? ஒரு கோக் வீரர் எதிர்முனை ஆட்டக்காரராக நின்று பெப்சி வீரரான டெண்டுல்கரைக் கவிழ்க்க மாட்டார் என்பதற்கு என்ன உத்திரவாதம்? ஒவ்வொருவரும் தங்களது பிராண்டு மதிப்பைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டுமல்லவா?

**தந்தை:** இந்த சிந்தனையே ஆபத்தானது. குழு என்றால் என்ன - ஒரு கூட்டு முயற்சி. குழுவை இணைப்பது எது? தேசப்பற்று. நாட்டுப்பற்று இல்லாதவன்தான் காசு கொடுப்பவனுக்கெல்லாம் தன்னை விற்றுக் கொள்ள முடியும். அதே நேரத்தில் தன்னுடைய திறமையால் கிடைத்த புகழை, நல்ல விலைக்கு விற்றுக் கொள்ள ஒரு மனிதனுக்கு உரிமை இல்லையா, என்ற கேள்வியும் இருக்கத்தான் செய்கிறது.

**மகன்:** என்னிடம் எந்தக் கேள்வியுமில்லை - தந்தையே.

● சூரியன்

## விவசாயத்திற்கு விலையில்லை, விளையாட்டிற்கு விலையுண்டாம்!

இந்திய அணியினர் இதுநாள் வரை தமது சீருடையில் அணிந்து வந்தது, வில்ஸ் சிகரெட்டின் விளம்பரம். சிகரெட் விளம்பரங்களை அணியக்கூடாது என்று முடிவானவுடனே இந்திய 'வீரர்கள்' சோகத்தில் ஆழ்ந்தனராம். ஏனென்றால் ஒருநாள் போட்டியில் ஆடினால் இந்த விளம்பரச் சீருடைக்காக மட்டும் ஒரு ஆட்டக்காரருக்குக் கிடைக்கும் தொகை ரூ. 1.3 லட்சம். பிறகு சகாரா என்றொரு புதிய நிறுவனம் ஒப்பந்தம் போட்டபிறகுதான் அவர்கள் முகம் மலரத் தொடங்கினராம்.

கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் தற்போது தங்களுக்கு அளிக்கும் சன்மானத் தொகைபோதாதென்றும், ஒப்பந்த அடிப்படையில் கட்டணம், மூத்த வீரர்களுக்கு அதிகக் கட்டணம், சம்பளம் போன்ற கோரிக்கைகளை வைத்துள்ளார்கள் ஆட்டக்காரர்கள். இந்தக் கோரிக்கை பல கேள்விகளைக் கிளப்பியுள்ளது.

''இந்திய அணியின் ஆட்டக்காரர் என்ற காரணத்திற்காகவே அரசுநிறுவனங்களின் உயர் பதவிகளில் வேலை வாய்ப்புப் பெற்று, வேலை செய்யாமலேயே சம்பளம் வாங்குகிறார்கள். அணியில் விளையாட சம்பளம் வேண்டுமென்றால் அரசுவேலையை ராஜினாமா செய்வார்களா?''

''ஆட்டத்துக்குத் தகுந்த காசு என்று மாற்றலாம். ஆனால் ஒவ்வொருவரும் தங்கள் வருமானத்தைக் குறிவைத்து குழுவின் நலனுக்கு குழிபறித்து விட்டால் என்ன செய்வது?''


இப்படிப் பலவிதமான கேள்விகளை எழுப்பி ஆராய்ச்சி நடத்தி வருகின்றன பத்திரிகைகள். புதிய பொருளாதாரக் கொள்கையின் தீவிர ஆதரவாளரான ''டைம்ஸ் ஆப் இந்தியா'' நாளேடு தனது தலையங்கத்தில் ஒரு யோசனை கூறியிருக்கிறது.

''வீரர்களுக்குக் குறைந்தபட்ச விலை நிர்ணயம் செய்யலாம்; அதற்கு மேல் சிறப்பாக ஆடுபவர்களுக்குக் கூடுதல் தொகை தரலாம்'' என்கிறது அந்தத் தலையங்கம்.

தேயிலை, கரும்பு போன்ற பொருட்களுக்கு விலை நிர்ணயம் கூடாது என்பது சுதந்திர வர்த்தகக் கொள்கை, ஆனால் விளையாட்டு வியாபாரத்துக்கு விலை நிர்ணயம் வேண்டும் என்று பேசும் நாக்கை அறுப்பதா? அல்லது ''தேசிய உணர்வை'' காப்பாற்றி ஏமாற்ற மனிதனைப் பொருளாக்கும் கேலிக் கூத்தை எண்ணிக் காறி உமிழ்வதா? ●

படிப்பகம்

www.padippakam.com



**சிறுகதை:**

# வெள்ளைப் பயங்கரம்

"என்ன வெளியூர் பயணமா?"

பழக்கப்பட்ட குரல் போல இருக்க, சந்தேகத்தோடு உற்றுப் பார்த்த வீரய்யன் சுதாரித்துக் கொண்டு "ஆ! வாங்க பாதர்... டீ குடிக்கிறீங்களா? தே! பாதர கும்பட்டுக்க" பக்கத்தில் நின்றிருந்த லெட்சுமி வெடுக்கென கும்பிட்டுக் கொண்டாள். முருகேசன் மேலும் ஃபாதரின் பார்வை விழ அவனும் பதிலுக்கு புன்னகைத்துக் கொண்டான்.

"பொண்ணு மாசமா இருக்கா பாதர்! அதான் திருப்பனந்தா ஆசுபத்திரிக்கு செக்கப்புக்கு அழைச்சிட்டு போறேன்." லெட்சுமியின் தலைக்கு மேலே வலது கையை உயர்த்திய ஃபாதர் முணுமுணுத்த படி ஜெபிக்க ஆரம்பித்தார். முருகேசன் வியப்பு மேலிட ஃபாதரை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். வீரய்யனும் காரைப்பல் தெரிய மலர்ந்த வாயை மூடாமல் ஃபாதரை வாஞ்சையுடன் பார்த்தான்.

"பாரு தாயி! நாம பாக்காம போனாலும் பாதரோட ஆசீர்வாதம் தேடி வந்துடுச்சி. அதான் யேசுவோட மயிமை! பொண்ணையும் அழச்சிட்டு அப்பறமா வாரேன் பாதர்"

"ஜெப வீட்டுக்கு வர அனுமதி என்ன! யாரும் வரலாம் கஷ்டப்படுற ஜனங்களுக்குத்தான் ஏசு கிருபை நிறைய உண்டு" தன்மையான ஃபாதருடைய பேச்சு பார்த்துக் கொண்டிருந்த முருகேசனுக்கு அவர்பால் ஆர்வத்தைக் கூட்டியது.

"பார்த்து! மகளை முன் பக்கமா உக்கார வச்சி அழைச்சிட்டு போங்க! செறுகுடி காலனிக்கு ஜெபிக்கப் போவனும், வரட்டுமா!", முருகேசனிடமும் தனியாகச் சொல்லி விடைபெற, வாயில் குதப்பிக் கொண்டிருந்த வெற்றிலைப் பாக்கை அவசரமாகத் திரும்பி துப்பிவிட்டு 'உம் வாங்க' என்று பணிவாகத் தலையாட்டினான்.

"வெள்ள சட்டை, வெள்ள பேண்ட பாத்தோண்ண நான் நம்ப ஊருக்குள்ள ஊசி போட வாற கம்மவுண்டருன்ல நெனச்சேன். யேசு கோவிலு பாதரா இவுரு, நல்ல மனுசனா இருக்காருப்பா."

"முருகேசா! நல்ல ராசியான பாதரு இவுரு. போயிடுவாளோ இருப்பாளோன்னு புள்ள காயிலா கெடந்தப்ப தெனமும் பண்ணவூட்டு தோப்புல சூரியன் வுழுவுற நேரம் வூட்டுக்கு வந்து நேரத்தபாக்காம ஜெபிப்பாரு பாரு, பெத்த நமக்கே அவ்ளோ ரோசன வராது, அவ்ளோ நல்ல மனுசன். நீயுந்தான் ஒருநாள் வாயேன்னா ரொம்ப ரோசிக்குற நீயு."

"அதுக்கில்ல வீரய்யா நம்ம பட்ற கஷ்டந்தான் தெரிஞ்சு கெடக்கு. மண்ணாலும் உதவி இல்ல, புள்ளையாலும் புரயோசனமில்ல. யாருகிட்ட போய் என்னத்த சொல்லண்ணு வெறுத்துப் போச்சு போ!"

"எல்லாம் நம்ப கையுலயா இருக்கு, மண்ணுக்கு மேல மவராசன் ஒருத்தன் இருக்கான்னு போவியா. நீ கேட்டாலும் கேளு, விட்டாலும் விடு. ஒரு தடவ பாதரு ஒரு மாலை ஜெபிச்சு கொடுத்தாரு பாரு! அதுக்கப்புறந்தான் இந்த கத்திரி செடியுல பூச்சி அடிக்கடி அடிச்சிட்டு இருந்ததே, நின்னுச்சுன்னு வச்சுக்க. அவ்வளவு ஒம எப்புடு இருந்ததும் போச்சு."

"அடுத்தவாரம் நானுந்தான் வர்ரேனே, பாக்கலாம். பஸ்சு வருது. பாத்து ஏறு தாயி முன்னால் போயி உட்காரு," முருகேசன் புதிய நம்பிக்கையுடன் புறப்பட்டான்.

●●●

"உங்கள் மனம் கஷ்டப்படாது இருங்கள்! ஆண்டவர் யாரையும் கைவிட்டாரில்லை, உங்கள் சரீர சுகவீனங்களை போக்குவார், இந்த வருசம் வெள்ளாமை இல்லையே, கூலி இல்லையே, அடகு போன தாலிக்குண்டை மீட்க முடியுமா! என மனம் கவலைப்படாது இருங்கள். உங்கள் கவலைகளை ஆண்டவரிடம் ஒப்புக் கொடுங்கள்!"

"உங்களது எல்லாக் கஷ்டங்களுக்கும் ஆண்டவரிடம் முறையிடுங்கள். எல்லாப் பிரச்சனைகளையும் ஏசு தீர்த்து வைப்பார். கவலை தரும் பிசாசுகளை விரட்டி மாற்றம் தருவார்..." ஃபாதர் பேசப் பேச பெண்களின் இமைகள் நனைந்தது. தன்னை அனாதையாக எண்ணிக் கொண்டிருந்த முருகேசனுக்கும் அழுகை வந்தது.

"உங்களால் முடிந்த பிரார்த்தனைக் கடனை கைகளை மூடிக் கொண்டு ஆண்டவனுக்கு அளியுங்கள்." அன்புக் கட்டளையிட்டபடியே ஃபாதர் பணம், காசை கையில் வாங்கக் கூடாது என்ற சாத்திரத்துடன் ஒரு கம்பியின் நுனியில் டீவடிகட்டி போல பெரிய சைசுக்கு இருந்த வலையை பொருத்திக் கூட்டத்தில் நீட்டினார். ஒவ்வொருவராய் கையை மூடியபடி வலைக்குள் காசுபோட முருகேசனும் தன் பங்குக்கு வெற்றிலைப் பொட்டலத்தைப் பிரித்தான். ஒவ்வொருவராய் ஃபாதரிடம் பேசிவிட்டு சென்றவுடன் தயங்கியபடியே முருகேசன் அருகே சென்றான்.

"வாங்க என்ன பிரச்சினை?"

"அன்னைக்கு பஸ் ஸ்டாப்புல வீரய்யனோட பாத்தேன்ல."

"உம்... தெரியுது, பெஞ்சுல உட்காருங்க" ஒரு முனையில் ஃபாதர் ஏசுவே என அமர மறுமுனையில் முருகேசன் உட்காரத் தயங்கி, நின்றபடி இருக்க ஃபாதர் மீண்டும் உட்காரச் சொல்லி வற்புறுத்தினார்.

"உட்காரு முருகேசா" பக்கத்திலிருந்த வீரய்யனும் உட்காரச் சொல்லிவிட்டு "பாதர், நம்ம செறுகுடி காலனிக்கு போற ரோட்டுமேலதான் முருகேசன் வீடு. ஒரு காலத்துல நல்லா வாழ்ந்த குடும்பம். 2



படிப்பகம்

www.padippakam.com

ரக்கர் மேல நில புலம் இருந்துச்சு. பொண்டாட்டி செத்தோன்னேயே எல்லாம் போச்சு. ஒரே ஒரு மவன், ஊர்ல பொழப்பு இல்ல, கேரளாவுக்கு மரம் வெட்ட போயிட்டான். வெவசாய வேலையும் சொகமில்ல. பொண்ண கட்டிக் கொடுத்த எடத்துலேயும் மாப்பிள்ளை ஒழுங்கா வேலைக்கு போகாம ஊர் சுத்துறான்; ஆ... ஊன்னா மவ மூக்க சிந்திகிட்டு வந்துடறா. இவன்கிட்டேயும் வருமானமில்ல விதிய நொந்துகிட்டு வாழறான். நீங்கதான் ஆசீர்வதிக்கனும் பாதர்.''

''ஏசுவோட கருணை எல்லாருக்கும் உண்டுப்பா! இல்லேன்னா, நீங்க இங்க வர சந்தர்ப்பம் வருமா. நம்ம வீரையன் மாதிரி நீயும் இருக்குற எடத்துலேயே கத்திரிச் செடி வெண்டச்செடி போட்டாகை செலவுக்கு ஆகுமில்ல. அதுக்காக ஏன் இடிஞ்சு உட்காரணும் தெனம். அரைமணி நேரமாவது ஏசுகிட்ட உங்க குறையச் சொல்லி பிரார்த்திங்க. ஜெபக்கூடம் வந்து பிரார்த்திங்க. அப்புறம் பாருங்க மாற்றத்த.''

''எங்க பாதர் கத்திரி செடி போட லாம்னா தண்ணி வசதி இல்ல'' முருகேசன் தனது குறைகளை முறையிட,

''பாத்தியா மொதல்ல ஆண்டவனை நினை! உன்னோட கஷ்டத்த மட்டும் நினைக்காத, ஏசுகிட்ட உன் குறைகளை ஒப்புக் கொடு, அப்புறம் பாரு!''

முருகேசனிடம் போகலாம் என்பது போல ஜாடை காட்ட வீரய்யன், ''சரி வர்றோம் பாதர்'' என்று முருகேசனையும் கும்பிடச் சொல்லி நகர்ந்தான்.

''முருகேசா இனி கவலையவுடு! பாதர் அப்படித்தான் சாதாரணமா சொல்லுவாரு. அப்புறம் பாரேன்... தானா எல்லா நன்மையும் நடக்கும்.''

●●●

காட்டாமணி வேலியைத் தாண்டி மோட்டார் போர்க்குழாய் வந்து இறங்குவதைப் பார்த்தவுடன் பதட்டத்தோடு ஓடி வந்தான் முருகேசன்.

''பாரு வூட்டுக்கு வந்தது, இங்க எறக்குறீங்க.''

''உங்க வீட்டுக்கு தாங்க ஃபாதர் அனுப்பிச்சாரு. செட் பண்ணி வைச்சிட்டு எங்கள வந்துறச் சொன்னாரு,'' அவர்கள் வேலையில் இறங்க ஆரம்பித்தார்கள்.

இன்ப அதிர்ச்சியில் குழப்பத்துக்குள்ளான முருகேசன், சைக்கிள் எடுத்துக் கொண்டு ஜெப வீட்டிற்கு விரைந்தான். ஓலைக் கொட்டகையின் மேற்பரப்பில் ஊசலாடிக் கொண்டிருந்த ஒட்டடைகளைத் துடைத்துக் கொண்டிருந்தார் ஃபாதர். வியர்க்க விறுவிறுக்க முருகேசன் வந்து நிற்க முகத்தில் எந்த பதட்டமும் இல்லாமல் அருகே வந்த ஃபாதர் ''என்ன முருகேசா... ஏன் இந்த வெய்யில்ல புறப்பட்டு வந்துருக்க, ஏதும் பிரச்சனையா?''

ஃபாதரின் ஆதரவான வார்த்தைகளைக் கேட்டவுடன் முருகேசனுக்கு சிறிது நேரம் பேச்சு வரவில்லை. கண்ணீர் கோர்த்துக் கொள்ள, வார்த்தை தழுதழுத்தது.

''ஃபாதர் இந்த ஊர்ல கூடப் பொறந்தவன் சொந்தக்காரங்க கூட என்ன நம்பி பத்து ரூவா தர்றதில்ல. நீங்க கொல்லையில பம்பு செட் கொண்டாந்து வைச்சி பொழச்சிகடானு சத்தம் போடாம உதவி செஞ்சீட்டீங்களே, என் செம்மம் பூரா உங்களுக்கு

வழக்கமான அமைதியை இழந்தது போல் காணப்பட்டது ஃபாதரின் முகம். ஒருவித பதட்டத்துடன் அட்டையைச் சரிபார்த்தவர் ''செல்வி, இது ஆண்டவன் விவகாரம், எழுதப் படிக்கத் தெரிந்த பெண் ஆச்சேனு உன்கிட்ட இந்த பொறுப்ப கொடுத்தேன், வட்டிக் காசு தறாதவங்ககிட்ட கரெக்டா கேட்டு வாங்கி கணக்கு கொடும்மா, இல்லனா தேவ கிருபை பாழாயிடும், என்ன புரியுதா?''

ஒழச்சாலும் தகும்'' தேம்ப ஆரம்பித்து விட்டான் முருகேசன்.

''முருகேசா முதல்ல கலங்காத! யாரும் யாருக்கும் ஊழியம் செய்ய பொறக்கல, எல்லாருமே அந்த ஆண்டவருக்கு ஊழியம் செய்ய பொறந்தவங்கப்பா, அப்பத்தையும், தண்ணியையும் கூட அந்த ஆண்டவன் ஆசீர்வாதம் பண்ணித்தான் நமக்கு தர்றான். அப்படி இருக்குறப்ப அந்த ஏசுவுக்கு நன்றி சொல்லு. அந்த தேவனோட கிருபையால ஜெபக்கூட பணத்திலே இருந்துதான் உனக்கு உதவி செஞ்சிருக்கிறேன். நானும் சும்மா கொடுக்கல, மாசம் இருநூறு ரூவா ஜெபக்கூடத்துக்கு கட்டு. கடன் முடியறப்ப நான் சொல்றேன். வருத்தப்படாம போய் ஆக வேண்டியதை பாரு.''

''கடன் என்ன ஃபாதர் கடன், காலம் பூரா இந்த கட்ட வேகற வரைக்கும் இந்த உதவியை மறக்க மாட்டேன். ஏசுவ, வேண்டிகிட்டே என் சொச்ச காலத்தை ஓட்டிடுவேன்.''

''எப்ப நீ ஏசுவ கடவுளா ஏத்துகிட்டியோ அப்பவே உன் பாவங்களெல்லாம் போச்சு. தேவனுடைய ஆசீர்வாதத்தால உன் கஷ்டமெல்லாம் மாறும்.''

●●●

அடிபம்பில் தண்ணி பிடித்துக் கொண்டிருந்த மாரியம்மா ஃபாதரைக் கண்டதும் செல்வி வீட்டுப் பக்கமும் எட்டிப் பார்த்து குரல் கொடுத்தாள்: ''ஏ செல்வி பாதரு வர்றாருடி'', செல்வி அவசர அவசரமாக ஏசு படத்திற்கு முன்பு மெழுகுவர்த்தியைக் கொளுத்த தீப்பெட்டியைத் தேடி எரிச்சலானாள்.

''இவரு ஒரு சனியன் பீடிய குடிக்கறவரு பொட்டிய இடுப்புல வைச்சிட்டு போயிட்டாரு. பாதரு வேற செவிக்க வந்துட்டாரு.''

''ஏ மயிலு செவிக்க வந்துட்டாரு பாதரு,'' பின்னாடி பக்க குடிசை வாசலில் நெத்திலி கருவாட்டை உரசிக் கொண்டிருந்த மயிலும் ஃபாதருடைய ஆசீர்வாதத்துக்குத் தயாரானாள்.

''ரெண்டு நாளா சரியா தூங்க மாட்டாங்கறான் ஃபாதர், புள்ளக்கி ராவுல திடுக்கு திடுக்குனு தூக்கி போடுது. கேவி, கேவி அழுவுறான் பாதர்'' பிள்ளைகள் தலைக்கு மேலே கையைத் தூக்கி ஜெபித்தவர் கையில் வைத்திருந்த கூடைக்குள்ளிருந்து ஒரு துண்டு முடிக்கயிரை கொடுத்து, ''ஏசுவ வேண்டிகிட்டு புள்ளைக்கு கட்டி வுடு! எல்லாம் சரியா போயிடும், அப்புறம் இந்த வாரம் ஜெப வீட்டுக்கு கட்டுல்யா?''

அர்த்தத்தைப் புரிந்து கொண்ட செல்வி ஓலைக்கு இடுக்கில் செருகி வைத்திருந்த சிகரெட்டு அட்டையை எடுத்துக் கணக்கு காண்பித்தாள்.

''இந்த மயிலுதான் பாதர் ரெண்டு மாசமா வட்டி தர்றல, அலமேலு கொடுத்துருச்சி, அத மட்டுந்தான் எழுத மறந்துட்டேன்'', தடுமாறிக் கொண்டு ஃபாதரிடம் கணக்கு அட்டையை நீட்டினாள்.

வழக்கமான அமைதியை இழந்தது போல் காணப்பட்டது ஃபாதரின் முகம். ஒருவித பதட்டத்துடன் அட்டையைச் சரிபார்த்தவர் ''செல்வி, இது ஆண்டவன் விவகாரம், எழுதப் படிக்கத் தெரிந்த பெண் ஆச்சேனு உன்கிட்ட இந்த பொறுப்ப கொடுத்தேன், வட்டிக் காசு தறாதவங்ககிட்ட கரெக்டா கேட்டு வாங்கி கணக்கு கொடும்மா, இல்லனா தேவ கிருபை பாழாயிடும், என்ன புரியுதா?''


படிப்பகம்

www.padippakam.com

''இந்த மாசம்தான் ஃபாதர் இப்பிடி ஆச்சி, இன்னுமே தெனப்படி கணக்கு சரியா கொடுக்கிறேன்''

பக்கத்தில் கூடிவிட்ட அனைவருக்கும் சேர்த்து சிலுவை போட்டபடி ஃபாதர் விடைபெற்றார்.

''ஃபாதர் செவிக்க வர்றாரு, செவிக்க வர்றாருனு கத்துனா கேக்குறீங்களா, உடனே வட்டி காசு கொண்டாந்து குடுக்க வேணாமா? ஏதோ ஏழப் பாழைக்கு உதவி செய்யறதையும் கெடுத்துடுவீங்க போல ருக்கே, இனிமேலாவது பாதர் செவிக்க வந்தா மறக்காம பணத்த எடுத்துவாங்க'' மயிலுக்கும் அலமேலுவுக்கும் புத்தி சொன்னபடி தண்ணி புடிக்க கிளம்பினாள் செல்வி.

●●●

''மடையான் மடையான் பூப்போடு, மடையான் மடையான் பூப்போடு'' தெருப் பையன்கள் வானத்தைப் பார்த்தபடி இரண்டு கைகளின் நகங்களை உரசியபடி பாடிக் கொண்டிருந்தனர். ''தம்பிகளே வழியில நிக்கக் கூடாது'' ஃபாதர் அறிவுரை சொல்லியபடி முருகேசன் வீட்டுப் பக்கம் வந்து சைக்கிளில் இறங்கினார்.

கத்தரிக்காய் செடி பக்கம் கவனத்திலிருந்த முருகேசன் ஃபாதரைக் கண்டதும் பர பரப்பானான்.

''முருகேசா எப்படி சுகமெல்லாம்?''

''எல்லாம் உங்க தயவுதான் ஃபாதர், செப வீட்டுக்கு பொறப்படலாம்னு இருந்தேன், எங்க நீங்க இந்த நேரம்?''

சற்று நேரம் மௌனமாயிருந்த ஃபாதர் நெற்றியைப் பெருவிரலால் தடவியபடி, ''ஒண்ணுமில்ல... ஊர்க்காரங்க இந்த ரோட்டுப் பக்கமா ஒரு செப வீடு கட்டுனா எல்லா ஜெனங்களும் வந்துபோவ வசதியா இருக்கும்னு சொன்னாங்க... அதான் ரோட்டோரம் ஒரு சின்ன எடமா வாடகைக்கு கிடைக்குமான்னு அலைஞ்சு பாத்துட்டு வர்றேன்.''

''அட என்னங்க ஃபாதர் நீங்க! நம்ம எடம் தோ, கடல்போல இருக்கு. இத வுட்டுட்டு ஏங் கெடந்து அடுத்தவங்க கிட்ட அலையுறீங்க! நான் வேற என்னவோ நெனச்சி பயந்துட்டேன். உங்க ஆசீர்வாதம் இல்லேன்னா இன்னிக்கு இந்த அளவுக்கு காய்கறி பயிர் பண்ணி யாவாரம் பண்ணி ஒரு கௌரவதியா இருந்திருப்பனா! நீங்க வேற ஃபாதர்... ஏன் ஏதுன்னு கேக்காம ஆள அனுப்பி மொதல்ல கடக்கால் போடுங்க. என் வீடு தேடி யேசுவே வர்றப்ப கசக்குதா?''

''முருகேசா கர்த்தரே எளிமையா மாட்டுக் கொட்டாயில அவதரிச்சவராச்சே! அவர் எப்போதும் ஏழைங்க பக்கம்தான், அதான் உன் இடத்துக்கு வந்துருக்காரு. ஏசுவோட கிருபையே கிருபை.''

சற்றுநேரம் கண்ணை மூடி ஜபித்தவர், ''இருந்தாலும் முருகேசா நாளைக்கு உன் சொந்தம் பந்தம் எங்கள கேட்டியான்னு ஒரு வார்த்த கேக்கக்கூடாது பாரு. அப்புறம் வாடகையெல்லாம்...'' ஃபாதர் முடிப்பதற்குள் முருகேசனுக்கு உரிமையுடன் கோபம் வந்தது.

''என்ன ஃபாதர் வேத்தாளுமாதிரி என்னென்னமோ பேசிக்குட்டு... உங்களையும் அந்த ஏசுவையும் விட வேறு யாரு எனக்கு சொந்தம்? இப்ப நீங்க எதையும் பேசவேண்டாம். ஆகவேண்டிய வேலைய பாருங்க. நாம் பாட்டுக்கு கோயிலு ஓரமா ஒண்டிக்குறேன்'' ரொம்ப விசனப்பட்டுக் கொண்டான்.



''முருகேசா நான் சொல்றதையும் நீ கேட்டுத்தான் ஆவணும். இந்த எடத்துல ஜெபவீடு எழட்டும். பின் பக்கத்துலேயே உனக்கு ஒரு கல்லு செவுரு வச்ச வீடு கட்டித் தருவேன். கட்டாயம் நீ ஏத்துக்கிட்டாதான் நாம் சம்மதிப்பேன்.''

''சரி ஃபாதர் வேண்டாம்னா விட்மாட்டேங்குறீங்க. உங்க மனசு யாருக்கு வரும். இந்த கத்திரிக்காயயாவது தட்டாம வாங்கிட்டு போங்க! போரு போட்ட கடன கொடுத்தாலும் எண்ணிப் பார்க்காம அப்படியே வாங்கிக்கறீங்க. என் கிட்ட வந்து வாடக அது இதுன்னுட்டு.''

''சரி... சரி.. ரோசியம்மாவுக்கும் கத்தரிக்கா புடிக்காது, வேண்டாம்னாலும் கோய்ச்சுப்ப! இந்த கூடைல கொட்டு உன் பேரைச் சொல்லி ஆண்டவனுக்கு படைக்குறேன்'' முருகேசனுக்கு ஆசீர்வாதம் வழங்கிவிட்டு ஃபாதர் சைக்கிளை நகர்த்தினார். அவரது வெள்ளைச் சட்டை மறைந்து ரோடு வெறிச்சோடும் வரை முருகேசன் வாசலை விட்டு நகரவில்லை.

●●●

''ஏலே, செல்லத்துரை வர்ற, சோக்கு பார்ரா! அன்பே வா எம்.சி.ஆர். மாதிரி பொட்டிய ஆட்டிகிட்டு வர்றாம்பாரு, எங்க ராசா... ஊர் பக்கமே காணும்.''

''மாமா! ஆறு மாசம் கான்ராக்ட்டுல கேரளாவுக்கு மரம் வெட்டப் போயிருந்தேன்ல தெரியாதா?''

''பாத்துரா சம்பாரிச்ச காச மாயாரம் கொட்டாயிலயும், தத்துவாஞ்சேரி மதுவலயும் வுட்ராதரா?''

''சரி மாமா! மணி ஏழாவுது நீ போய் மொதல்ல பொழப்ப பாரு'' சொல்லிவிட்டு விடுவிடுவென நடந்தான்.

செல்லத்துரையின் பேச்சு நடவாட்களுக்கு ஆச்சரியமாயிருந்தது. ''யக்கா பேச்ச கேட்டியா... முருகேசன் புள்ள முழிச்சிக்கிட்டான்டி'' புகையிலையை பல்லில் இடுக்கியபடி ராதா ஜாடை காட்டினாள்.

''வாப்பா மொத பஸ்ச புடிச்சி வர்றியா. என்ன வீடெல்லாம் புது மாதிரியா இருக்குன்னு பார்க்குறியா, எல்லாம் நம்ம யேசு கோயிலு பாதிரியாரு உதவியாலதான்.''

முருகேசன் ஆவல் பொங்க சொல்லிக் கொண்டே போக, சாணி மெழுகிய திண்ணையத் தேடி ஏமாந்தான் செல்லத்துரை.

''யேம்பா காத்துவாட்டத்துல இருந்த திண்ணைய இடிச்சி இங்கதான் கோயிலு கட்டனுமா, வேற எடமே இல்லையா? சரியான இளிச்சவாயி நீனு! அதுவும் வீட்ட பின்பக்கம் வேற கட்டியிருக்குற.''

''யேய் அப்படி பேசாதடா. நீ பாட்டுக்கு சோறு கண்ட இடம் சொர்க்க லோகம்னு போயிட்ட! இந்த ஃபாதர் மட்டும் இல்லேன்னா நான் செத்த எடம் செடி மொளச்சி இருக்கும். பேச வந்துட்டான் பெருசா... போ... மொதல்ல கைய கால கழுவிட்டு சாப்பிடு.'' மனதிற்குள் ஆத்திரம் மேலிட, வந்தவுடன் பேச வேண்டாம் என்று நினைத்தபடி தெருப்பக்கம் போய்விட்டான்.

''யேசுவே இன்னமும் அதே முன்கோபம், விளங்காதவனா இருக்கானே நீதான் அவனுக்கும் புத்திய கொடுக்கனும்'' முருகேசன் முனகிக் கொண்டான்.

இரவு முழுக்க உறக்கம் பிடிக்காதவனாய் புரண்டு கொண்டிருந்த செல்லத்துரை சூரியன் வந்து மூஞ்சியில அடிக்க



படிப்பகம்

www.padippakam.com

கயித்துக் கட்டிலிலிருந்து எழுந்து பல் தேய்க்க ஆரம்பித்தான். ஜெபவீட்டை வெறித்தபடியே பல்லை தேய்த்துக் கொண்டிருந்தான்.

''ஆ... ஆ...'' காரித்துப்ப, முருகேசன். பதட்டத்துடன் ஓடிவந்தான்.

''ஏய் பாத்துடா பல்லுதான் வெளக்குறியா? கொலவ போடுறியா? உள்ளார பிரசங்கம் நடக்குது. பாத்து...''

இனியும் பொறுமையாய் இருக்க முடியவில்லை அவனால்.

''தே இந்த பாரு ரா முழுக்க யோசிச்சி பாத்துட்டேன். எனக்கு கேரளா கான்ராக்ட்டு முடிஞ்சிடிச்சி, ஃபிரண்டுங்களோட சேர்ந்து டவுன்ல கட வைக்கப் போறேன். இந்த ஜெபவீடு இருக்குற எடத்து வித்து காச குடு ஆமா!'' சொல்லிக் கொண்டு அவன் பாட்டுக்கு சட்டையை மாட்ட நடந்தான்.

''என்னது... என்னது...'' என்று அவசரமாக பின்னாலேயே வந்தான் முருகேசன்.

''செப வீட விக்கணுமாம், செப வீட... அதுக்குத்தான் ஐயா கேரளாவுல இருந்து வந்தாரு போலருக்கு! நீ இல்லன்னு நெனப்புலயாவது இருந்துருப்பேன்டா! ஏன்டா வந்து உயிரெடுக்குற?''

''சும்மா கத்தாதே! ஒவ்வொருத்தன் பையன் யாவாரம் பண்ணி முன்னேரனும்னா நெலத்த பொலத்த வித்து உதவி செய்வான். உனக்கு பெத்தவனவிட அந்த ஃபாதர் பெருசா போச்சா?''

''யேய் நாக்க அடக்கி பேசுடா! அந்த நல்ல மனுசன பத்தி பேசனா உருப்படுவியா! தொழில் செய்யனும்னு ஃபாதர் கிட்ட கடன் கேட்டா கண்ணாட்டம் தந்துட்டு போறாரு. அத வுட்டுட்டு ஏசு கோயில் எடத்த விக்கனும்னா என்னாடா நெனச்சிட்டு பேசுற!''

''உனக்குதான் அறிவு கெடையாது, நம்மவூட்டு எடத்த அடுத்தவங்கிட்ட குடுத்துட்டு நான் போய் கண்டவன்கிட்டயும் தொங்கிட்டு நிக்கனுமா? எதுக்கு வெட்டிப் பேச்சு! என் பாகத்தை நீ எனக்கு பிரிச்சி கொடுத்துடு.''

''கெடக்கு கெடக்குன்னு பார்த்தா பெரியவங்க சின்னவங்கன்னு இல்லாம பேச்சு தடிக்குது. இது உன் பாட்டன் சொத்து கெடையாது! நான் சேத்த சொத்து, எப்ப நீ பாதரையே அவன் இவன்னு பேசிட்டியோ என் சொத்துல ஒரு நையா பைசா கூட கெடையாது ஆவறத பார்ரா மயிறு...''

''அப்பனாச்சேன்னு பார்த்தா எருமை எனக்கே வஞ்சன பண்ண துணிஞ்சிட்டியோ'' ஓரிடத்தில் நிற்காமல் பரபரப்பான செல்லத்துரை, கத்தரிசெடி பக்கம் கிடந்த கடப்பாரையை கையிலெடுக்க ஓடினான். சத்தம் கேட்டு ஜெப வீட்டுக்குள்ளிலிருந்து ஃபாதரும் மற்றவர்களும் பதட்டதுடன் ஓடி வந்தனர்.

''வர மொற தெரியாத நாயி இருந்தென்ன செத்தென்ன'' கொட்டாய்க்குள் செருகி வைத்திருந்த வீச்சரிவாளை ஓங்கிக் கொண்டு ஓடி வந்தான் முருகேசன்.

''புடிங்கடா அவன... முருகேசா அறுவாள கீழ போடு! யெக்கா.. யெக்கா..''

அந்த இடமே புழுதி கிளம்பி அமளியானது. மேலே விழுந்து தடுத்து பெண்களைத் தாண்டி திமிறினான் செல்லத்துரை.

''யெக்கா விடுக்கா என்னை, அப்பனா அவன் இவம்போய் எங்க ஆத்தா இருந்தா இவ்வளோ பிரச்சனை கெடையாது'' முருகேசனும் முண்டினான்.

> ''முருகேசா ஆண்டவனால் அருளப்பட்ட உயிரை எடுப்பதற்கு யாருக்கும் உரிமையில்லை! குரோதம் பொல்லாதது, கோபத்தை அடக்கு! அவன் யார் உன் மகன்... தவறு செய்தால் மன்னிக்க வேண்டியது உன் கடமை. முறையான வளர்ப்பு இல்லாததுனால, அவன பிசாசு பிடிச்சிருக்கு. அவன் கொலை செய்யரது மகா தப்பு. அவன் திருந்தனும்னா ஒரே ஒரு வழி போலீஸ் வசம் ஒப்படைச்சிடலாம், நாம தண்டிக்க தேவையில்லை!

''நாயி இழுத்திட்டு போற மாதிரி நர சம்மா வரான்டால போட்டப்பவே போவட்டும்னு வுட்டுருந்தா இந்த நாய் இன்னிக்கி ஊர் சிரிக்க வைக்குமா... உடுங்கடா ஃபாதரையே பேசிட்டான்'' முருகேசன் உருவிக் கொண்டு அருவாளுடன் ஓட பெண்கள் ஐயோ ஐயோ என்று கத்த ஆரம்பித்து விட்டனர்.

''முருகேசா நில்லு'' ஃபாதர் ஓங்கி குரல் கொடுக்க, தசைகள் நடுங்க முருகேசன் சுதாரித்து நின்றான்.

''நீங்க விடுங்க ஃபாதர்! அடங்காத புள்ள இருந்தா என்ன செத்தா என்ன ஏசு கோயிலயே திட்டுறான் வெட்டி பொலி போட்டுர்ரன்''

''நாதாரி நாயே உன்ன வெட்டாம ஓயமாட்டேன்டா!'' செல்லதுரையும், திமிரிக் கொண்டிருந்தான். ஃபாதர் நெருங்கி வந்து முருகேசனைச் சாந்தப்படுத்தினார்.

''முருகேசா ஆண்டவனால் அருளப்பட்ட உயிரை எடுப்பதற்கு யாருக்கும் உரிமையில்லை! குரோதம் பொல்லாதது, கோபத்தை அடக்கு! அவன் யார் உன் மகன்... தவறு செய்தால் மன்னிக்க வேண்டியது உன் கடமை. அவன் நல்ல பையன்தான் முறையான வளர்ப்பு இல்லாததுனால, அவன பிசாசு பிடிச்சிருக்கு இல்லேன்னா இப்படி நடந்துப்பானா. அவன் கொலை செய்யரது மகா தப்பு. அவன் திருந்தனும்னா ஒரே ஒரு வழி போலீஸ் வசம் ஒப்படைச்சிடலாம், நாம தண்டிக்க தேவையில்லை! அவனோட மோசமான வார்த்தைகளை ஆண்டவன் பேரால நான் மன்னிச்சிடறேன். அவன் வெளிய இருந்தா பிரச்சனை தொடரும் என்ன சொல்றீங்க?

ஃபாதரின் பேச்சைப் பிரசங்கம் கேட்பதுபோல் கேட்டுக் கொண்டிருந்த தெருசனம் சரிதான் என்பதுபோல் தலையாட்டியது. கேட்டுக் கொண்டிருந்த செல்லத்துரைக்கு இன்னும் உக்கிரம் கூடியது.

''அடப்பாவி குடும்பத்த குட்டிச் சுவராக்கி எனக்கு பிசாசு புடிச்சிருக்குன்னு பட்டம் வேற கட்டி போலீஸ்ல புடிச்சிக் குடுக்கிறியா? மொதல்ல உன்ன வெட்டணும்டா நாயே'' செல்லத்துரை சொல்லி முடிப்பதற்குள்,

''திமிரு கொண்ட பயதான், பாதரையே நம்ம எதித்தாப்ல கொன்னுடுவேங்கிறானே'', பேசியபடியே செல்லத்துரையைச் சிலர் அடிக்கவும் ஆரம்பித்தனர்.

ஜனம் சூழ்ந்து கொள்ள நெருங்கி வந்த ஃபாதர் ''தயவு செஞ்சி யாரும் அவன அடிக்காதீங்க! அது தப்பு. அவன போலீசுக்கு அழைச்சிட்டு போங்க. ஒரு உயிரை நாம துன்புறுத்தக் கூடாது'' ஃபாதர் அடித்தவர்களை விலக்கிவிட கூட்டம் செல்லத்துரையை குண்டுக்கட்டாகத் தள்ளிக் கொண்டு போனது. அழுகையும், ஆத்திரமுமாய் செல்லத்துரை கத்திக் கொண்டே போனான்.

''பாருய்யா... அவர திட்டுனா கூட அந்த மனுசன் வாயிலேர்ந்து வர்ற வார்த்தைய... அந்த கடவுள பாத்து பேசிட்டான்யா.''

முருகேசன் மற்றவர்களிடம் சொல்லிச் சொல்லி வருத்தப்பட்டுக் கொண்டிருந்தான். ஃபாதர் ஒட்டு மொத்தக் கூட்டத்திற்கும் சிலுவைப் போட்டுக் கொண்டிருந்தார்.

• துரை. சண்முகம்


படிப்பகம்

www.padippakam.com

**தொடர் கட்டுரை: 15**

## சிறுபான்மையினருக்கு எதிரான ஆர்.எஸ்.எஸ்.இன் பொய்யும் புரட்டும்:

# அம்பேத்கர் மதம் மாறியது ஏன்?

*அம்பேத்கர் ஏன் புத்த மதத்திற்கு மாறினார்?*

அம்பேத்கர் 'மஹார்' எனப்படும், சமுதாயத்தில் தீண்டத்தகாதவர்கள் என்று ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த ஒரு பிரிவில் பிறந்தார். 'மஹார்' பிரிவு மக்களுக்குச் சிறந்த போர்க் குணங்கள் உண்டு. ஆனால் கல்வியறிவு கிடையாது. அதன் காரணமாகவே அவர்களால் சமுதாயத்தில் சிறந்த அந்தஸ்து பெற முடியாமல் இருந்தது.

ஒரு தனிமனிதன் குணங்கள் அவன் வளர்க்கப்படும் சூழ்நிலையிலும், அவனது உணவையும் பொறுத்தே இருக்கிறது என்பதையும் அம்பேத்கர் அறிவார். புலால் உணவை மறுப்பது ஒரு நல்ல மாற்றத்தைக் கொண்டு வர முடியும் என்று அவர் ஆராய்ந்தார். 'பஞ்சமா பாதகங்களைச் செய்யாதே என்று உபதேசித்தால் மக்கள் கேட்டு விடப் போகிறார்களா என்ன? மாறாக அதைச் சொல்லாமல் அந்த நிலைக்கு அவர்களை இயற்கையாகவே இட்டுச் செல்ல வேண்டும். பஞ்சமா பாதகங்களைப் பற்றிக் கவலைப்படாதவை கிறிஸ்தவம், இசுலாம். அப்படியானால் அவர்களை நல்ல நிலைக்கு இட்டுச் செல்ல புத்த மதத்தால் தான் இயலும்.

புத்த மதத்தில் சேர்ந்த பின்பு அதன் கொள்கைகளை நெறிப்படிக் கடைப்பிடிக்க வைப்பதன் மூலம் அவர்களை நல்ல நிலைக்கு முன்னேற்றிச் சிந்தித்து செயல்படும் திறன் உள்ளவர்களாக மாற்றி சமுதாயத்தில் சம அந்தஸ்து உடையவர்களாக அவர்களை ஆக்கிவிட முடியும் என்று அவர் நம்பியதாலே லட்சக்கணக்கான தொண்டர்களுடன் அவர் புத்த மதத்திற்கு மாறினார். அரசியலமைப்புச் சட்டத்தின் தந்தை என்று அழைக்கப்படும் அம்பேத்கருக்கு சட்ட அமைப்பு 25-ன் விதிப்படி புத்த மதம் ஹிந்து மதத்துடனே ஒன்றாகவே கருதப்படுகிறது என்பது எப்படி நினைவற்றுப் போகும்? சட்டத்தைத் தொகுத்தது அவரல்லவா? எனவே அம்பேத்கர் புத்த மதத்திற்கு மாறியதற்கு அதுவே காரணம்.

*– பக்கம் 32, 'மதமாற்றத் தடைச் சட்டம் ஏன்' இந்து முன்னணி வெளியீடு.*

"தாழ்த்தப்பட்ட மக்கள் கல்வியறிவற்ற மூடர்களாக, அசுத்தமான வாழ்க்கையை வாழ்ந்தனர்; இறைச்சி உண்ணும் பழக்கங் கொண்ட அவர்கள் பொய், திருட்டு, பிறன்மனை பெண்டாளுதல் போன்ற பஞ்சமா பாதகங்கள் செய்யும் போக்கிரிகளாகவும் இருந்தனர்; இவற்றிலிருந்து அவர்களைத் திருத்த நினைத்த அம்பேத்கர் இசுலாம், கிறித்தவம் போன்ற அநாகரீக மதங்களைத் தவிர்த்து விட்டு இந்து மதத்தின் உட்பிரிவான புத்த மதத்திற்குத் தனது ஆதரவாளர்களோடு மதம் மாறினார்."

தாழ்த்தப்பட்ட மக்கள் அநாகரீகமானவர்கள், போக்கிரிகள் என்பது பார்ப்பன் மேல் சாதியினர் இன்று வரையிலும் கொண்டுள்ள வெறுப்புக் கலந்த கருத்தாகும். இதற்காகத்தான் அம்மக்களோடு அம்பேத்கர் மதம் மாறினார் என்பது திமிரான பொய். காரணம் அவர்கள் பார்ப்பன இந்து மதத்தால் தண்டிக்கப்பட்ட வரலாற்று அடிமைகள். அவர்கள் அடிமைகள் என்று உணர்வதைக் கூட அனுமதிக்காத பார்ப்பன இந்துமதம்தான் அநாகரீகமானது என்றார் அம்பேத்கர்.

ஒரு மதம் என்பது பொதுவாக மானுடத்தின் அறவியல் மகிழ்ச்சி - விடுதலையைப் பேசுகின்ற கொள்கைகளைக் கொண்டிருக்கும். ஆனால் இந்து மதம் என்பது கொள்கைளின் தொகுப்பா அல்லது தண்டனைகளைப் பட்டியலிடும் குற்றவியல் சட்ட விதிகளின் தொகுப்பா? சாதிப் படிநிலையில் சூத்திர - பஞ்சம மக்கள் எப்படி அடங்கி ஒடுங்கி வாழ வேண்டும் என்பதை விதிகளாய் வைத்திருக்கும் பார்ப்பனியத்தை ஒரு மதம் என்று அழைக்க மாட்டேன் என்றார் அம்பேத்கர். சமூக நீதிகளைப் பொறுத்தவரை மனு தர்மத்தின் சட்டங்களை விடக் கேவலமான சட்டங்கள் எதுவுமில்லை என்று இந்து மதத்தின் மனித விரோதத் தன்மையைக் கிழித்துக் காட்டினார்.

'இந்து' என்ற பெயரே முகமதியர்கள் இட்ட பெயர்தான். அவர்கள் அப்படிப் பெயரிடவில்லை என்றாலும் பிரச்சினை ஏதும் வரப்போவதில்லை. காரணம் நாமெல்லாம் ஒரு நாட்டு மக்கள் என்ற சகோதர சமூக சிந்தனை பார்ப்பனியத்தின் சாதிய சமூகத்தில் இல்லாத போது ஒரு பொதுவான பெயர் பற்றிய கேள்வியே எழுவதில்லை. இந்து - முசுலீம் சண்டையை தவிர்த்துப் பார்த்தால் இங்கே தனித்தனிச் சாதியாக வாழ்வதே முதலும் முடிவுமான குறிக்கோளாக இருக்கிறது. மக்கள் தங்களுக்குள் கலந்து உறவாடுவதாலேயே சமூகமாக வாழ்கின்றனர். ஆனால் இங்கே பிரிந்து வாழ்வதையே சட்டமாக வைத்திருக்கும் ஒரு நாட்டில் சமூகம் எங்கே இருக்கிறது என்று சீறியவர் அம்பேத்கர்.



சாதிய அமைப்பு தொழில்களை மட்டுமல்ல தொழிலாளர்களையும் ஏற்றத்தாழ்வாக, செயற்கையான, தனித்தனித் தீவுகளாய்ப் பிரித்து விடுகிறது. பரம்பரை பரம்பரையாய் குலத் தொழில் செய்து வரும் ஒருவன் தன் தொழிலின் நலிவால் வாழ இயலாத போதும் பட்டினி கிடந்து சாவானே ஒழிய வேறு தொழில் செய்ய மாட்டான். அப்படிச் செய்வதை நினைத்தும் பார்க்க முடியாத வாழ்வைத்தான் பார்ப்பனிய இந்து மதம் விதித்திருக்கிறது என்று வழக்காடினார் அம்பேத்கர்.

இப்படி வாழ்விலும் சிந்தனையிலும் மட்டுமல்ல உடற்கூறிலும் பார்ப்பன இந்து மதத்தின் சாதியம் தனது மீற முடியாத அகமண முறையால் எப்படி நலிவடைய வைத்திருக்கிறது என்றால், இந்திய மக்களில் 100-க்கு 90 பேர் ராணுவத்துக்கு (உடல், எடை, உயரம்) லாயக்கில்லை என்று கேலி செய்தார் அம்பேத்கர். அது மட்டுமா, ஒவ்வொரு சாதிக்கும் விதிக்கப்பட்ட தனித்தனி உடை, உணவுப் பழக்கங்கள் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வேடிக்கைப் பொருளாக, அருங்காட்சியகமாக இந்தியா இருப்பதை சினத்துடன் எடுத்துக் காட்டினார் அம்பேத்கர்.

கழுத்தில் கலயத்தையும், இடுப்பில் துடைப்பத்தையும் கட்டி தாழ்த்தப்பட்ட மக்களை வீட்டு நாயை விடக் கேவலமாக



படிப்பகம்

www.padippakam.com

நடத்திய இந்துக்கள் அவர்களைப் பற்றியும், அதேபோல தம் அருகே வாழும் 30 லட்சம் பழங்குடியினர் (அம்பேத்கர் காலத்தில்) எந்த நாகரீக வளர்ச்சியுமின்றி 'குற்றப் பரம்பரையாக' நீடிப்பது குறித்தும் வெட்கமோ, வேதனையோ அடைவதில்லை என்று காறி உமிழ்ந்தார் அம்பேத்கர். இம்மக்களுக்கு கிறித்தவ மிஷனரிகள் செய்யும் சேவையைப் போல் இந்துக்கள் ஒருக்காலும் செய்ய முடியாது என்றும், அத்தகைய சகோதரத்துவ எண்ணமே பார்ப்பனியத்தின் ஆன்மாவில் கிடையாது என்பதையும் விளக்கினார்.

ஆரிய சமாஜத்தின் 'தாய் மதம்' திருப்பும் மதமாற்றச் சடங்கை ஒரு மோசடி என நிருபித்தவர் அம்பேத்கர். ஏனைய மதங்கள் தம் கொள்கையால் மட்டுமே விடுதலை பெற முடியும் என்று தம் எண்ணிக்கையைப் பெருக்குவதற்கான அடிப்படையைக் கொண்டிருக்கின்றன. ஆனால் இந்து மதமோ அத்தகைய வாக்குறுதியைக் கொடுக்க முடியாததோடு, அப்படி ஒரு முயற்சியையும் செய்ய முடியாது. காரணம் இந்து மதத்தில் சேர்க்கப்படும் ஒரு புதியவரை எந்தச் சாதியில் வைப்பது என்ற பிரச்சினை உள்ளது. சாதித் தூய்மையில் இரத்தக் கலப்பை விரும்பாத இந்துச் சமூகம் நெடுங் காலமாய் மதப் பிரச்சாரம் மற்றும் மதமாற்றம் செய்யாததற்குச் இதுவே காரணம் என்றார் அம்பேத்கர்.

நாங்கள் சாதியை ஏற்கவில்லை, அவை இந்து மதத்தில் நுழைந்த இடைச் செருகல்கள், தொழில் முறை வேலைப் பிரிவினைக்காக ஏற்பட்ட வருண அமைப்பே இந்து மதத்தில் ஏற்படுத்தப்பட்டது என வருண அமைப்புக்கு ஆதரவாக ஆரிய சமாஜத்தினர் வழக்காடினார்கள். அப்படி என்றால் ஒவ்வொரு தொழிலுக்கும் பிராமணன், சத்ரியன், வைசியன் என்று முத்திரை குத்துவது ஏன், பிறப்பின் அடிப்படையில் மட்டும் தொழில் தீர்மானிக்கப்படுவது ஏன், தொழில் மாறும் உரிமை கொடுக்க மறுப்பது ஏன், அப்படி மாறினால் கடும் தண்டனை வழங்கும் காப்பாளராக இந்துமதம் இருப்பது ஏன் என்று கேட்ட அம்பேத்கர் வருணமும் - சாதியும் எண்ணிக்கையில் தான் 4,4000 என பிரிந்திருக்கிறதே ஒழிய தன்மையில் ஒன்றுதான் என்று அம்பலப்படுத்தினார்.

மேலை நாடுகளைப் போல் இந்தியாவில் ஒரு சமூகப் புரட்சி ஏன் நடக்கவில்லை? ஐரோப்பாவில் உள்ள ஒரு தொழிலாளி இராணுவத்தில் சேரும் உரிமையிலிருந்து தனது பௌதீக ஆயுதத்தையும், போராடும் உரிமையிலிருந்து தனது அரசியல் ஆயுதத்தையும் கல்வி கற்கும் உரிமையிலிருந்து தனது தார்மீக ஆயுதத்தையும் பெற்றிருந்தான். அதனால் அங்கே புரட்சிகள் நடந்தன. இங்கே பெரும்பான்மை மக்களுக்கு கல்வி கற்கும் உரிமையும், போராடும் உரிமையும், ஆயுதம் ஏந்தும் உரிமை கிடையாது. தனது கலப்பையோடு பிறந்து மாடு போல உழைத்து சாவதற்கு மட்டுமே உரிமை கொண்ட ஒரு சூத்திர - பஞ்சமன் தனது கலப்பைக் கொழுவை ஒரு வாளாக மாற்ற அனுமதியில்லை. அதனால்தான் பல்வேறு கொடுமைகளைச் சகித்துக் கொண்டு வாழ்ந்த உழைக்கும் மக்களிடமிருந்து எந்தப் புரட்சியும் தோன்றவில்லை. தோன்றவும் முடியாது என்றார் அம்பேத்கர்.

இத்தகைய சாதிய அமைப்பை ஒழிக்காமல் ஒரு தேசத்தை உங்களால் உருவாக்க முடியாது, வெள்ளையர்களை விரட்டினாலும் தமது அடிமைத்தனத்திலிருந்து மக்கள் விடுதலை அடைய முடியாது என்றார் அம்பேத்கர். தீண்டாமைப் பிரச்சினையும் - மதமாற்றமும் - இந்துமதத்துக்குள்ளேயே பேசித் தீர்த்து விடலாம் - அதை அரசியல் அரங்கிற்கு கொண்டு வராதீர்கள் என காந்தி ஒவ்வொரு முறையும் நயவஞ்சகமாக நாடகமாடினார்: பேசுவதற்கு முன்னால் உங்கள் காங்கிரஸ் உறுப்பினர்கள் வெள்ளைக் குல்லாய் போட வேண்டும், கதராடை உடுத்த வேண்டும், என்று வைத்திருப்பது போல சாதி-தீண்டாமை பாராட்டுபவன் உறுப்பினராக முடியாது என்று விதி கொண்டு வர முடியுமா என காந்தியின் கழுத்தைப் பிடித்துக் கேட்டார் அம்பேத்கர்.

> இங்கே பெரும்பான்மை மக்களுக்கு கல்வி கற்கும் உரிமையும், போராடும் உரிமையும், ஆயுதம் ஏந்தும் உரிமையும் கிடையாது. தனது கலப்பையோடு பிறந்து மாடு போல உழைத்து சாவதற்கு மட்டுமே உரிமை கொண்ட ஒரு சூத்திர - பஞ்சமன் தனது கலப்பைக் கொழுவை ஒரு வாளாக மாற்ற அனுமதியில்லை.

ஆங்கிலேயரின் கைக்கூலி, தேசத் துரோகி என்று காங்கிரசு கும்பலும், பத்திரிகைகளும் வசை பாடிய போதும் தனது போராட்டத்தை விட மறுத்தார் அம்பேத்கர்.

1927-ஆம் ஆண்டு மராட்டியத்தில் சவுதாகர் குளப் போராட்டத்தில் தாழ்த்தப்பட்ட மக்களின் மீதான தீண்டாமைக் கொடுமைக்கெதிராக நீரெடுக்கும் போராட்டத்தினைத் துவக்கினார் அம்பேத்கர். அடுத்த நாளே 'இந்துக்கள்' 108 பானைகளில் சாணம், பசு மூத்திரம், பால், தயிர் கொட்டி பார்ப்பனர்களின் யாகத்தோடு குளத்திற்குத் தீட்டு கழித்தார்கள். 1930-ஆம் ஆண்டு அம்பேத்கரும் தாழ்த்தப்பட்ட மக்களும் துவக்கிய நாசிக் கோவில் நுழைவுப் போராட்டம் 1935-ஆம் ஆண்டில்தான் வெற்றியடைந்தது.

அம்பேத்கரின் இத்தகைய போராட்டங்கள் வன்முறையற்ற அமைதியான போராட்டங்கள்தான் என்றாலும் இந்துக்கள் பல்வேறு வழிகளில் தொல்லை கொடுத்தார்கள், தாக்கவும் செய்தார்கள். இதனால் இந்த நாட்டில் சாதி - தீண்டாமையை ஒழித்து ஒரு சமூக எழுச்சியைக் கொண்டு வரும் தனது முயற்சியில் இந்துக்களைத் திருத்த முடியவில்லையே என்று வேதனைப்பட்ட அம்பேத்கர் 1935 யேவா மாநாட்டில் "நான் பிறப்பால் இந்துவாகப் பிறந்து விட்டேன், ஆனால் நிச்சயம் இந்துவாகச் சாகமாட்டேன் என்று உங்களுக்கு உறுதி கூறுகிறேன்" என்று முடிவெடுத்தார்.

இறப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன் 1956-ஆம் ஆண்டு 2 லட்சம் தாழ்த்தப்பட்ட மக்களோடு புத்த மதம் மாறினார்.

அம்பேத்கர் புத்த மதம் மாறியதன் காரணம் என்ன?

பார்ப்பனியத்தின் கொடுங்கோன்மைக்கு எதிராகவும், விகாரமான சடங்குகளுக்கு எதிராகவும் 25 நூற்றாண்டுகளுக்கு முன்பு தோன்றியது புத்த மதம். இந்து மத வெறியர் கூறுவது போல பௌத்தம் இந்து மதத்தின் உட்பிரிவு அல்ல. ஆர்.எஸ்.எஸ். தலைவர் கோல்வால்கரே, புத்த மதம் செல்வாக்குடன் இருந்த வடமேற்கு - வடகிழக்கு பகுதிகளில் வருண - சாதிய அமைப்பு சீர்குலைந்ததாகவும், அதனாலேயே முசுலீம், கிறித்தவ மதமாற்றமும் படையெடுப்பும் நடந்ததாகக் கூறி பௌத்தத்தை அருவெறுப்புடன் பார்க்கிறார். கணிசமான காலம் பார்ப்பனியத்திற்கு மாற்றாக விளங்கிய புத்தமதம் செல்வாக்குடன் திகழ்ந்ததற்கு அசோகர் உள்ளிட்ட மௌரிய மன்னர்கள் அளித்த ஆதரவும் முக்கியக் காரணமாகும்.

கடவுள், சடங்கு, நிரந்தர உலகக் கொள்கையை நிராகரித்த புத்தர், அனுபவ ஆய்வையும் - அறிவையும் மட்டுமே நம்ப வேண்டுமென்றார். மேலும் அகத் தூய்மை, பொதுமென்ற மனம், ஆசையை விட்டொழித்தல், பற்றுக்களை உதறுதல் ஆகியவற்றின் மூலமே பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் என்றார்.

www.padippakam.com

அவர் அமைத்த பிக்குகள், பிக்குனிகள் அடங்கிய சங்கம் எளிமைக்கும், சகோதரத்துவத்திற்கும், சமூக அக்கறைக்கும் சான்றாக விளங்கியது. இப்படி பார்ப்பனியத்திற்கு எதிராகக் கிளம்பிய பௌத்தம் பல்வேறு வரலாற்றுக் காரணங்களால் தோல்வியைத் தழுவி, இந்தியாவிலிருந்தே விரட்டப்பட்டது.

புத்தரின் பார்ப்பனிய எதிர்ப்பும், சமூக நோக்கமும் அம்பேத்கருக்கு மிகவும் பிடித்திருந்தன. மேலும் மனிதனின் அறவியல் விழுமியங்கள் தோன்றி நீடிப்பதற்கு மதம் அவசியம் என்பதும் அவரது கருத்தாக இருந்தது. அவரைப் பொறுத்தவரை ஒரு நல்ல சமூகம் என்பது சமூக நீதிகளைக் கொண்ட கட்டத்தை வைத்து மக்களை ஆளும் ஒரு நல்ல அரசு புறநிலையாகவும், மனிதனின் ஆன்மீக மேன்மையை வளர்க்கும் ஒரு மதம் அகநிலையாகவும் தேவைப்படுகிறது.

அதேசமயம் 25 நூற்றாண்டுகளுக்கு முந்தைய புத்தமதம் அந்தக் காலத்துப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முயன்ற ஒரு முற்போக்கு மதமே தவிர இன்றைய வரலாற்றுப் பிரச்சினைகளுக்கு அது தீர்வாகாது. அதாவது புத்தரின் 'நிர்வாண நிலை' தாழ்த்தப்பட்ட மக்களுக்கு போராடும் தேவையை மறுத்து, போதுமென்ற மனநிலையை அளிக்கிறது.

இவையெல்லாம் அம்பேத்கருக்கு தெரியாதா என்ற கேள்விக்கு அவரது கடைசிக்காலத் தோல்விகளும், மதம் பற்றிய அவரது கருத்தும், சாதி ஒழிப்பிற்கான வழிமுறை பற்றிய அவரது சித்தாந்தமும் பதிலாகின்றன.

அடுத்து முசுலீம் - கிறித்தவ மதங்களுக்கு அவர் ஏன் மதம் மாறவில்லை? இந்து மதவெறியர் கூறுவது போல அவை 'அநாகரீகமான மதங்கள்' என்பதால் அல்ல. முதலில் அவை பார்ப்பனியத்தை எதிர்த்துப் பிறந்த மதங்கள் அல்ல. இரண்டாவது இந்த மதங்களும் பார்ப்பனியத்தின் சாதிய அமைப்பை ஓரளவிற்கு ஏற்றபிறகே இந்தியாவில் நிலை பெற ஆரம்பித்தன.

மேலும் இசுலாமும், கிறித்தவமும் தமது மதக் கொள்கைகளைக் காட்டி, வலுவான நிறுவன ரீதியான வலைப்பின்னலாலும், அரசு போன்ற கண்காணிப்பு செய்யும் சமூக நெறிப்படுத்துதலும் அவருக்குப் பிடிக்கவில்லை. பௌத்தம் மட்டுமே தனிமனிதனிடம் அறவியல் நல்லொழுக்கங்களை சுதந்திரமான முறையில் வளர்த்தெடுக்கின்றது என்பது அவர் கருத்து. ஆனால் இன்றும் புத்த சமயம் செல்வாக்குடன் வாழும் நாடுகளில் கூட அது நிறுவன ரீதியான மதமாகத்தான் இருக்கின்றது. மேலும் அம்பேத்கரின் புத்தமதமாற்றம் என்பது பார்ப்பன இந்து மதத்தை அசைத்துப் பார்க்கும் அளவு வெற்றியடையவில்லை.



இதற்கு மேல் அம்பேத்கரைப் புரட்டிப் போடும் இந்துமதவெறியர்கள் இன்று வரையிலும் அவரை வன்மத்துடன்தான் பார்க்கிறார்கள். பெண்களுக்கு சொத்தில் சம உரிமை கோரும் அவரது மசோதாவை ஆத்திரம் கொண்டு எதிர்த்தனர், கலவரம் செய்தனர். சில வருடங்களுக்கு முன் 'இராமனும் கிருஷ்ணனும் ஒரு புதிர்' என்ற அவரது நூலைத் தடை செய்யக் கோரியும், மராத்வாடா பல்கலைக்கழகத்திற்கு அம்பேத்கர் பெயரைச் சூட்டியதை எதிர்த்தும், ஆர்.எஸ்.எஸ். சிவசேனைக் கும்பல் வெறியாட்டம் நடத்தியது. பல தாழ்த்தப்பட்ட மக்கள் கொல்லப்பட்டனர். பல 'சேரி'ப் பகுதிகள் தீக்கிரையாகின. அம்பேத்கர் கைப்படச் சேகரித்த நூலகம் ஒன்றும் எரித்து அழிக்கப்பட்டது. அதன் பின் அம்பேத்கர் சிலைக்கு செருப்பு மாலை அணிவித்ததைக் கண்டித்துப் போராட்டம் நடத்திய தாழ்த்தப்பட்ட மக்களில் 13 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

தாழ்த்தப்பட்ட மக்களின் ஓட்டு வங்கியைக் கவரவும், தனது 'மேல்சாதி'த் தன்மையை மறைக்கவும் அம்பேத்கரைப் புகழ்பாடும் இந்துமதவெறியர்கள் அப்போது கூட, 'ஆம் எங்கள் மதத்தின் அழுக்குகளை அநாகரீகங்களைக் களைய முயன்றார் அம்பேத்கர்' என்று கூறாமல் தாழ்த்தப்பட்ட மக்கள் சுத்தமாக வாழ்வதற்கு முயன்றார் என்று கூசாமல் கூறுகி[...]றனர். கன்சிராம், மாயாவதி, ராம்விலா[...] பாஸ்வான், திருமாவளவன், கிருஷ்[...] சாமி இவர்களையெல்லாம் வென்றெடுத்[...] விட்ட நிலையில் இந்து மதவெறியர்க[...] இதை மட்டுமல்ல, அம்பேத்கர் இந்தும[...] மகான்களில் ஒருவர் என்று கூடக் கூ[...] முடியும்.

**25 நூற்றாண்டுகளுக்கு முந்தைய புத்தமதம் அந்தக் காலத்துப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முயன்ற ஒரு முற்போக்கு மதமே தவிர இன்றைய வரலாற்றுப் பிரச்சினைகளுக்கு அது தீர்வாகாது.**

அரசியல் சட்டத்தின் 25-வது பிரிவி[...] முசுலீம், கிறித்தவர் தவிர்த்த புத்த மத[...]தினர், ஜைனர்கள், சீக்கியர்கள் ஆகியோ[...] இந்துக்கள் என்று கூறப்பட்டிருப்ப[...] உண்மைதான். அம்பேத்கர் தான் எதிர்த்[...] காங்கிரசின் மந்திரி சபையில் சட்ட மந்தி[...]யாக இருந்தது. அரசியல் சட்ட மு[...] வரைவுக் குழு தலைவராகப் பணியாற்[...]யது இவையெல்லாம் அரசு என்ற நிறு[...]னத்தின் மூலம் தாழ்த்தப்பட்ட மக்களுக்[...] குறைந்தபட்ச உத்திரவாதமும், சலுகை[...]களும் கிடைக்க வேண்டும் என்பதற்கா[...]கத்தான். இவை சாதி ஒழிப்பின் சிக்கல்கள் நிறைந்த பாதை அம்பேத்கரிடம் ஏற்படுத்[...]திய சமரசங்கள்தான். அதே சமயம் இத்[...]கைய முயற்சிகளால் அவர் திருப்தியடை[...]யவில்லை, அவை தவறு என உணர்ந்[...] போது தூக்கி எறியவும் செய்தார்.

''என் விருப்பத்திற்கெதிராக எதைச் செய்யக்கூடாதோ அதைச் செய்யுமாறு பணிக்கப்பட்டேன், அரசியல் சட்டம் எழுத அவர்களுக்குக் கிடைத்த ஒரு சவாரிக் குதிரைதான் நான்'' என்று கூறிய அம்பேத்கர் பின்னாளில் ''அரசியல் சட்டத்தை எழுதிய நானே அதை எரிப்ப[...]திலும் முதல் நபராய் இருப்பேன்'' என்றார். இந்துப் பெண்களுக்கான சம சொத்துரிமை தொடர்பான மசோதாவைத் திருத்தவும், தள்ளி வைக்கவும் முயன்ற நேரு அரசாங்கத்திற்கு எதிராக தன் சட்ட அமைச்சர் பதவியைத் தூக்கி எறிந்தார் அம்பேத்கர். இவை சமரசத்தின் மூலம் அம்பேத்கர் முடங்க மாட்டார் என்பதைக் காட்டுகின்றன.

சமீபத்தில் சீக்கிய மதம் இந்து மதத்தின் உட்பிரிவுதான் என்று கூறிய ஆர்.எஸ்.எஸ்.க்கு எதிராக சீக்கியர்கள் போராடினார்கள். அதனால் ஆர்.எஸ்.எஸ். தலைமை சீக்கிய மதம் தனியான மதம்தான் என்று மன்னிப்புக் கேட்டு ஒப்புக்கொண்டது. ஆனால் தலித் பிழைப்புவாதிகள் பாரதீய ஜனதா கட்சியில் சங்கமமாயிருக்கும் இக்காலத்தில் பௌத்தத்தையும் அம்பேத்கரையும் இந்துமதவெறியர்கள் மற்றும் தலித் பிழைப்புவாதிகளிடமிருந்து மீட்டெடுக்கும் கடமை சாதிய ஒழிப்பில் அக்கறை கொண்ட ஒவ்வொருவருக்கும் இருக்கிறது.

— தொடரும்



படிப்பகம்

www.padippakam.com

# அமைதிப் பேச்சுவார்த்தையில் அழுகும் பிணங்கள்

## ஓர் உண்மைச் சம்பவம்

தேதி: 21.6.2001 - புதன்கிழமை - மாலை 5 மணி

இடம்: உத்தமபாளையம் தாசில்தார் அலுவலகம்

வாதி: அருந்ததியினர் முன்னேற்ற சங்கத் தலைவரும், ஓய்வு பெற்ற முன்னாள் இராணுவ அதிகாரியுமான திரு. முத்தையா B.A. அவர்கள், மற்றும் செயலாளர், திரு. ஈஸ்வரன் அவர்கள்.

பிரதிவாதி: T. மேட்டுப்பட்டி கிராமமேல் சாதியினர் (தேவர், நாடார், நாயுடு, செட்டியார்சாதியினர்)

முன்னிலை:

1) உத்தமபாளையம் ஆர்.டி.ஓ. திரு. இராமானுஜம், 2) ஸ்பெசல் தாசில்தார்: திரு. ஆறுமுகம், 3) துணை தாசில்தார்: திரு. மருதராஜ், 4) தேவாரம் கிராம நிர்வாக அதிகாரி: வெள்ளையப்பாண்டி, 5) தேவாரம் ரெவின்யு இன்ஸ்பெக்டர்: திரு. மாதேஸ்வரன், 6) தேவாரம் போலீஸ் இன்ஸ்பெக்டர்: திரு. திருவேங்கடம், 7) தேவாரம் சார்பு ஆய்வாளர்: திரு. இளங்கோவன், 8) தேவாரம் கிரைம் சார்பு ஆய்வாளர்: திரு. சிங்கராசு.

பிரச்சினை:

தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகாவில் தேவாரம் அருகிலுள்ள மேட்டுப்பட்டி கிராமத்தில் வாழும் அருந்ததியின மக்களுக்கு, ஊருக்குள் இருக்கும் தெருப் பாதை வழியாக பிணத்தைத் தூக்கிக் கொண்டு போக, மேல் சாதியினர் மறுப்பது சம்பந்தமாக - 'அமைதிப் பேச்சுவார்த்தை'!

வாதியின் தரப்பில் சிறப்பு அழைப்பாளர்களாக பகுதி விவசாய விடுதலை முன்னணிச் செயலர் தோழர். பாக்கியராசும், பாட்டாளி மக்கள் கட்சிப் பிரமுகர் இரவியும் கலந்து கொண்டனர்.

பிரதிவாதிகளாக முக்கியப் பங்காற்றியவர்கள்: உள்ளூர் அதிமுக பிரமுகர் தருமர், திமுக கிளைச் செயலரின் மகன் பெருமாள், பி.ஜே.பி. உறுப்பினர் சின்னக் காளை, சி.பி.எம்.-ன் உறுப்பினரும், வார்டு கவுன்சிலரின் கணவருமான ஜெயா ஆகியோர்.

பேச்சு வார்த்தையில் கலந்து கொள்ள வாதி - பிரதிவாதிகளில் தலா 10 பேர் மட்டும் அனுமதிக்கப்பட்டு, அலுவலக அறைக்குள் அமர்ந்துள்ளனர். இவர்களுக்கு முன்னே வரிசையாக அதிகாரிகள் உட்கார்ந்துள்ளனர். நடுவில் ஒரு நாற்காலி மட்டும் காலியாக உள்ளது. ஆர்.டி.ஓ. சிரித்துக் கொண்டே வந்து அதில் உட்கார்கிறார்.

**ஆர்.டி.ஓ:** என்னய்யா... ஆரம்பிப்போமா? சுடுகாட்டுப் பாதைதான் முடிஞ்சிருச்சே... கிராம நிர்வாக அதிகாரியும், ஆர்.ஐ.யும் நேரில் வந்து பாதையை அளந்து, புல்டோசரை விட்டு சமப்படுத்தி பாதையை ஒதுக்கி விட்டுட்டாங்களே... அப்புறம் எதுக்கு இப்போ பேச்சு வார்த்தை...? (ஒன்றுமே தெரியாத அப்பாவி போல கேட்கிறார்)

**மு.இராணுவ அதிகாரி (வாதி):** சார் நீங்க போட்டுத்தந்த பாதை, சனங்க மலம் கழிக்கிற இடமுங்க. முக்கியமா பெண்கள் வெளியே போறதுக்கு அந்த இடம்தான் ஒதுக்குப்புறமா இருக்கு. ரெண்டாவது, மழை காலத்துல வெள்ளம் வர்ற பாதையும் இந்த ஓடைதான். அதனால எங்களுக்கு வேற பாதை ஏற்பாடு பண்ணிக் குடுக்கணும் சார்.

**ஆர்.டி.ஓ:** ஆமா... நான் வந்தப்போ கூட அசிங்கமாதான் இருந்தது. மென்சஸ் துணியெல்லாம் கிடந்தது.

(வி.ஏ.ஓ,ஆர்.ஐ.யைப் பார்த்து) வேற பாதை எங்கய்யா இருக்கு? சொல்லுங்கய்யா?

**கிராம நிர்வாக அதிகாரி:** வேற பாதை ஒண்ணும் இல்ல சார். சுற்றிலும் பட்டா நிலங்கள்தான் சார் இருக்கு. வேறு பாதையே இல்ல சார்.

**மு.இராணுவ அதிகாரி:** ரெண்டு பாதை இருக்கு சார். ஒண்ணு, ஊருக்கு நடுவுல பஞ்சாயத்து போர்டு போட்ட தெருப் பாதை இருக்கு. ரெண்டாவதா மேற்கு பக்கம் சத்துணவுக் கூடம் வழியா ஒரு பாதை இருக்கு சார். ஊருக்குள்ளே போற பாதைகூட எங்களுக்கு வேணாம் சார். ரெண்டாவது பாதையை குடுத்தீங்கன்னா போதும் சார்.

**ஆர்.டி.ஓ:** இவரு ஒரு ஆளு போதும்ய்யா... ஊரைக் கெடுக்குறதுக்கு. இவரு ஊரு திருச்சிங்க. இவருக்கும் இந்த ஊருக்கும் சம்மந்தமே இல்ல. இங்க வந்து பிரச்சனையை கௌப்புறாரு... (என்று சக அதிகாரிகளிடம் சொல்கிறார்)

**மு.இ.அதிகாரி:** சார் எனக்கு பூர்வீகமே இந்த ஊருதான். எங்க அப்பா, அம்மா, தாத்தா எல்லாம் இங்கதான் இருந்தாங்க. நான் திருச்சியில வேலை செஞ்சிகிட்டு இருந்தேன். அதனால நான் இங்க பேசுறதுக்கு முழு உரிமை இருக்கு சார்.

**ஆர்.டி.ஓ:** சரி... விடுங்க (பிரதிவாதிகளைப் பார்த்து) நீங்க என்னய்யா சொல்றீங்க?

**ஒரு பெரியவர்:** இவரு சொல்ற பாதையில கோயில் இருக்கு சார். அதை விட முடியாது. இப்போதைக்கு நடக்குறதுக்குத்தான் அதை அனுமதிப்போம். பொணத்தை தூக்கிட்டுப் போக அனுமதிக்க முடியாது சார். சாமி தீட்டாயிடும்!

**தோழர். பாக்கியராசு:** ஏன் முடியாதுங்கு நீங்க? நீங்க அந்தப் பாதையில பொணத்தை தூக்கிட்டுப் போறீங்களே... அப்போ தீட்டாகாதா? அது பஞ்சாயத்து போர்டு செலவு பண்ணி போட்ட பாதை. மேலும், அந்தப் பாதையில கோயில் இருக்குதுங்குறதே பச்சைப் பொய். அரசாங்கம் போட்ட பாதையில இவங்களப் போகக் கூடாதுன்னு நீங்க ஏன் சொல்றீங்க?

**பிரதிவாதி பெருமாள்:** நீங்க எங்க ஊரு கிடையாது. மீனாட்சிபுரத்துக்காரரு. வி.வி.மு.வுல இருக்கீங்க. உங்கள இங்க பேச அனுமதிக்க முடியாது.

**ஆர்.டி.ஓ.:** யாரு யாரு மீனாட்சிபுரத்துக்காரங்க?

**பெருமாள்:** பாக்கியராசு.. இரவி ரெண்டு பேரு இருக்காங்க சார்.

**ஆர்.டி.ஓ:** நீங்க இதுல கலந்துக்க முடியாது. வெளியே போங்க... போங்க (கோபமாக விரட்டுகிறார்)

**தோழர்:** எனக்கு வாதிகள் தரப்புல முறையா அழைப்புக் கடிதம் கொடுத்திருக்காங்க. அதனாலதான் சார் நாங்க வந்திருக்கோம். (கடிதத்தை எடுத்துக் காட்டுகிறார்)

வெளி ஊருக்காரரு... ஏத்துக்க மாட்டோமுங்கிறீங்களே.. இப்போது போடி தொகுதி எம்.எல்.ஏ. ராமராசுவின் ஊரு கம்பம் தொகுதியில் இருக்கு. அவரை ஏத்துக்கிட்டு ஓட்டுப் போட்டீங்கள்ல! ஜெயலலிதா கூட கர்நாடகத்துக்காரருதான். தேர்தல்ல நிக்காமலே அந்தம்மாவை முதலமைச்சரா ஏத்துக்கிட்டீங்



படிப்பகம்

www.padippakam.com

கள்ல! இவங்கள ஏத்துக்கிட்ட நீங்க, என்ன மட்டும் ஏன் ஏத்துக்க முடியாதுங்கு றீங்க?

(ஆர்.டி.ஓ. முதல் எல்லாரும் வாயை மூடிக் கொண்டனர்)

**ஆர்.டி.ஓ. (பிரதிவாதிகளைப் பார்த்து):** அந்தப் பாதையில் அவங்க போனா போயிட்டுப் போறாங்க. அதுல உங்க ளுக்கு என்ன இடைஞ்சல்?

**மு.இ. அதிகாரி:** சார் நாங்க சமீபத்துல சாமி கும்புட்டோம். அதுக்கு நான்தான் பூசாரி. அந்தச் சாமி கும்பத்தைக் கூட அந்தப் பாதையில கொண்டு போக அனு மதிக்க மாட்டேங்குறாங்க சார்!

**அதிமுக நபர்:** ஏம்ப்பா சமத்துவம் கேக்கு றீங்கல்ல... அரசாங்கத்துல காலனி வீட்டு சலுகையெல்லாம் நீங்கதான அனுபவிக்கி றீங்க. எங்களுக்கு எங்க தர்றாங்க? அந்தச் சலுகைகளை எங்களுக்கு பகிர்ந்தா தார்றீங்க!

**தோழர்:** உங்களுக்கு சலுகை இல்லைன்னு யாரு சொன்னது? டொம்புச் சேரி, சிந்தலைச்சேரி காலனி வீடுகள்ல பிற்படுத் தப்பட்டவங்களுக்கு 24 சதவீத ஒதுக்கீடு பண்ணியிருக்குல்ல... அது எப்படி வந்துச்சு?

*(இப்போது சி.பி.எம், பிஜேபி உறுப்பி னர்கள் உட்பட எல்லோரும் ஆளாளுக்கு கத்திப் பேசுகிறார்கள். முன்னாள் இரா ணுவ அதிகாரி முத்தையாவை வா, போ, நீ என்று கை நீட்டிப் பேசுகிறார்கள்.)*

**மு.இ. அதிகாரி** (ஆர்.டி.ஓ.வைப் பார்த்து): சார் பெரிய அதிகாரி நீங்களே என்னை வாங்க, போங்கன்னு பேசுறீங்க. ஆனா இவங்க என்னை மரியாதை இல்லாமப் பேசுறாங்க சார். நானும் ஒங்கள மாதிரி இராணுவத்துல பச்சை மையில கையெ ழுத்துப் போடுற வேலை செய்தவன்தான் சார். நீங்க இதைக் கண்டிக்கணும் சார்.

**தி.மு.க. நபர்:** என்னய்யா மரியாதை இல்லாம பேசிட்டோம். 15 வருசத்துக்கு முன்னால மாதாரி ஆளுக (சக்கிலியர்) கீழே உட்கார்ந்துதானே டீ குடிச்சீங்க. இப்போமேலே உட்கார்ந்து டீ குடிக்க விடு றோம்ல.. பெரிசா பேசுறான்.

**ஆர்.டி.ஓ:** ஏய் மாதாரி, அப்படி - இப்ப டின்னு சாதியை சொல்லிப் பேசினகேசைப் போட்டு உள்ள தள்ளிடுவேன்... ராஸ்கல்! என்னடா பேசுற.. இதுதான் உனக்கு கடைசி எச்சரிக்கை! இனிமே எங்காவது இப்படி பேசினா தொலைச்சுப்புடுவேன் தொலைச்சு!

**ஆர்.டி.ஓ:** (கிராம அதிகாரி, ஆர்.ஐ.யை பார்த்து). ஏய்யா... இந்த மாதிரி சின்னப் பிரச்சனைகளையெல்லாம் ஊருக்குள்ளே போயி நீங்களே பேசி முடிக்க வேண்டியது தானே! என்கிட்ட கொண்டுவந்து தொல்லை பண்றீங்களே! நான் ரிடையர்டு ஆக 3,4 மாதம்தான் இருக்கு. இதே மாதிரி புதுப்பட்டியில ஒரு பிரச்சனை இருக்கு. இப்படி பஞ்சாயத்து பேசிக்கிட்டே இருக்கு றதுதான் என் வேலையா?

*(கடுப்பாகிப் போன ஆர்.டி.ஓ., பிரதிவாதி களை நோக்கித் திரும்புகிறார்.)*

"என்னய்யா இது. தேர்தலுக்கெல்லாம் அமைதியா ஒத்துழைப்பு கொடுத்தீங்களே. இப்ப வந்து உயிரை வாங்குறீங்களே!"

*(தனது அமைதியைக் குலைப்பதாக எண் ணினார் போலும். மேலும் தொடர்ந்தார்.)*

"இவங்க நம்ம பேச்சை கேட்க மாட்டாங்க, இரண்டு பக்கமும் பத்து, பத்து பயலுகள கேசைப் போட்டு உள்ளே தள்ளினாத்தான் அடங்குவாங்க"

**இன்ஸ்பெக்டர்:** அய்யா, இந்தப் பிரச்ச னையை வளரவிட்டதே வி.ஏ.ஓவும் ஆர்.ஐ.யும் தாங்க. ஆரம்பத்திலேயே என்கிட்ட சொல்லியிருந்தா பிரச்சனையை அப்பவே முடிச்சிருப்பேன்யா!

**ஆர்.டி.ஓ:** இதுக்கெல்லாம் கௌரிசங்கர் டி.எஸ்.பி.தான் சரியான ஆளு. பேசிப் பாப்பாரு, ஒத்துவரலைன்னா உள்ளே தள்ளிடுவாரு. நமக்குத் தொல்லையே வராது.

*(ஆர்.டி.ஓ.வும், இன்ஸ்பெக்டரும் பேசும் தோரணையைப் பார்த்து வாதி - பிரதிவா திகளிடம் ஒருவித பீதி ஏற்படுகிறது. பிரச் சனை என்று வருபவர்களை பீதிக்கு உள்ளாக்கி, அந்தப் பீதியிலிருந்து மீள்வ தற்குள் தங்கள் முடிவை ஏற்கச் செய்யும் ஆர்.டி.ஓ.வின் நரித் தந்திரம் சிறிது எடுபடு கிறது)*

**தோழர்:** சார் ஊருல இருக்குற தெருப் பாதை பஞ்சாயத்து போர்டு போட்டது. அந்தப் பாதையில பொணத்தைக் கொண்டு போகக் கூடாதுங்குறாங்க. அர சாங்கப் பாதையில நடக்கக் கூடாதுன்னு சொல்றதுக்கு நீங்க யாருய்யான்னு கேளுங்க சார்! அவங்க முடியாதுன்னா சட்டப்படி அவங்க மேல நடவடிக்கை எடுக்க வேண்டியதுதானே. இதுல உங்களுக்கு என்ன பிரச்சனை?

**ஆர்.டி.ஓ:** ஒருத்தன் பாதை கேட்டு, அடுத்தவன் மறுக் கிறதுனாலதானே பிரச்ச னையே வருது! சட்டம் ஒழுங்கு கெடுது! இது இங்க மட்டுமா நடக்குது. நாடு பூராவும் தான் நடக்குது. அதனா நான் என்ன சொல்றேன்னா, ஒருத்தருக் ஒருத்தர் விட்டுக் கொடுத்து போனாதா சட்டம் ஒழுங்கு கெடாது.

**தோழர்:** அரசுப் பாதையில இவங்க நடக்கக் கூடாதுன்னு சொல்றது மூல தீண்டாமையை கடைப்பிடிக்கிறாங் சட்டம் ஒழுங்குக்கு பிரதிவாதிகள்தா எதிரா இருக்குறாங்க. இதுல விட்டு கொடுக்கறதுக்கு என்ன இருக்கு?

*(இவனை முதல்லேயே வெளியே தள் ளியிருக்கனும். முடியவிருந்த பேச்சை சட்ட பேசிக் கிளறி விடுறானே என்பதை போல தோழரை ஒரு பார்வை பார்க்கிற ஆர்.டி.ஓ)*

**ஆர்.டி.ஓ:** அந்தக் காலத்துல எல்லா சாதியும் ஒத்துமையா இருந்தாங்கல்ல. எப்படி? அந்தமாதிரி ஒருத்தருக்கொ ருத்தர் ஒத்துப் போகலைன்னா இந்தப் பிர சனை தீராதுன்னு சொல்றேன். (முன்னா இராணுவ அதிகாரியிடம்) நீங் நெனைச்சா இதை முடிக்கலாம். என்ன சொல்றீங்க? வேற என்ன செய்யலாம்னு சொல்லுங்க?

**மு.இ. அதிகாரி:** எங்க தெருவுக்கு கிழக்கே தனியார் நிலம் இருக்கு. அதை அரசே விலைக்கு வாங்கி, அதுல பாதை போட்டுக் குடுத்திருங்க சார். இவங் சொல்ற மாதிரி நாங்க ஊருக்குள்ளேயே போகலை.

**ஆர்.டி.ஓ.:** (கிராம அதிகாரியிடம்): அந் நிலம் யாருதுய்யா? விலைக்கு தருவா ரான்னு கேட்டுப் பாருங்க.

**கிராம நிர்வாக அதிகாரி:** அது கோவிந் ராசு என்பவருடைய நிலம்சார். அவரு விக்க மாட்டார் சார்.

**ரவி (பா.ம.க):** (பிரதிவாதிகளிடம்) பஞ்சா யத்து தேர்தல்ல எங்கள் சமூகத்தை (பள்ளர் களை) வளரவிடக்கூடாதுன்னு, இவங் களை (சக்கிலியரை) சேர்மனா தேர்ந்தெ டுத்தது நீங்கதானே! இப்போ நீங்களே இவங்களுக்கு பாதை விட மாட்டேங்கு றீங்க... (வாதிதரப்பினரைப் பார்த்து)...





படிப்பகம்

www.padippakam.com

எங்க தயவு வேணாம்னுதான ஊர்க்காரங்களோட (மேல் சாதியினருடன்) சேர்ந்தீங்க. இப்பத் தெரியுதா கதை?

(பிரதிவாதியைப் பார்த்து) ஏய்யா எங்க சமூகத்துக்காரங்க பொணத்தை தூக்கிட்டு வந்தா இப்படி தடுக்க முடியுமா உங்களால? எளிய சாதின்னுதானே இவங்களைத் தடுக்குறீங்க!

**பிரதிவாதிகள்:** உங்களத் தடுப்போமாங்க! உங்கள யாரு சொன்னது? நீங்க ஏன் இதுல வந்து தலையிடுறீங்க?

**ஆர்.டி.ஓ.:** சரி... சரி... நீங்க சொல்லுங்க முத்தையா. என்ன செய்யலாம்?

**மு.இ. அதிகாரி:** சார், ஒண்ணு ஊருக்குள்ள இருக்குற பாதை வழியா எங்களை அனுமதிங்க. அல்லது தனியார் நிலத்தை வாங்கி, பக்கத்து நிலத்துல பாதை போட்டுக் குடுங்க. இந்த ரெண்டுல ஒண்ணுதான் சார் எங்களுக்கு வேணும். வேற எதையும் நாங்க ஏத்துக்க மாட்டோம் சார்!

**ஆர்.டி.ஓ:** (பிரதிவாதிகளிடம்) நீங்க என்னய்யா சொல்றீங்க?

**திமுக மற்றும் அதிமுக நபர்கள்:** (கோரசாக) அது முடியாது சார். ஒண்ணு வேணா செய்யுங்க. நாங்க எல்லோரும் ஊரை விட்டே வெளியேறிறோம். எங்க வீடு, காடு எல்லாத்தையும் அவங்களுக்கே குடுத்துருங்க.

**ஆர்.டி.ஓ.:** சரிய்யா... இது முடியாத பிரச்சனை! இரண்டு தரப்புலயும் சொல்றத எழுதி வாங்கிக்கீங்க. அதைக் கலெக்டருக்கு அனுப்புவோம். இனி கலெக்டர் முன்னிலையில் பேசி தீர்த்துக்கட்டும். அவ்வளவுதான்.

*(என்று வி.ஏ.ஓ., ஆர்.ஐ.இடம் சொல்லி விட்டுப் போய் விட்டார். பிரதிவாதிகள் வெற்றிக் களிப்புடனும், வாதிகள் தரப்பில் 'எந்த மேலிடத்துக்குப் போனாலும் விடுவதில்லை. ஒரு கை பார்த்திடுவோம்' என்ற நம்பிக்கையுடனும் கலைந்து செல்கின்றனர்! அருந்ததியர் குடியிருப்பில் ஒரு பிணம் விழும் நாளை எதிர்பார்த்து மேட்டுப்பட்டி கிராமம், தற்காலிக அமைதியில் இருக்கிறது!).*

குறிப்பு:

1. அரசு அதிகாரத்தில் நாம் பங்கு போட்டுக் கொண்டால் இழந்த நம் உரிமைகளை மீட்டு விடலாம் என்று பறைசாற்றும் தலித் தலைவர்களின் கவனத்திற்கு: பேச்சு வார்த்தைக்கு தலைமை தாங்கிய ஆர்.டி.ஓ. மற்றும் தேவாரம் கிரைம் எஸ்.ஐ. சிங்காரம் இருவரும் தலித்துக்கள் தான்!

2. இந்து ஒற்றுமை பேசும் பிஜேபி, வர்க்க ஒற்றுமை பேசும் சி.பி.எம், தலித் அமைப்புகளுடன் கூட்டணி வைத்திருக்கும் தி.மு.க., அ.தி.மு.க. ஆகிய அனைவரும் இறுக்கமாக ஒன்றுபட்டு நிற்பது யாருக்கு எதிராக என்று பாருங்கள்!

— விவசாயிகள் விடுதலை முன்னணி
தேவாரம் கிளை,
உத்தமநாளையம் வட்டம்

---

மீண்டும் சோவியத் யூனியன் உருவாக வேண்டும் என்ற நோக்கத்திற்காக கனடா நாட்டிலிருந்து வெளிவரும் பத்திரிகை 'நார்த் ஸ்டார் காம்பஸ்'. இந்த பத்திரிகையில் பாக்கிஸ்தானிலிருந்து வாசகர் ஒருவர் எழுதிய கடிதத்தை இங்கே மொழி பெயர்த்துத் தருகிறோம். முசுலீம்கள் என்றாலே ஆழ்ந்த மதப்பற்றும் மதவெறியும் கொண்டவர்கள்; அவர்களது சொல்லும் செயலும் முழு வாழ்க்கையும் மதத்திலிருந்து பிரிக்க முடியாதபடி பிணைக்கப்பட்டிருக்கிறது; இவையெல்லாம் இந்தியாவின் இந்து உளவியல் ஏற்படுத்தியிருக்கும் பொதுக் கருத்து. இது உண்மைதானா?

வெளிப்பார்வைக்கு உண்மை போலத் தோன்றினாலும் முழு உண்மையல்ல. இங்கும், ஏனைய இசுலாமிய நாடுகளில் உள்ள முசுலீம் மக்களில் பெரும்பான்மையினரும் ஏனைய ஏழை நாடுகளைப் போல ஏழ்மையிலும், அறியாமையிலும் உழல்கின்றனர். அதேசமயம் இசுலாமிய ஆளும் வர்க்கமும், இசுலாமிய அறிவு ஜீவிகளைக் கொண்ட சிறு முதலாளிய வர்க்கமும் மத நம்பிக்கையின் மூலம் தமது ஆதிக்கத்தைத் தொடர மதப் பிரச்சாரம் செய்கின்றன. இத்தகைய சூழ்நிலையில் இசுலாமிய உழைக்கும் மக்களிடம் ஒரு பொதுவுடைமைக் கட்சி தோன்றுவதும், வளருவதும் சாதாரண விசயமல்ல.

சோவியத் யூனியனிலும், சீனாவிலும் இசுலாமிய உழைக்கும் மக்கள் பொதுவுடைமைக் கட்சிகளில் அணி திரட்டப்பட்டிருக்கிறார்கள். கூடவே மதத்தின் பெயரால் தொடர்ந்து வந்த ஆதிக்கப் பண்பாட்டினையும் ஒழித்திருக்கிறார்கள். இன்று சோசலிசம் இந்நாடுகளில் வீழ்த்தப்பட்டாலும், இம்மக்களிடம் வேர்விட்டுவிட்ட சோசலிச - ஜனநாயகப் பண்பினை இசுலாமிய மதம் ஏதும் செய்ய முடியாது.

# சோவியத் யூனியன் எங்கள் 'காபா'

தமிழக இசுலாமிய இளைஞர்கள் தமது மக்களை விடுவிக்கவல்லது எது என்பதினை தீவிரமாக சிந்திக்க வேண்டும் - இந்தக் கடிதத்தைப் படித்த பிறகு.

*அன்பார்ந்த நண்பர்களே!*

*.... நான் ஒன்பதாவது வகுப்பு படிக்கும் இளமைப் பருவத்திலேயே இந்த முற்போக்கு இயக்கத்தில் சேர்ந்து விட்டேன். காரணம் எங்கள் நாட்டின் மக்களுக்கு இருக்கும் பிரச்சினைகள் கடுமையானது. மனித இனம் என்ற வகையில் கூட இங்கே உரிமை கிடையாது. ஒரு குடும்பத்தில் சராசரியாக 9 முதல் 14 குழந்தைகள் வாழும் எங்கள் நாட்டின் வறுமை யாரும் அறிந்திராத ஒன்று.*

*சோவியத் யூனியன் எப்போதும் எங்களுக்கு நம்பிக்கையளித்த ஒரு நாடு. அந்த நாடுதான் தனது பல் தேசிய இன மக்களைக் கவனித்தும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியும் சாதித்திருக்கிறது. சோவியத் யூனியன் செய்ததைப் போலவே நாங்களும் எங்கள் உழைக்கும் மக்களின் வாழ்க்கையை உயர்த்துவதற்கு ஓய்வின்றிப் போராடி வருகிறோம்.*

*இப்போது நிலைமை மாறிவிட்டது. இனி சோவியத் யூனியன் என்றொரு நாடு இல்லை. அங்கே முதலாளித்துவம் வலிமையுடன் அரியணை ஏறிவிட்டது. இந்த சோகமான நிகழ்ச்சி, சோவியத் யூனியனை முன்னுதாரணமாகப் பார்த்த எங்கள் மக்களின் நம்பிக்கையைக் குலைத்து, போராடும் உத்வேகத்தை நொறுங்கவும் செய்திருக்கிறது.*

*பாக்கிஸ்தானிலிருக்கும் நாங்கள் சோவியத் யூனியனை எங்களது "காபா"வாகப் பார்க்கிறோம். இசுலாமிய நம்பிக்கையின்படி "காபா" என்பது இறைத் தூதரைப் போல ஒவ்வொருவரும் மதிக்கும் ஒரு விசயமாகும். சோவியத் யூனியன் எங்களின் இறைத் தூதராகவும் இருந்தது; எங்களை எதிர்காலத்திற்கு அழைத்துச் செல்லும் ஒளி விளக்காகவும் இருந்தது. முன்னாள் சோவியத் யூனியனில் இருந்த சில சந்தர்ப்பவாதிகள் எங்களது "காபா"வை இடித்தார்கள்; முன்னேற்றப் பாதையின் ஒளிவிளக்கை அழித்தார்கள்.*

*ஆயினும் தற்போது (சோவியத் யூனியன் மீண்டும் மலரும்) ஒரு சிறு ஒளி எங்கள் இதயத்தில் மினு மினுக்கிறது; எங்களது நண்பர்கள் இதயத்திலும்....*

தங்களின் உண்மையுள்ள
முகமது ஆசீப் ரஷீத்
அவாமி கமிட்டி, பாக்கிஸ்தான்.

www.padippakam.com

பிரம்மாண்டமான அமெரிக்க ஏகாதிபத்தியப் படையை வியத்நாமின் மக்கள் படை 25 ஆண்டுகள் விடாப்பிடியாக எதிர்த்துப் போராடி விரட்டிய வீர வரலாறு கம்யூனிச வர்லாற்றிலேயே முக்கிய வரலாறு. **ஹோசிமின்** போன்ற வியத்நாம் மக்கள் தலைவர்களை நினைத்துப் போற்றுவதுபோலவே, **நகூயென் வான் டிராய்,** அவரது மனைவி **குயென்** போன்ற வீரர்களையும் நாம் மறக்க மாட்டோம்.

அந்த மாவீரன் டிராயின் வாழ்க்கை ஒரு நாவலாக, **ட்ரான் தின் வான்** என்ற நாவலாசிரியரால் வடிக்கப்பட்டது. அதுதான் ''உன்னடிச்சுவட்டில் நானும்...'' என்ற நாவல். கற்பனை அல்ல; உண்மைக் கதை.

வட வியத்நாம் கம்யூனிஸ்டுகளின் தலைமையில் விடுவிக்கப்பட்ட காலம். தெற்குப் பகுதியில் தேச விடுதலை முன்னணி கட்டியமைக்கப்பட்டு வடக்கு தெற்கை இணைத்து முழு விடுதலை பெற மக்கள் துடித்தார்கள். அவ்வாறு நடக்கக் கூடாது என்பதற்காகவே தன் நேரடி மேற்பார்வையில் ராணுவ நடவடிக்கை எடுக்க அமெரிக்கப் பாதுகாப்புத் துறைச் செயலர் மக்நமாரா தெற்கு வியத்நாம் வந்தான்.

ஆயிரக்கணக்கில் விவசாயிகள் டாங்குகளின் பல் சக்கரங்களின் கீழே தேய்த்து நசுக்கப்பட்டுக் கொல்லப்பட்டார்கள். விசாரணைகள் இல்லாமல் பல நூறு போராளிகளும் அவர்களது குடும்பங்களும் கொடுஞ்சிறைக்குள் வீசி எறியப்பட்டுச் சொல்ல முடியாத சித்திரவதைகளை அனுபவித்தார்கள். அந்தக் கட்டத்தில் மக்நாமாராவைக் கொல்வதற்கான வேலை பணிக்கப்பட்டு, மக்நமாரா வரும் வழியில் பாலத்துக்குக் குண்டு வைக்கும் திட்டம் சிறு இழையில் தவறிவிட, நகூயென் அமெரிக்க வெறியர்களிடம் சிக்கிக் கொண்டார். அவரது மனைவி - குயென்னையும் சிறைக்குள் தள்ளி வாட்டி எடுத்தனர்.

நகூயென், குயென் போன்ற வீரர்கள் எளிய சாதாரண மனிதர்கள். மக்களிடம் பாசம் கொண்ட, நாட்டின் மீது நேசம் கொண்ட, மற்றவர்கள் துயரங்களில் தங்கள் இன்னல்களைக் கரைத்துக் கொண்ட, அந்த நேரங்களில் மற்றவர்கள் எதை வைத்து மகிழ்ந்தார்களோ அதையே பெரு மகிழ்ச்சியாய்ப் போற்றி வாழ்ந்த உறுதி வாய்ந்த மனிதர்கள். வியத்நாம் மண்ணும், மக்களின் - போராளிகளின் செங்குருதிப் பதாகைகளும் கலந்து ஊடாடிய வரலாற்றைப் படிக்கும் போது, நம்மால் முடியும் - நம்மாலும் முடியும் என்ற மனித நம்பிக்கை ஊற்றெடுக்கிறது.

ரத்தமும் சதையுமாக நம்மிடம் பேசும் நாவலின் பாத்திரங்கள் ஒவ்வொரு பக்கத்திலும் தோன்றுகிறார்கள்.

டிராய், குயென் இருவரும் காதலித்துத் திருமணம் செய்து கொண்டார்கள். மண முடித்து 19 நாட்களே ஆன நிலையில் குயென்னின் வாழ்க்கையில் ஒரு பெரிய இடி! டிராய் கைது செய்யப்பட்டு, அடித்துச் சித்திரவதை செய்யப்பட்டு, விசாரணைக்

# நூல் அறிமுகம்




ட்ரான் தின் வான்

காக போலீசால் வீட்டுக்கு அழைத்து வரப்படுகிறார். வீட்டில் எங்காவது வெடி குண்டுகள் உண்டா என்று சோதிக்கிறது போலீஸ்; நகூயென் ஒரு நேர்மையான தொழிலாளி - தனது இனிய நண்பன், காதலன் - அது மட்டுமே குயென்னுக்குத் தெரியும். கட்டுப்படுத்த முடியாமல் குயென் கதறுகிறாள்; அழுகிறாள்.

..ஆனால் அவள் எதிரிலேயே நகூயென் நடந்து கொள்ளும் விதம் அவளைச் சிந்திக்க வைக்கிறது. மண வாழ்க்கையின் ஆரம்ப கால இனிய கனவுகளைப் பற்றி நைச்சியமாகப் பேசுகிறான் காவல் அதிகாரி. அந்த இனிய மணம் கமழும் நினைவு நீடிக்க வேண்டும் என்றால் குண்டுகள் எங்கே என்று சொல்லி விட்டால் போதும் என்கிறான். ''எங்கெல்லாம் அமெரிக்க வெறியர்கள் இருக்கிறார்களோ, அங்கெல்லாம் வெடி குண்டுகள் இருக்கின்றன, போங்கள்!'' என்று சீறுகிறார் நகூயென். அது குயென் வாழ்க்கையில் முதல் பாடம். சீற்றத்தின் சூடும், அதன் நியாயமும் அவளது அழுகை என்ற உணர்ச்சியைச் சட்டெனத் தடுக்கிறது; அடுத்த நிமிடம் அவள் எதையும் சந்திக்கத் தயாராகிறாள். இந்த மனித ரச வாதங்கள் ஒவ்வொன்றாய்க் காட்டப்படுகின்றன நாவலில்.

கீழே இருந்து செங்குத்தான படிகளை கடந்து தண்ணீர் எடுத்துச் சென்று இளம் மனைவிக்குக் குளிக்க உதவுகிறார் நகூயென். வீட்டுக்குள்ளே அழகாகப் பொருட்களை அடுக்கி இல்லறத்தின் முதல் சில நாட்களைப் பெரிய கனவுகளோடு தொடங்குகிறாள் குயென். திருமணமான புதிதிலேயே நட்பு, உறவு வீடுகளில் விருந்துக்குச் செல்லும் வழக்கம் வியத்நாமிலும் உண்டு. ஆனால் அந்த ஏற்பாடுகள் தள்ளிப் போகின்றன. பழுதடைந்த எந்திரம் ஒன்றைச் சரிபார்க்கும் வேலை இருப்பதாகக் கூறி நகூயென் வெளியே சென்று இரவு தாமதமாகத் திரும்புவதும், நண்பர்களோடு வீட்டில் உட்கார்ந்து சிறு கற்களை நகர்த்தி ஏதோ விளையாட்டுப் போல திட்டம் செய்வதும் குயென்னுக்குப் பிடிக்கவில்லை. சண்டை போடுகிறாள்; வீம்பு பிடிக்கிறாள். இது ஆரம்ப கால டிராய் - குயென் வாழ்க்கை.

பிறகு, நகூயென் சிறைப்பட்டுச் சித்திரவதைப்படுவதும், சிறைக்குள்ளே சில மாதங்களில் தான் சந்திக்கும் கம்யூனிசப் போராளிகளின் குடும்பங்கள் - அவர்களின் உறவினர்கள் மூலமாகப் புதியதோர் உலகுக்காகப் போராடும் மக்களின் வாழ்க்கை பற்றி குயென் அறிந்து கொள்வதும், அருகருகே நகர்த்தப்பட்டு குயென்னின் மாற்றங்கள் அற்புதமாகச் சித்தரிக்கப்படுகின்றன.

நகூயென் ஆரம்பத்தில் குயென்னிடம் சண்டை போட்டது, கடிந்து கொண்டது ஏன் என்பது பற்றி சகோதரி எக்ஸ் சிறையில் விளக்குகிறாள். ''குய்யென், நீ ஒரு அப்பாவிப் பெண். உன்னை டிராய் ரொம்பவும் நம்பியிருக்கிறார்; புரட்சிகரமான வேலைக்கு உனக்கு வழியும் காட்டியிருக்கிறார். சைகோன் (தென் வியத்நாம் தலைநகர்) போன்ற எதிரிகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நகரத்தில் மக்களின் அன்பும், தக்க பாதுகாப்பும் இல்லை என்றால் மிக எளிதாக ரகசிய உளவாளிகள் கையில் பிடிபட்டு விடுவார்கள். நல்லது எது, கெட்டது எது என்று பிரித்து உணரும் பக்குவம் பெற்ற பெண்ணாக மாற்ற வேண்டும் என்பதற்குத்தான் டிராய் கடிந்து கொண்டிருக்கிறார். அது புரிகிறதல்லவா?''

பல போராளிகளின் வாழ்க்கை, மக்கள் எதிரிகளை எதிர் கொண்டு போராடிப் பெற்ற அனுபவங்கள் என்று பல பக்கங்க


படிப்பகம்

www.padippakam.com

ளிலிருந்தும் குயென்னுக்கு வாழ்க்கை எடுத்துச் சொல்லப்படுகிறது. சென்ற நாட்களைப் புதிய ஒளியில் பார்க்க ஆரம்பிக்கிறாள் அவள்.

சின்னவயதிலேயே பிரெஞ்சு ஆதிக்கக்காரர்களால் சிதைக்கப்பட்ட ஓர் ஏழ்மை வியத்நாமியக் குடும்பத்தில் தாயைப் பறி கொடுத்து - எங்கோ தொலைதூரம் உழைக்கச் சென்று விட்ட தந்தையின் பரிவை, பாசத்தைப் பறி கொடுத்து ஏங்கிய டிராய் பல தொழிலாளிகளின் குடும்ப உறுப்பினர்களோடு கலந்து பழகி வாழ்ந்தது பற்றி அறிந்து கொள்கிறாள் குயென்.

கஷ்டங்கள் நிறைந்த புரட்சி வேலைகள், கடமைகளில் தன் சக்தியையும் மனத்தையும் ஒருமித்து ஈடுபடுத்திக் கொண்டே மனைவியை மகிழ்ச்சிப்படுத்தவும் நகூயென் அக்கறை எடுத்துக் கொள்கிறார். அவற்றை எண்ணி வியந்து அவரது வாழ்க்கையின் நோக்கத்தை விளங்கிக் கொள்கிறாள் குயென். ''நகூயென்னுக்குப் பல சமயங்களில் தடையாக, தொந்திரவாக அல்லவா இருந்துவிட்டேன்'' என்று குயென் யோசிக்கிறாள்.

டிராயின் நடவடிக்கையில் சம்பந்தப்பட்டிருப்பார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் சிறைக்குள் தள்ளப்பட்ட இருவர் — நான்கே வயது நிரம்பிய டானும் அவனது பாட்டியும். மெள்ள மெள்ள டான் என்ற அச்சிறுவனின் பின்னணி சிறு காட்சியாக விரிகிறது. தெற்கு வியத்நாமின் பொம்மை அரசாங்கக் கொடியை வணங்க மறுத்து அடித்தே கொல்லப்படுகிறாள் டானின் தாய்; தந்தையோ வாழவே கடுமையாக உழைக்க வேண்டியிருக்கிறது; டிராய்தான் டானுக்கு உதவி செய்கிறார். தன் அப்பாவைக் காட்டிலும் டிராயைத்தான் அதிகம் நினைப்பான் டான். இந்த ஒரு குடும்பத்தின் கதையே டிராயின் மதிப்பைக் கூட்டி விடுகிறது' குயென்னிடம்.

அதேபோல திருமதி எம். தன் மகளைப் பார்ப்பதற்காகச் சிறைக்கு வரும் அவரை, தான் விடுவிக்கப்பட்ட பிறகு நகூயென்னைத் தேடி வரும் குயென் சந்திக்கிறாள். நட்பு மலர்கிறது. திருமதி எம். தன் இரண்டு குழந்தைகள் சிறையில் இருப்பதாகச் சொல்வார். ஒன்று அவரது மகள்; மற்றவர்; நகூயென்.

குயென்னுக்கு அருமருந்தாகப் பயன்படும் பாடல்களை ஒரு சிறைத் தோழி கற்றுத் தருகிறாள். அதற்காகவே அவளை அடித்துப் போடுகிறார்கள் சிறைக் காவலர்கள். திரும்பவும் செல்லுக்கு (அறை)த் திரும்பிய அப்பெண் மீண்டும் பாடத் தொடங்கி விடுகிறாள். மற்றவர்கள் தடுத்தும் அவள் கேட்கவில்லை. பாடல்



களைக்கற்றுத் தருவது அவளுக்குப் புரட்சி வேலை. அவை தைரியத்தை ஊட்டக்கூடியவை; உயர்ந்த லட்சியத்தை ஊட்டக்கூடியவை. பாடல்கள் - சிறைக்கு உள்ளேயும், வெளியே மக்களிடையே வேலை செய்யும் போதும் புரட்சி உணர்வை வற்றாதிருக்கச் செய்யும் நீர் ஊற்று.

குயென்னுக்குத் தையலும் பாடலும் கற்றுக் கொடுத்த தோழி ''அழவே அழாதே. அதிகமாகப் பாடு'' என்று சொல்லிக் கொடுக்கிறாள். ''அழ வேண்டுமென்றால் அழு. ஆனால் எதிரியின் முன்னால் மட்டும் அழாதே. அது நமக்குப் பலவீனம்'' என்று வீரத்தைக் கற்றுத் தருகிறாள். குயென் அழுவதைக் குறைக்கிறாள்; பிறகு நிறுத்தியும் விடுகிறாள்.

வாழ்க்கைப் பாடங்கள் புரட்சி எனும் தீச்சுவாலையை அவளிடம் ஏற்றி விடுகின்றன. அவளிடம் மட்டுமா? நம்மிடமும்தான்.

'எதிரிகளை வெறுக்கக் கற்றுக் கொள்!' என்பது ஒரு சிறிய பாடம்தான். ஆனால் நம்மிடமே உள்ள அற்பமான, தவறான கருத்துக்கள், பழக்கவழக்கங்கள் போன்ற சுமைகளை வெறுத்து, போராடித் தூக்கி எறிய வேண்டியுள்ளது. அது மிகப் பெரிய பாடம். நாவலைப் படிக்கின்ற ஒவ்வொருவருக்கும் உள்முக விமரிசனம் தோன்றிவிடும். ''சுகபோக வாழ்க்கைக்காகத் தனது சொந்த நாட்டு மக்களுக்கே துரோகம் செய்து கொண்டிருக்கும் ஏவல் நாய்களைப் போல என்னால் வாழ முடியாது!'' என்று போலீசைக் காறித் துப்பும் நகூயெனின் சொற்கள் நம்மிடம், நம் குடும்பத்தின் உள்ளேயும் எட்டிப் பார்க்க முயற்சி செய்யும் நுகர்பொருள் மோகம், அடிமைத்தனத்திற்கு எதிராகப் போராடு என்ற அபாய எச்சரிக்கை கொடுக்கும்.

**பிறகு, நகூயென் சிறைப்பட்டுச் சித்திரவதைப்படுவதும், சிறைக்குள்ளே சில மாதங்களில் தான் சந்திக்கும் கம்யூனிசப் போராளிகளின் குடும்பங்கள் - அவர்களின் உறவினர்கள் மூலமாகப் புதியதோர் உலகுக்காகப் போராடும் மக்களின் வாழ்க்கை பற்றி குயென் அறிந்து கொள்வதும், அருகருகே நகர்த்தப்பட்டு குயென்னின் மாற்றங்கள் அற்புதமாகச் சித்தரிக்கப்படுகின்றன.**

கம்யூனிஸ்டுகளின் உற்றார், உறவினர், நண்பர்கள், நெருங்கி ஊடாடி வாழும் மக்கள் என்று துயரத்துக்கு இடையேயும் மகிழும் மாவீரர்கள் ஒரு தனிக் குடும்பம் போல எதிர்காலக் குறியீடாக வாழ்வதை நாவல் பளிச்சென்று சொல்கிறது.

கொரில்லாப் போராட்டங்களிலிருந்து, அரசியல் எழுச்சிப் போராட்டங்கள், நீண்டகால மக்கள் யுத்தம் வரை வியத்நாம் என்னும் போதெல்லாம், நாவலை பார்க்கும் போதெல்லாம் நினைவில் வரும். அது நூலின் வெற்றி.

அமெரிக்கவெறியன் ஒருவன் ஒரு டாக்சி டிரைவரைச் சுட்டுக் கொன்று விடுகிறான். அந்தச் சவ ஊர்வலம் 'அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டமா'கவும், பிறகு அதுவே 'அமெரிக்க எதிர்ப்பு வாரத்தை'த் திட்டமிடும் தூண்டுகோலாகவும் மாறுகிறது. இச்சம்பவத்தைப் பற்றி குயென்னுக்குக் கூறுகிறார் நகூயென். வியத்நாமின் லட்சக்கணக்கான விவசாயிகள் - தொழிலாளிகளை இணைத்த அரசியல் இயக்கம் எப்படி நடத்தப்பட்டது என்பதை நாவலை சாட்சியாக வைத்துக் காட்சிகளாக பார்க்கிறோம்.

சாதாரண உணர்ச்சிகளுக்கு ஆட்பட்டிருந்த குயென் போன்ற பெண் பின்னாளில் தன் கணவனின் அடிச்சுவட்டிலேயே ஒரு கம்யூனிசப் போராளியாக மலருவதை மாறுவதை நாவல் செறிவான உணர்ச்சிக் கட்டங்களாக விவரிக்கிறது.

நமது பகத்சிங்கைப் போலவே சுட்டுக் கொல்லப்படவேண்டிய தண்டனை பெற்ற நகூயென் கண்ணைக் கட்டியிருந்த கருப்புத் துணியைக் கிழித்து எறிந்து கொண்டே ''ஓ! என் நேசத்துக்குரிய மண்ணை, என் நாட்டைப் பார்க்க விடுங்கள்!'' என்று உரக்கச் சத்தம் போடுகிறார்; அமைதியாகச் சாவை எதிர்கொள்கிறார். வீரம் செறிந்த அந்த களச்சாவு வியத்நாம் மட்டுமல்ல, உலகெங்கும் பேசப்பட்டது; இன்றும் பேசப்படுகிறது.


படிப்பகம்

www.padippakam.com

# 'கொலை செய்யத்தான் பயிற்றுவிக்கப்பட்டோம்'

## ஒரு அமெரிக்கனின் ஒப்புதல்

கட்டாய ராணுவச் சேவைக்கும், வியத்நாம் ஆக்கிரமிப்புக்கும் எதிராக அமெரிக்காவிலேயே போராட்டங்கள் வெடித்ததும், அமெரிக்கா போரில் தோல்வியடைந்து ஓடியதும் வரலாறு. அதன்பின் வியத்நாமில் அமெரிக்க ராணுவம் நடத்திய அட்டூழியங்கள் குறித்துப் பல திரைப்படங்களும், நூல்களும் வெளிவந்து விட்டன. இது சமீபத்தியச் செய்தி.

1969, பிப்ரவரி-25-ஆம் தேதி இரவு தென் வியத்நாமில் தான்பாங் என்ற கிராமத்தில் வியத்காங் கொரில்லாக்களுக்கு எதிரான வெற்றிகரமான தாக்குதலைத் தலைமையேற்று நடத்தியதற்காக அமெரிக்காவின் அதிஉயர்ந்த ராணுவ விருதினைப் பெற்றவர் பாப் கெர்ரி. அதையே அரசியல் மூலதனமாகக் கொண்டு செனட்டர் பதவியில் வெற்றி பெற்று, பின்னர் 1992-இல் அமெரிக்க அதிபர் தேர்தலிலும் களத்தில் இறங்கினார்.

"தான்பாங் கிராமத்தில் நடந்தது இராணுவச் சாதனையல்ல, மனிதப் படுகொலை என்று கேள்விப்பட்ட விஸ்டிகா என்ற அமெரிக்கப் பத்திரிகையாளர், 30 ஆண்டுகளுக்கு முந்தைய அந்த ராணுவ ஆவணங்களைக் கிளறினார்.

முதியவர்களும் பெண்களும் குழந்தைகளுமாக 21 பேர், அன்று நள்ளிரவில் கழுத்தை அறுத்துக் கொலை செய்யப்பட்டிருக்கின்றனர் என்ற கொடூரமான உண்மையைக் கண்டுபிடித்தார்.

நடந்த உண்மையைச் சொல்லுங்கள் என்று கேட்டபோது, "அன்று நள்ளிரவில் எதிரிகள் சுட்டார்கள். நாங்கள் திருப்பிச் சுட்டோம். அதில் சில அப்பாவிகளும் இறந்திருக்கலாம்" என்று பட்டும் படாமலே பேசினார் கெர்ரி.

ஆனால் கெர்ரியின் கீழ் பணியாற்றிய கிலான் எனும் சிப்பாய் மனசாட்சியின் உறுத்தல் தாங்க முடியாமல் உண்மையை வெளியிட்டார்.

"அன்று நடந்தது போர் அல்ல; பச்சையான படுகொலை. அன்று நள்ளிரவில் அந்தக் கிராமத்தில் நுழைந்தோம். முதல் குடிசையில் ஒரு கிழவன், கிழவி, இரு சிறுமிகள், ஒரு சிறுவன் ஆகியோர் தூங்கிக் கொண்டிருந்தனர். அவர்களைச் சத்தம் போடாமல் கழுத்தை அறுத்துக் கொன்றோம். கழுத்தை அறுக்க உத்திரவிட்டதும், அவர்களை அமுக்கிப் பிடித்துக் கொண்டதும் கெர்ரிதான்.



கொலைகாரன் பாப் கெர்ரி

அவர்களுடைய மரண ஓலம் கேட்டு கிராமமே விழித்துக் கொண்டது. உடனே அனைவரையும் வரிசையாக நிற்க வைத்துச் சுட்டுத் தள்ளினோம்."

இனியும் மறைக்க முடியாது என்ற சூழ்நிலை கெர்ரிக்கு உருவாகிவிட்டது. நீங்கள் செய்தது யுத்த தருமத்திற்கே எதிரானதில்லையா என்று நிருபர்கள் கேட்கிறார்கள். "அவ்வாறுதான் நாங்கள் பயிற்றுவிக்கப்பட்டோம்" என்று பதிலளிக்கிறார் கெர்ரி.

டிராயின் மனைவி குயெனின் வாழ்க்கையுடன் இதை ஒப்பிட்டுப் பாருங்கள். மகிழ்ச்சியான மணவாழ்க்கையே லட்சியம் என்று பயிற்றுவிக்கப்பட்ட சராசரிப் பெண் தான் அவள்.

தன் கணவன் ஒரு போராளி என்ற அதிர்ச்சியூட்டும் உண்மை தெரிந்தவுடன், கட்சியைக் காட்டிக் கொடுத்து விட்டு தண்டனையிலிருந்து தப்பிக்குமாறு கணவனிடம் அவள் மன்றாடியிருக்கலாம். கணவன் இறந்தபின் வேறு வாழ்க்கையைத் தேடிப் போயிருக்கலாம். ஆனால், தான் பயிற்றுவிக்கப்பட்ட முறையைக் கைவிட்டு, அந்த சராசரிப் பெண் ஒரு போராளியாக மாறுகிறாள்.

ஆனால் வியத்நாம் ஆக்கிரமிப்புக்காக உலகமே காறி உமிழ்ந்த பின்னரும், தன் குற்றம் வெளிப்பட்ட பின்னரும் கெர்ரி என்ற வெறிநாய் மனிதனாக மாறவில்லை. தான் பயிற்றுவிக்கப்பட்டது அப்படித்தான் என்று கூறி பழியிலிருந்து தப்ப முயல்கிறது. பயிற்றுவித்த ஆளும் வர்க்கம் என்ன சொல்கிறது?

கெர்ரியின் கதையை ஒரு சுயவிமரிசனம் போல வெளியிட்டிருக்கும் டைம் வார ஏடு, தனது கட்டுரையின் இறுதியில் கீழ்க்கண்டவாறு எழுதுகிறது: "வியத்நாமிலிருந்து நாம் கற்றுக் கொண்ட முக்கியமான பாடம் என்னவென்றால் 'வெற்றி உறுதி என்று தெரியாமல் சண்டையில் இறங்கி அமெரிக்க உயிர்களை இழக்கக் கூடாது."

இந்தப் பாடத்தை ஈராக்கில் அமல்படுத்திவிட்டது அமெரிக்கா.

ஏகாதிபத்திய வெறியர்களும் அவர்களது ஏவல் நாய்களும் மனம் திருந்துவதுமில்லை. மாறுவதுமில்லை. •

அந்தச் சாவைக் கொடுத்த அமெரிக்க வெறி நாய்களை வெறுத்துத் தூக்கி எறியும் முழக்கங்களும் இன்றும் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறது.

அந்தக் காட்சியைப் படிக்கும் எவருக்கும் "அத்தகைய அஞ்சாநெஞ்சரின் தோழர்களில் ஒருவராக அந்தக் கம்யூனிச அணியிலே நாமும் ஒருவராக வளர மாட்டோமா?" என்ற ஏக்கம் நிச்சயம் எழும்.

•குப்பண்ணான்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | உன் அடிச்சுவட்டில் நானும்... |
| ஆசிரியர் | : | ட்ரான் தின் வான் (டிராயின் துணைவியார் குயென்னிடம் உரையாடிப் பெற்ற செய்திகளிலிருந்து நாவல் ஆக்கம்.) |
| தமிழாக்கம் | : | தா. பொன்னி வளவன் |
| வெளியிட்டோர் | : | அலைகள் வெளியீட்டகம், 25, தெற்கு சிவன் கோயில் தெரு, கோடம்பாக்கம், சென்னை - 600 024. தொ.பே: 4815474. |
| கிடைக்குமிடம் | : | கீழைக்காற்று வெளியீட்டகம், 10, அவுலியா சாகிபு சந்து, எல்லீசு சாலை, சென்னை - 600 002. தொ.பே: 8412367. |
| விலை | : | ரூ. 35/- |



படிப்பகம்

www.padippakam.com



# தங்கக் கவுச்சி

**துரை. சண்முகம்**

தங்கம் ஆபரணமா? ஆயுதமா? எனும்
சந்தேகம் தீர்ந்தபாடில்லை எனக்கு.
தகவல் தெரிந்தவர் விபரம்
சொல்லுங்கள்!

'தங்கக் கை குலுக்கல்' என
கட்டாயப் பணிஓய்வு கொடுத்து
ஒரு அரசு ஊழியரின்
பாக்கி வேலை நாட்களை
பறித்துக் கொள்வதைப் பார்க்கும் போது
- தங்கம் ஒரு ஆயுதமாய்
உறுத்தும் எனக்கு.

எந்திரங்களுக்கு எரிச்சல் வரும் வரை
இனியும் இயக்கினால்
மோட்டார் தாங்காது எனும் முடிவில்,
உஷ்ணக் காற்றை
உள்ளிழுத்துக் கொள்ளும்
ஒரு பட்டரைத் தொழிலாளியின்
அன்றைய கூலியை
'போனால் வராது
பொன்மாரி' குலுக்கல் என
பரிசுச் சீட்டுக்காரன் பறிக்கும் போது
தங்கக் கொடுமை தாங்காது

அழுத்தித் தேய்த்தால்
அடி போய்விடும் என்று
அலுமினியச் சட்டியையும்
சுரண்ட அஞ்சும் குடும்பங்களிலும்
'மாப்பிள்ளை தங்கம் போல'
பத்து பவுன் போட்டா பேசி முடிக்கலாம்
எனும் சுரண்டலின் முடிவில்
மீண்டும் அவள் வரட்டி தட்ட,
ஓலை கிழிக்க...
ஒரு பெண்ணின் இளமையின் மேல்
ஆணியடிக்கையில்
தங்கக் கொடூரம் தகதகக்கும்

கூப்பன் அரிசி செரிப்பதற்கு
வெற்றிலைப் போட்டால் தேவலை
எனும்
அப்பாவின் கனவே
ஈடேறாமல் இருக்கையில்,
ஊக்குமாட்டிய செருப்புடன்
நகரத்து மளிகைக் கடைவேலையில்
நடை பிணமான மகனிடம்
'பொன்னான வாய்ப்பு' போய் எங்காவது
இருபத்தஞ்சாயிரம் புரட்டிவா
கன்டக்டர் வேலைக்கு -
என அதிகாரி நேர்முகம் வழங்க
தன் முகம் இழப்பவனைப் பார்க்கையில்
தங்கம் கழுத்தறுக்கும்

மோதிரம் ஒன்று போடமுடியாமல்
முறிந்து போகும்
தாய்மாமன் உறவுகள்.
காதணி ஒன்று குறைந்ததற்காய்
காலவரையற்று ஒத்தி வைக்கப்படும்
மூன்று முடிச்சுகள்.

ஆயுதங்களாலேயே அலங்கரித்துக்
கொள்ளும்
உங்கள் வக்கிரப் பேரழகின்
ஊத்தைக் கனவுகளில்
ஊறி, ஊறித் தான்
தங்கம் கூட மஞ்சளானதோ!

தங்கத்தோடு
செம்பு சேர்ந்த இடமெல்லாம் நகை
தங்கத்தோடு
மனிதன் சேர்ந்த இடமெல்லாம் பகை

வேதியியல் பிணத்திற்காக
உயிரை விற்கும்
இந்த விநோதச் சந்தையில்
சேதாரக் கணக்கில் மனிதன்.

அசல் தங்கத்தின் அளவுகோல்
இருபத்தி நாலு காரட்டாம்
அப்படியானால் புரிந்து விட்டது
போலி மனிதர்களின் அடையாளம்
அசல் தங்கம்.

தங்கக் கவுச்சி தங்களுக்கும் அடிக்கிறதா?
தகவல் தெரிந்தால் விபரம்
சொல்லுங்கள்!
தங்கம் ஆபரணமா?
இல்லை ஆயுதமா?

## தீக்கொழுந்து - அறிவிப்பு

தமிழகத்தின் குறும்பட உலகில், இத்தகைய மக்கள் பிரச்சினை பற்றிய அரசியல் படங்கள் மிகவும் அரிது. ஓரளவு பெரும் செலவுடனும் சிரமத்துடனும் தயாரிக்கப்பட்டிருக்கும் இக்குறும்படம் பல விசயங்களைக் கண்டறிந்து நீலகிரி தேயிலைப் பிரச்சினையின் காரணத்தை உங்கள் முன் வலுவாக வைக்கிறது. தொழிலாளரின் வாழ்க்கையும், சிறுவிவசாயிகளின் அறியாமையும், அரசு - பன்னாட்டு நிறுவனங்களின் ஒடுக்குமுறையும், பெரிய கட்சிகளின் சந்தர்ப்பவாதமும் - காட்சியாக, கருத்தாக, வாதமாக, விபரமாக, உணர்வாக, செறிவுடனும் இக்குறும்படம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. வாங்காத நண்பர்கள் வாங்குவதும், பிறரை வாங்க வைப்பதும் நீங்கள் செய்ய வேண்டிய கடமையும் உதவியுமாகும்.

இக்குறும்படம் பற்றி பத்திரிகையாளர் ஞாநி எழுதிய விமர்சனம் அடுத்த இதழில் இடம் பெறும். அது பற்றியும், இப்பட அனுபவம் பற்றியும் புதிய கலாச்சாரம் திரை முழக்கம் குழுவின் கருத்தும் இடம்பெறும். மற்றபடி படத்தைப் பார்த்த வாசகர்கள், நண்பர்கள், தோழர்கள் தங்களின் கருத்துக்களையும் அனுப்புமாறு கோருகிறோம். எதிரிகளின் காட்சி ஊடக ரசனையில் மூழ்கி இருக்கும் மக்களை மீட்டெடுக்க இத்தகைய முயற்சியில் நீங்களும் பல்வேறு வழிகளில் உதவ வேண்டும்.

இரு பாகமாய் இரு குறுந்தகடுகளில் வெளியிடப்பட்டிருக்கும் இக்களச் சித்திரத்தை 'வி.சி.டி. - ப்ளேயரில்' பார்ப்பதில் எந்தச் சிக்கலுமில்லை. ஆனால் கணினியில் பார்க்கும் போது கீழ்க்கண்ட விசயங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும். பாகம் ஒன்று அதாவது முதல் குறுந்தகடை 'வி.சி.டி' ஃபார்மெட்டில் நுழைந்து **'ROXIO'** எனும் ஃபார்மெட்டில் பார்க்க வேண்டும். இரண்டாவது குறுந்தகடை 'எம்பெக்' பார்மெட்டில் நுழைந்து வின்டோஸ் மீடியா ப்ளேயர் மூலம் பார்க்க வேண்டும். இதைத்தாண்டி வேறு முறைகளில் முயற்சித்தால் காண இயலாது. இனி மேல் வரும் குறுந்தகடுகள் ராக்சியோ, மீடியா ப்ளேயர் என இரு முறைகளிலும் காணும் வசதியுடன் வெளியிடப்படும்.

'தீக்கொழுந்து' இரு பாகமாய் - இரு குறுந்தகடுகள்: விலை ரூ. 250, தபால் செலவு ரூ. 20. தேவைப்படுவோர் புதிய கலாச்சாரம் முகவரியுடன் தொடர்பு கொள்க. வெளிநாட்டு வாசகர்கள் மின்னஞ்சலில் தொடர்பு கொண்டால் உடன் அனுப்புகிறோம்.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3, செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.
புதிய கலாச்சாரத்தில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் சமுதாயத்தில் காணப்படும் உண்மைகளே!

படிப்பகம்

PUTHIYA KALACHARAM
(TAMIL MONTHLY)
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPERS
FOR INDIA UNDER NO. 42847/87
Regd. No. TN/Chief PMG-303 / 2001

www.padippakam.com

காலுக்கு நைக், தொண்டைக்கு கோக்
உதட்டளவில் எதற்கு நாட்டுப்பற்று?

பற்பசை, பற்பொடி,
சோப்பு, செருப்பு எதுவானாலும்
உள்நாட்டுத் தொழில்களை நசியவிட்டு
பன்னாட்டுப் பொருட்களில் மயங்கலாமா?

பன்னாட்டுப் பொருட்களைப் புறக்கணிப்போம்!
உள்நாட்டுப் பொருட்களையே பயன்படுத்துவோம்!

காட் ஒப்பந்தத்தைக் கிழித்தெறிவோம்!
அந்நிய மோகத்தைத் துடைத்தெறிவோம்!

இவண்
ம.க.இ.க. – வி.வி.மு.
பு.மா.இ.மு. – பு.ஜ.தொ.மு.




3.9.2001
தமிழகமெங்கும்

கோக் – பெப்சி போன்ற
அந்நியப் பன்னாட்டு நிறுவனங்களின்
# பொருட்கள் எரிப்புப் போராட்டம்!

படிப்பகம்